டிராஃபிக்
மற்றும் அனைத்து வாகன சட்டப்பிரச்சனைகளுக்கும்
VINOTHKUMAR
LICENSED PARALEGAL
647.667.6034
WWW.TRAFFICKUMAR.CA
TK LEGALS

28வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 28 பாலம்: 10 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 15, 2018

# ஒன்ராரியோ மாகாணத் தேர்தல்

ஒன்ராரியோ மாகாண ஆளுநர் எலிசபெத் டவ்ஸ்வெல் ஒன்ராரியோவின் 41ஆவது நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஆவணத்தில் 2018 மே 08இல் கையெழுத்து இட்டவுடன் ஒன்ராரியோ மாகாணத்திற்கான 42ஆவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் பிரசாரம் உத்தி யோகபூர்வமாக ஆரம்பித்தது. நாடாளு மன்றத்தில் ஊடகவியலாளர்கள் காகிதத் தாள்களை நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேல் அள்ளி வீசுவதுடன் 41ஆவது நாடாளுமன்ற அமர்வுகள் முடித்து வைக்கப்பட்டன. இவ்வழக்கம் 'Paper Slide' என அழைக்கப்படுகிறது.



42ஆவது ஒன்ராரியோ நாடாளுமன்றத்திற் கான தேர்தல் 2018 யூன் 07இல் நடைபெற உள்ளதால் நான்கு பிரதான கட்சிகளும் தமது தேர்தல் பிரசாரத்தை மும்முரமாக ஆரம்பித்துள்ளனர்.

தற்போதைய முதல்வரான Kathleen Wynne லிபரல் கட்சிக்குத் தலைமை தாங்கி இத் தேர்தலில் தனது பிரசாரங்களைத் தொடங் கியுள்ளார். 65 வயதான கத்தலின் இற்கு Jane Rounthwaite பாரியாரும் மூன்று வளர்ந்த பிள்ளைகளும் இருக்கின்றனர். இவர் ஒன்ராரியோ மாகாணத்தின் முதல் பெண் முதல்வர். 2013 பெப்ரவரியில் இருந்து ஒன்ராரியோ மாகாண முதல்வராக இருந்து வருகிறார். Richmond Hillஐ பிறப்பிடமாகக் கொண்ட இவர் 2003 ஆம் ஆண்டில் இருந்து ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

Kathleen தலைமையிலான

**ஒன்ராரியோ லிபரல் கட்சியின் பிரதான கொள்கைகள்:**

- 2019 ஜனவரி 01இல் இருந்து மிகக் குறைந்த அடிப்படைச் சம்பளத்தை மணித்தி யாலத்திற்கு $15ஆக உயர்த்துதல்.
- 24 வயதுக்கு உட்பட்ட எல்லோருக்கும் இலவச பரிந்துரை மருந்துகள் வழங்குதல்.
- இரண்டரை வயதில் இருந்து இளம் மழலைகள் வகுப்புவரை உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச குழந்தை பராமரிப்பு வழங்குதல்.
- ரொறன்ரோவைச் சுற்றியுள்ள பசுமைப் பிரதேசத்தின் (Greenbelt) பரப்பளவை அதிகரித்தல்.
- வயது முதிர்ந்தவர்களை வீட்டில் வைத்துப் பராமரிக்க வருடம்தோறும் $750 வழங்குதல்.
- அடுத்த மூன்று வருடங்களுக்கு $20.3 பில்லியனுக்கு மேற்பட்ட செலவினங்களை லிபரல் அரசின் திட்டங்கள் காட்டுகின்றன. சமநிலைப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் 2024 - 2025ஆம் நிதியாண்டில் சமர்ப்பிக்கப் படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.
- ஒன்ராரியோ அரசின் வருமானவரி 8.6 மில்லியன் மக்களுக்கு அதிகரிக்கப்படமாட் டாது. 1.8 மில்லியன் மக்கள் வருடாந்தம் $200ஆல் அதிகரிப்பையும் 0.7 மில்லியன் மக்கள் வருடாந்தம் $130ஆல் அதிகரிப்பையும் எதிர்பார்ப்பர்.
- நிறுவனங்களின் வரியில் எவ்வித மாற்றமும் இல்லை.

Daco Labels மற்றும் Flexible Packging நிறுவனங்களின் தலைவரான Doug Ford பழமைவாதக்கட்சிக்குத் தலைமைதாங்கி இத்தேர்தலில் தனது பிரசாரத்தைத் தொடங் கியுள்ளார். 53 வயதான Doug இற்கு Karla Ford மனைவியும் நான்கு வளர்ந்த பெண் பிள்ளைகளும் இருக்கிறனர். Etobicoke வைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ரொறன்ரோ மாநகரசபை உறுப்பினராக இருந்துள்ளார். 2014இல் ரொறன்ரோ

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

DENTAL OFFICE
இப்போது 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS(Glasg.)
DENTAL SURGEON
Wisdom Tooth Extraction.
Root Canal.
Gum Treatment.
Tooth Filling.
Dental Implant.
Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5
Markham & Eglinton
Tel: 416-264-3232
3351 Markham Road., #129
Markham & Steeles
Tel: 416-609-2022

Sothihomes
Sothi Anandakumar
CIPS
iList Globally
info@sothihomes.guru
Buy-Sell-Invest
Cell: (647) 408-1859 USA (609) 423-6907
www.sothihomes.guru - www.rentwithsothi.realtor

Custom Cabinets & Bath.
All kinds of Countertops
Royal KITCHEN
120 Whitmore Road, Unit 3&4
Vaughan, ON, L4L 5Z1
For Free Estimates Call:
Tharma Tharmalingam
905-264-0090 | 416-728-6510

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

JENA GULASINGHAM
Sales Representative
416.702.2030
jenahomelife@gmail.com
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc.


Coming Soon to MLS
Detached Home -Brampton
$888 Spent on Upgrade BR:5 WR:4
W/O Basement. Financing Available
$686,700
27 Sagewood Ave. Courtice.
Detached. BR:4 + 1 WR:3
Financing Available
255 Village Green Sq
BR:1 WR:1 M.Fee:$298 $349,000
BR:2 WR:2 M.Fee:$444 $439,000
1 Parking Included for both units
4 BIG REASONS
to Call Thas to Sell Your Home
I Have More Buyers (Over 300)
Mortgage is Guaranteed to my Buyers
(No Mortgage Broker Fee)
I Sell Homes For More Money
I Sell Homes Faster
(30 Days Guarantee)
Priced $80,000 Below Market Value
Vaughan. Detached 2-storey
BR:4+2 WR:6 Finished
Walk Out Basement
$811,000
BR: 5+2 WR: 4
Detached-Renovated Home
Kennedy/Ellesmere
Fin Basement, Sep. Entrance
$129,900
Financing Available
Residential Vacant Land in Town of
Lindsay. Almost .65 Acres. Municipal
Water/Sewer, Build Your Dream Home
EXCELLENT MORTGAGE APPROVAL NETWORK
Over 60 Tenants are in My Waiting List. Need Rental Properties
Guaranteed Rental in One Week
$989,000
Brand New Home in Scarborough
$88 Spent on Upgrade BR:4 WR:4
Financing Available
RE/MAX
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
16 Years of Business Experience
Top Negotiator!
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.soldbythas.com


COTTAGE RENTALS
Starting at $349 per day
McGill
Waterfront, 6 Bedrooms, 25 Sleeps.
Robinson
Lake access, 5 Bedrooms, 20 Sleeps.
Maritime
River access, 5 Bedrooms, 25 Sleeps.
Robin
Waterfront, 5 Bedrooms, 20 Sleeps.
Fenelon Falls
Lake access, 5 Bedrooms, 20 Sleeps.
Maritime
River access, 5 Bedrooms, 25 Sleeps.
IN KAWARTHA LAKE AREA
1 hr FROM TORONTO
* Amenities at the cottages include cutleries, utensils, beds, linens, TV, Wi-Fi, BBQ, Hot tub, Pool table, and fire pit.
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com
#1
RE/MAX
Dynasty Realty Inc. Brokerage*
Tel: 905.471.0002
8 Shadlock St. #7, Markham ON L3S 3K9
*independently owned & operated

# வீழ்ச்சிப்பாதையில் கூட்டரசாங்கம்

**- விகிர்தன் -**

தற்போதைய கூட்டரசாங்கத்தின் ஆயுள் காலம் இன்னும் ஒன்றரை வருடங்கள் தாம். இந்தக் குறுகிய காலகட்டத்தில் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பலவுள்ளன. அவற்றில் சிறிதளவினைக் கூட இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதற்கான நம்பிக்கை பொதுமக்களுக்கு அற்றுப்போயுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பின்னடைவை துலாம்பரமாக வெளிப்படுத்தியது. இந்தப் பின்னடைவை ஏற்றுக்கொள்வதாகவும், மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் பாரிய வேலைத் திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுக்க உள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் தெரிவித்திருந்தார்கள். ஆனால் இதற்கான வேலைத் திட்டம் எதுவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவில்லை.

மாறாக, மைத்திரி தரப்பினருக்கும், ரணில் தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளே இன்னமும் களையப் படாமல் தொடர்ந்து நீடித்து வருகின்றது.

அடுத்த தலைமை யார்? என்கின்ற விவாதங்களிலேயே காலம் கரைந்து கொண்டிருக்கின்றது. “2020 வரையும் ஜனாதிபதியாக இருப்பேன். அதற்குப் பின்னரும் இருப்பேன்” என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிக்கொண்டிருக்கின்றார். அடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ரணில் ஆதரவாளர்கள் கூறி வருகின்றனர்.



மைத்திரி அணியினருக்கும், ரணில் அணியினருக்குமிடையில் தீவிரமான பனிப்போர் நடைபெற்று வருகின்றது. இந்தப் பனிப் போர் முடிவிற்கு வராமல் மக்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாது. ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து செயற்படாமல் எந்தவொரு ஆக்கபூர்வமான வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்க முடியாது. ஆனால் இது இரு தரப்பிலும் உணரப்படுவதாகத் தெரியவில்லை.

கடந்த அரசாங்கத்தில் குற்றங்களைப் புரிந்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் நடவடிக்கைகள் இன்னமும் கண் துடைப்பாகவே உள்ளது. உதாரணத்திற்கு, மோசமான குற்றச்சாட்டுக்களை சுமத்தப்படுகின்ற முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஸ உடனடியாக கைது செய்யப்பட வேண்டியவர் என அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் பலரும் கூறிவருகின்றனர். ஆனால் அவரை கைது செய்ய முடியவில்லை. இதனால் நாட்டின் சட்டமும், நீதியும் கேள்விக்குள்ளாகியுள்ளது.

அடுத்ததாக நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்காக மேற்கொள்ளப் படும் உத்தேச அரசியல் யாப்பு விடயம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா? என்கின்ற சந்தேகம் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் கடமையிலிருந்து ஜனாதிபதி விலக முடியாது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது.

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட அரசியலமைப்புச் சபையின் செயற்பாடுகள் கடந்த சில நாட்களாக இடம்பெறவில்லை. தேர்தல், கட்சி மாற்றம் உள்ளிட்ட காரணிகளால் இவை நடக்கவில்லை. எனினும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய அதன் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிக்கின்றார்.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)




# நாமும் நமது இல்லமும் - 511

## சொந்த வீடு Vs வாடகை வீடு

ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



பொதுவான மக்களின் ஆசைகளில் ஒன்றாக சொந்த வீட்டை கொள்ளலாம். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து குடிபெயர்ந்தவர்களுக்கு இது ஒரு மிகப் பெரிய கனவு. கனவு வசப்படுமா? சொந்தமாக வீடு கொள்வனவு செய்வது கானல் நீராகவே மாறிவிடுமா? இன்றைய காலகட்டத்தில் மக்கள் மனதில் இயற்கையாகவே ஏற்பட்டுள்ள பீதியாகக் கொள்ளலாம்.

கனடாவில் குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாகம் மற்றும் பெரிய கோல்டன்சூ பெரும்பாகத்தில் (Greater Golden Shoe Area) ஆதனத்தின் விலை அதிகமான விலையில் அதிகரித்து வருவதனை எனது அனுபவத்தில் கண்டுள்ளேன். ஏறக்குறைய 30 வருடங்களாக ஆதனம் சம்பந்தமான விடயத்தை அவதானித்து வருவதில் இருந்து இதனை கூறக்கூடியதாக உள்ளது. அடமானக்கடன் வட்டிவீதம், ஆதன வியாபாரத்தின் எண்ணிக்கை, ஆதனத்தின் விலை இவையே ஆதன வியாபாரத்தை தீர்மானம் செய்து வந்தது. கடந்த ஐந்து வருடங்களிற்கு மேலாக இந்நிலைமை வேறு திசையில் பாதை எடுப்பது போலத் தோன்றுகின்றது.

இதற்கு சில காரணங்களை முன்வைக்கலாம். கடந்த 5 வருடங்களாக கனடாவிற்கு புதிய வரவாளர்களின் வருகை 300,000 என்ற பெறுமதியை விட அதிகமாகக் காணப்படுகின்றது. மேலும் ஆசிய நாடுகளிலிருந்து அதிகமான மாணவர்கள் இங்கு கல்வி கற்பதற்காக படை எடுக்கின்றார்கள். வசதி படைத்த பலர் பணத்தை கனடாவில் பாதுகாப்பாக வைப்பதற்காக கண்டுபிடித்த நடைமுறை ஆதனத்தில் முதலீடு செய்வது.



பல நாடுகளில் இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டு இருக்கும் அரசியல் நெருக்கடி கனடாவை பாதுகாப்பான, அரசியல் ஸ்திரமான நாடாக உலக நாட்டு மக்களை கருத வைத்துள்ளது.

குறிப்பாக அண்மைக்காலத்தில் அமெரிக்க நாட்டில் ஏற்பட்ட அரசியல் தலைமையின் மாற்றம், அங்குள்ள பலரிற்கு ஒரு பயம் கலந்த இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஒவ்வொருநாளும் கனடாவை நோக்கி 2000 இற்கு மேற்பட்ட மக்கள் அண்மையில் கனடாவிற்குள் வந்துள்ளார்கள். இந்நிலையில் கனடிய ஆதன நிலை மாற்றத்தைக் கண்டுள்ளது. வன்கூவரில் முதலில் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக இப்பொழுது ரொறன்ரோ பெரும்பாகத்தில் ஏற்படுகின்றது.

ஆரம்பத்தில் ஆதனத்தில் அதீத விலை அதிகரிப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து வாடகை அதிகரிப்பு ஏற்பட்டது. இதனால் மக்களின் வருவாயில் பெரும்பகுதி வாடகைக்கு அல்லது சொந்தவீட்டை பராமரிப்பதற்கு செல்கின்றது. குறிப்பாக கடந்த இரு ஆண்டுகளாக இந்நிலைமை கட்டுக்கடங்காமல் செல்வதனைக் காணலாம். இதனால் பேராசை வீட்டு உரிமையாளர்கள் வாடகையை கண்டபடி அதிகரித்தார்கள் . இதற்கு இப்பொழுது முடிவு ஏற்பட்டுள்ளது.

CMHCஇன் தகவலின்படி 18%ஆன கனடியர்கள் தமது வருமானத்தின் 50%ஐ வாடகைக்கு செலுத்துகின்றார்கள். அண்மையில் ரொறன்ரோவின் மத்திய பகுதியில் 1 அறை கொண்ட அடுக்குமாடி மனைகளில் வாடகை $1800 மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளது. இதற்கு மேலாக மின்சாரம், வெப்பம், குளிருக்குரிய செலவுகள் கொடுக்க வேண்டும். தனி வீடு, இரு வீடுகள், பல வீடுகள் சேர்ந்தவையின் விலை அதிகரிப்பு மக்களை அடுக்குமாடி மனையை நோக்கி நகர்த்தியுள்ளது. இதனால் அடுக்குமாடி மனையின் சராசரி விலை ரொறன்ரோ பெரும்பாகத்தில் சதுரஅடி $1000ஐவிட அதிகமாகவும், ரொறன்ரோவிற்கு வெளிப்பகுதியில் $600 இற்கு மேலாகவும் அதிகரித்துள்ளது. வாகனத்துக்குரிய செலவு மேலதிகம். ஒன்ராரியோவில் 45.7%ஆன மக்கள் தமது வாடகையை கொடுப்பனவு செய்வதில் மிகவும் கஷ்டப்படுவதாக தெரியவருகின்றது. மேலும் 2011-2016 காலப்பகுதியில் வாடகை 21% இனால் அதிகரித்துள்ளது. ஆனால் வருட வருமானம் 13% இனால் மட்டுமே அதிகரித்துள்ளது.

மே 01, 2018இலிருந்து ஒன்ராரியோ மாகாணம் முழுவதும் ஒரேவிதமான வாடகைப் பத்திரம் நடைமுறைக்கு வந்துள்ளது. ஏற்கனவே வாடகைக்கு கொடுத்திருந்த வாடகை பத்திரங்களில் மாற்றம் செய்யத் தேவையில்லை.

அடமானக்கடன் பெறுவதில் மேலும் இறுக்கமான நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. 2011இலிருந்து 2016 வரையான காலத்தில் 753,000 புதிய குடும்பங்கள் கனடாவில்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000
Everyone Who Funds A Mortgage With US Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232




**- ஆதித்தன் -**

# கண்ணீரில் அரசியல் வேண்டாம்!

வன்னியில் இடம்பெற்ற மூர்க்கமான இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் நிகழ்வுகள் மே மாதத்தில் தமிழர் தாயகத்திலும், தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் அனுஷ்டிக்கப்படுகின்றது. அவ்வகையில், இவ்வருடத்திலும் எதிர்வரும் 18ம் திகதி இந்நினைவுகூரல் இடம்பெறுகின்றது.

ஆண்டு தோறும் கடைப்பிடிக்கப்படும் மாவீரர் நாள் நிகழ்விற்கு அடுத்ததாக மே-18 படுகொலை நினைவு நாள் உணர்வு பூர்வமாக தமிழ் மக்களால் நினைவுகூரப் பட்டு வருகின்றது. இந்நிலையில், வட மாகாணசபையில் முள்ளிவாய்க்கால் நினைவு நாளான மே 18ஆம் திகதியை தமிழ் இன அழிப்பு தினமாகவும், தமிழ் தேசிய இனத்தின் துக்க நாளாகவும் பிரகடனம் செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் உறுப்பினரும், அமைச்சருமான அனந்தி சசிதரன் இந்தப் பிரேரணையினை முன்மொழிந்தார். இதனை சபையில் சகல உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். இதன் பிரகாரம், மே 18ஆம் நாளை இனஅழிப்பு நாளாகவும், தமிழ்தேசிய இனத்தின் துக்க நாளாகவும் பிரகடனம் செய்வதாக தீர்மானம் எடுக்கப்படுவதாக அவைத்தலைவர் சீ.வி. கே.சிவஞானம் அறிவித்தார். அத்துடன், இந்நாளை அனுஷ்டிக்கும் ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக குழுவொன்று அமைக்கப்படுவதாகவும் வட மாகாணசபையில் தெரிவிக்கப்பட்டது. வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில் 'மே-18' நாளை யாருடைய தலைமையில் நடத்துவது என்பது குறித்து விவாதங்களும் தற்போது இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தாங்களே முன்னின்று இந்நாளை நடத்தப்போவதாக அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நினைவுகூரலுக்கு சில தினங்களே உள்ள நிலையில் ஏற்பட்டுள்ள இந்த முரண்பாடு மக்கள் மத்தியில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இது குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

“தமிழினப் படுகொலை நாளான மே-18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை வட மாகாண சபை ஒழுங்குமுறையில் மேற்கொண்டுவரும் போது, இடையில் வந்து, நாங்கள் செய்யப் போகிறோம், நீங்கள் எல்லோரும் எங்களுடன் வாருங்கள் என யாழ். பல்கலைகழக மாணவர்கள் தெரிவித்திருப்பது சரியானதல்ல. ஏன் இவர்கள் இவ்வாறு செயற்படுகிறார்கள் எனத் தெரியவில்லை.



பல்கலைக்கழக மாணவர்கள், இந்நினைவு நாளை நாங்கள் முன்னின்று நடத்தப் போகின்றோம், அதற்கு உங்கள் ஒத்துழைப்பை தாருங்கள் என முன்னரே எங்களிடம் கேட்டிருந்தால் நாங்கள் அது தொடர்பாக ஏனைய மாகாண சபை உறுப்பினர்களோடும் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கலாம். அதே நேரம் வடக்கு மாகாணசபை மூன்றாண்டுகளாக இதனை ஒழுங்காக செய்துவரும் நிலையில் நீங்கள் எல்லோரும் எங்களுடன் வாருங்கள் என அவர்கள் கூறியிருப்பது வருத்தமளிக்கிறது.

இந்நிகழ்வை யாரேனும் செய்யாதிருந்து, அதனை இவர்கள் பொறுப்பேற்று செய்திருந்தாலும் அதனை நாம் வரவேற்றிருக்கலாம். ஆனால், இப்போது அவர்கள் ஏன் இதனை இப்படி செய்கின்றார்கள் என்பது எனக்கு தெரியாது. அவர்களுடைய இந்நடவடிக்கை எனக்கு மன வருத்தை தருகின்றது” என்று அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்காலில் இடம் பெறும் இந்த நாளின் பிரதான நிகழ்வு கடந்த வருடங்களில் வட மாகாண சபையின் ஏற்பாட்டிலேயே நடைபெற்றுள்ள நிலையில் இந்த வருடம் இவ்வாறானதொரு விவாதம் ஏன் இடம்பெறுகின்றது என்பது ஆராயப்பட வேண்டியதே. பல்கலைக்கழக மாணவர்களின் இந்த நடவடிக்கைக்கு பின்னால் சில அரசியல் கட்சிகள் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள், துயரங்களுக்கு தீர்வினைத் தேட முன்னுரிமை கொடுத்து செயற்படுவதை விடவும், இவ்வாறான துயர நாட்களை நினைவுகூர்வது தொடர்பில் நானா? நீயா? எனப் போட்டியிடுகின்றமைக்குப் பின்னால் நிச்சயமாக அரசியல் உள்ளது என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

இவ்வேளையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பாதீர்கள் என முன்னாள் போராளியும், விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினராக இருந்தவருமான பஷீர் காக்கா என்றழைக்கப்படும் மு. மனோகர் தமிழ் அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இவ் வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

“இழப்பைச் சந்தித்த மக்கள் ஒரே உணர்வுடன் மட்டுமே உள்ளனர். இதனைச் சம்பந்தப்பட்ட அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். சம்பந்தப்பட்டவர்களுடன் சந்தித்து இது குறித்துக் கலந்துரையாடவுள்ளோம். எங்களுக்குரிய காலக் கடமையை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும், நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை உருவாக்கினார்கள். ஆணைக்குழுவினூடாகச் சொல்லப்படும் கருத்துக்களை எந்தளவிற்கு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை.

ஆனால், நாங்கள் பூஸாவிற்குள்ளிருக்கும் போது எங்களுக்கான கடமையைச் செய்ய வேண்டுமென எண்ணினோம். எங்களுக்குச் சரியென்று பட்டதை எழுதிக்கொடுத்தோம். அதனால் எங்களுக்கு எந்தப் பயனுமில்லை. அதில் பல்வேறு விடயங்களை குறிப்பிட்டபோதும், முக்கியமாக அன்றைய காலகட்டத்தில் துயிலும் இல்லங்களில் கால்பதிக்க முடியாது. எனினும், எனது மகள் புதைக்கப்பட்ட இடத்தில் நின்று அழும் உரிமை வேண்டுமென நான் குறிப்பிட்டேன். என்னுடைய மகள் மட்டும் அங்கு புதைக்கப்படவில்லை.

இன்று ஏதோவொருவிதத்தில் துயிலுமில்லங்களுக்கு செல்லக்கூடியதாக உள்ளது. எங்கள் பிள்ளைகளுக்காக மட்டுமல்லாமல் நாங்கள் இன்றைய நிலைமைக்காகவும் சேர்த்து அழ வேண்டும். எங்களை நிம்மதியாக அழ விடுங்கள்” என்று அவர் கூறியுள்ளார்.

மாவீரர் நாள், முள்ளிவாய்க்கால் நாள் என வருகின்றபோது, மக்களின் உணர்வுகள் எல்லாம் ஒன்றாகவே உள்ளது. தங்களின் தொலைந்த உறவுகளுக்காக ஒன்று கூடி அழ வேண்டும். அதற்கு தடைவிதிக்கக் கூடாது என்பதே அது. வாழ்வில் மறக்கவியலாத துயரங்களை சற்று இறக்கி வைக்கின்ற நாட்களாகவும், தங்கள் சோகங்களை கண்ணீரால் கரைக்க முயலும் நாட்களாகவும் இவை அமைகின்றன.

கடந்த அரசாங்கத்தின்போது இவ்வாறான நினைவுகூரும் நிகழ்வுகளுக்கு தடைவிதிக்கப்பட்டது மட்டுமல்லாமல் படைத்தரப்பினால் மிகுந்த அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன. இன்று அந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அன்று 'தடைகளை மீறிச் செல்வோம்' எனக் கூறிக்கொண்டு தங்கள் 'வீர சாகசத்தை' வெளிப்படுத்தும் விதமாக சில தமிழ் அரசி

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 25



குரு அரவிந்தன்

## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.

கனடாவில் நகோடா இனத்தைச் சேர்ந்த நான்கு பிரிவினரையும் உள்ளடக்கிய சுமார் 3500 மக்கள் மோழி, பிக்ஹோன், ஏடன்வலி போன்ற றிசேவ் பகுதிகளில் வாழ்கிறார்கள். ஸ்ரோனி இன்டியன் றிசேவ் என்று இப்பகுதியை அழைக்கிறார்கள். றொக்கிமலை றிசேவ் பகுதியில் வாழும் இவர்களுக்காக அரசு சில வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது. நாங்கள் அங்கே சென்ற போது சமூக முன்னேற்றத்திற்குத் தேவையான முக்கியமாகக் கல்வி-யோடு சம்பந்தப்பட்ட சில இடங்களை இனம்காண முடிந்தது. அரசின் ஆதரவுடன் இயங்கும் நகோடா கனிஸ்ட பாடசாலை, நகோடா கல்லூரி, மோழி சமூகக் கல்விச்சாலை, ஸ்ரோனி கல்விச்சபை ஆகியன இந்த றிசேவ் பகுதியில் அமைந்திருக்கின்றன. இந்த சமூக மக்கள் இவற்றை இலகுவாகப் பாவிக்கக்கூடியதாக இவை எல்லாம் அருகருகே "போ" ஆற்றங்கரை ஓரமாக இருக்கின்றன. கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் அவர்கள் முன்னேற வேண்டும் என்பதனால் ஹொக்கி விளையாட்டுத் திடலும், விளையாட்டு மைதானங்களும் இதற்கு அருகே இருக்கின்றன. அரசு ஏற்படுத்திக் கொடுக்கும் இத்தகைய வசதிகள் முதற்குடி மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்க்கைக்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. கல்வி கற்பதில் கவனம் செலுத்துவது மட்டுமல்ல, கிடைத்திருக்கும் இந்த வசதிகளையும், வாய்ப்புக்களையும் அலட்சியம் செய்யாமல் இவர்கள் ஏற்றுக் கொண்டால் இவர்களின் எதிர்காலம் சுபீட்சமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்படியான செயற்பாடுகள் மூலம்தான் கனடிய முதற்குடி மக்களின் சமுதாய அமைப்பில் முன்னேற்றங்களை விரைவாகக் கொண்டுவர முடியும்.

இந்த றிசேவ் பகுதியில் வாழும் ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு தலைவர் இருக்கின்றார். இனங்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளை இவர்களே தீர்த்து வைக்கிறார்கள். சில சமயங்களில் அவர்களின் கட்டுப்பாட்டையும் மீறி வேண்டாத சில நிகழ்வுகளும் இப்பகுதியில் நடப்பதுண்டு. தற்போது தங்கள் மொழி அழிந்து விடக்கூடாது என்பதில் இவர்கள் அதிக கவனம் செலுத்தத் தொடங்கி இருக்கின்றார்கள். இவர்களுடைய நாகோடா மொழி பேச்சு மொழியாகவே இதுவரை காலமும் இருந்து வந்தது. ஓரளவு கல்வி அறிவு பெற்ற சிலர் தங்கள் தாய் மொழி பேச்சு மொழியாக மட்டும் இருந்தால் போதாது, எழுத்து நடையும் வேண்டும் என்பதைத் தற்போது உணர்ந்து, தங்கள் மொழியை எழுத்து நடையிலும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள். பேச்சு மொழி போலவே எழுத்தும் உச்சரிக்கப்பட வேண்டும் என்று இதை நடைமுறைப்படுத்துபவர்கள் எதிர்பார்க்கிறார்கள். குறிப்பிட்ட ஓர் எழுத்து குறிப்பிட்ட ஒரு ஒலியைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும்



கவனத்தில் கொண்டு எழுத்து மொழி அமைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள். ஆங்கில எழுத்துகளில் உள்ள சில ஒலி இவர்களது மொழியில் இல்லை, அதேபோல இவர்களது மொழியில் உள்ள சில ஒலிகள் ஆங்கில எழுத்துகளில் இல்லை. தமிழில் எப்படி 'ழ' போன்ற சில எழுத்துகளுக்கு ஆங்கிலத்தில் ஒலி உள்ள எழுத்து இல்லையோ, அல்லது 'Bush', 'Bus' என்ற ஆங்கில சொல்லுக்குச் சரியான தமிழ் எழுத்தில் ஒலி இல்லையோ அப்படித்தான் இவர்களின் நாகோடா மொழியும் இருக்கின்றது. றொக்கி மவுண்டின் நகோடா இணையத் தளத்தில் பரீட்சார்த்த முதல் முயற்சியாகத் தங்கள் எழுத்து மொழியை அறிமுகம் செய்ய இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கல்வியில் அதிக கவனம் செலுத்தாததால், முதற்குடி மக்களின் சிறு குழுக்கள் பேசிய மொழிகள் இப்போது அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன. முதற்குடி மக்களின் சில பாவனை அற்ற மொழிகள் ஏற்கனவே மெல்ல மெல்ல அழிந்து விட்டன. ஆங்கில மொழி அறிமுகமானதால் தங்கள் தாய் மொழியைப் பேசியவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது என்பதை முதற்குடி மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கி இருக்கிறார்கள். தங்கள் பாரம்பரிய மொழியை மறந்து விடுவோமோ என்ற பயம் முதற்குடி மக்களுக்கு இப்போது ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அந்தப் பயமே அந்த மொழியைத் தக்க வைத்துவிடும் என்பதை உணரமுடிகின்றது. செம்மொழியாம் தமிழ் மொழி ஒருபக்கம் ஓரம்கட்டப்பட, தங்கள் தாய் மொழியை நினைத்துக் கவலைப்படும், அது பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்பும் அவர்களை நினைத்துப் பெருமைப்பட முடிகின்றது.

இதே நிலைதான் ஈழத்தமிழர்களுக்கும் கனடிய மண்ணில் ஏற்பட்டிருக்கின்றது. கடந்த நாற்பது வருடங்களாகக் கட்டிக் காத்து வந்த தமிழ் மொழியின் வளர்ச்சி இந்த மண்ணில் திடீரெனக் குறைந்து கொண்டே செல்வதைப் பகுதி நேர தமிழ் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் என்ற முறையில் என்னால் உணர முடிகின்றது. அரசு எல்லா வசதிகளைச் செய்து கொடுத்திருந்தும் அதை அலட்சியப்படுத்தும் சில தமிழ் பெற்றோர்கள் தாய் மொழியின் அவசியத்தைப் புரிந்து கொண்டால்தான் எங்கள் மொழியை இந்த மண்ணில் தக்க வைத்திருக்க முடியும். தமிழ் மொழியின் பாவனை குறைந்து கொண்டு செல்வதற்கு ஆங்கிலம் மட்டுமல்ல, இங்கே பிரெஞ்சு மொழியும் ஒரு காரணமாயிருக்கின்றது. சமீபத்தில் எமது பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியின் போது மொன்றியலில் உள்ள தமிழ் மாணவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கான வினாத்தாளை மொழி மாற்றித் தரும்படி கேட்டிருந்தனர். தமிழ் மொழியில் தரும்படி கேட்பார்கள் என்று பார்த்தால் அவர்கள் பிரெஞ்சு மொழியில் கேட்டார்கள். தமிழ் பிள்ளைகள் ஆங்கிலத்தில் பதில் எழுதலாம் என்றால் ஏன் பிரஞ்சு மொழியில் தங்கள் தமிழ் பிள்ளைகள் எழுத முடியாது என்று அவர்கள் அதிர்ச்சி தரும் கேள்வி ஒன்றை எழுப்பினார்கள். பெற்றோர்களின் இந்தப் போட்டி மனப்பான்மையால் அழியப் போவது தமிழ் மொழிதான் அல்லாமல் வேறு ஒன்றுமில்லை. எங்கள் மொழியின் அழிவிற்குச் சில தமிழ் பெற்றோர்களின் அலட்சியப் போக்கு மட்டுமல்ல, அத்துடன் சேர்ந்து ஆங்கில மொழியும், பிரெஞ்சு மொழியும் கூட மறைமுகமாகக் காரணமாகின்றன. பெற்றோருடைய போட்டி மனப்பான்மையால் அழியப் போவது தமிழாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இங்குள்ள தமிழர் தங்கள் தாய் மொழியில் அதிக கவனம் செலுத்தாவிட்டால் விரைவில் எங்கள் மொழிக்கும் முதற்குடி மக்களின் பாவனை இழந்த சில மொழிகளுக்கு ஏற்பட்ட நிலை ஏற்படலாம்.

முக்கியமாக நான் அவதானித்த ஒரு




விடயத்தை மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது முதல் 10 வருடங்களில் தமிழ் மாணவ, மாணவிகளில் அனேகமானவர்கள் நன்றாகத் தமிழில் கதைக்க, வாசிக்க, எழுதத் தெரிந்தவர்களாக இருந்தனர். அடுத்த 10 வருடங்களில் அனேகமாகவர்கள் தமிழில் எழுதுவதைக் கைவிட்டு விட்டார்கள். அவர்களால் கதைக்கவும் வாசிக்கவும் மட்டுமே முடிந்தது. அடுத்த 10 வருடங்களில் அனேகமான தமிழ் மாணவர்கள் தமிழில் வாசிப்பதையும் விட்டு விட்டு பேசுவதை மட்டும் தங்களுடன் வைத்திருந்தார்கள். இதன் பின்னணியில் பல காரணங்கள் இருக்கின்றன. சரியான பாதையில் செல்வதை எங்கே தவறவிட்டோம் என்பதை அறிந்து கொண்டு அதற்கேற்ப எங்களைத் திருத்திக் கொண்டால்தான், எங்கள் தமிழ் மொழியை இந்த மண்ணில் தக்கவைக்க முடியும். மொழி அழிந்தால் நம் இனமும் அழிந்து விடும் என்பதை நாங்கள் எப்போதும் நினைவில் கொண்டு செயற்படுவதே சிறப்பானது.

ஆனாலும் இந்த மண்ணில் எங்கள் மொழி அழியாமல் நிலைத்து நிற்பதற்குச் சிறந்ததொரு வழி இருக்கின்றது. அதை நடைமுறைப்படுத்தினால் நிச்சயமாக எங்கள் மொழியை இந்த மண்ணில் அழிந்து போகாமல் தொடர்ந்தும் தக்க வைக்க முடியும். காலம் இன்னும் கடந்து விடவில்லை, ஆனால் யாருமே இங்கு இலவச ஆலோசனைகளைக் காதுகொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை என்பதும் எனக்குத் தெரியும். வெள்ளம் வந்தபின் அணைகட்ட நினைப்பதைவிட தமிழ் மொழி மீது பற்றுக் கொண்டவர்கள் முதலில் இந்த மண்ணில் எங்கள் மொழியை எப்படித் தக்க வைக்கலாம் என்று சிந்திப்பது நல்லது.

Build Your Career in Mortgage Lending! Join My Office
MORTGAGE ALLIANCE
MORTGAGE FINANCING SOLUTIONS AVAILABLE FROM MULTIPLE LENDERS
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704
Direct: 647-922-5704
www. OKmortgages.ca
Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4. Tel:1-877-366-3487. Lic# 10530



# திமுகவும் அதிமுகவும் தான் இப்போது தமிழக அரசியலை தீர்மானிக்கும் சக்திகள்!

## திருமாவளவன் நேர்காணல்

**சந்திப்பு: கண்ணன்**

தலித் இயக்கங்கள் ஒன்றிணைந்து சென்னையில் சென்ற மாதம் நடத்திய மாபெரும் பேரணி தமிழக அரசியலில் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது. சென்னை அண்ணா சாலையை நீல வண்ணத்தால் நிறைத்த அந்த பேரணி, தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தலித் அரசியல் முக்கியத்துவம் பெற்றிருப்பதையே உணர்த்துகிறது. பேரணியை முன்னின்று நடத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனை சந்தித்தோம்.

**தலித் இயக்கங்களை ஒன்றிணைத்து நடத்திய அந்தப் பேரணி மாபெரும் வெற்றிபெற்றபோது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

இந்தியா முழுவதும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதை எதிர்த்து வடஇந்திய மாநிலங்களில் பெரிய எழுச்சியை உண்டாக்கினார்கள். ஆனால், தென் மாநிலங்களில் எதுவும் செய்யாததுபோல் இருந்தது. அந்தக் குறையை போக்கும் விதமாக இந்தப் பேரணி இருந்ததில் மனநிறைவு. ஆனால், இது என்னுடைய தலைமையில் நடத்தப்பட்ட பேரணி அல்ல. நான் முன்னின்று நடத்தினேன், அவ்வளவுதான். இதற்காக, தலித் இயக்கங்களுக்கு அழைப்பு விடுத்தோம். மிகவும் குறுகியகால அழைப்புதான். காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தல், ஐபிஎல் எதிர்ப்பு உட்பட பல்வேறு மக்கள் நலப் போராட்டங்களில் கலந்து கொண்டே இதையும் செய்து முடித்தேன். ஆனாலும், ஐந்துக்கு மேற்பட்ட அமைப்புகள் கலந்துகொண்டார்கள். இன்னும் கால அவகாசம் எடுத்துக் கொண்டு முறையாக அறிவித்து செய்திருந்தால் கலந்து கொள்ளாத இயக்கங்களையும் திரட்டியிருக்க முடியும்.

**ஆனால், தமிழகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு அடுத்த பெரிய தலித் கட்சியான ‘புதிய தமிழகம் கட்சி’ கலந்து கொள்ளவில்லையே?**



ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் பாஜகவும் அகில இந்திய அளவில் தலித் அமைப்புகளை உள்வாங்கி வருகிறார்கள். சாதிக்கொடுமை காரணமாக தலித்துகள் இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்துவ மதங்களுக்கு வேகமாக மாறி வருகின்றனர். இந்த மதமாற்றத்தைத் தடுக்கவே தலித் அமைப்புகளை பாஜக உள்வாங்குகிறது. ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் அமைப்புகள் பத்து வருடங்களாக இதனை ஒரு செயல்திட்டமாகவே வைத்துள்ளார்கள். தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பதோ, அவர்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதோ இவர்களின் நோக்கம். இந்த நயவஞ்சக முயற்சியில் தமிழகத்தில் ‘புதிய தமிழகம்’ கிருஷ்ணசாமிபோல் இந்தியா முழுக்க பல கிருஷ்ணசாமிகளை உருவாக்குகிறார்கள். ஒரு காலத்தில் தீவிர இடதுசாரி அரசியலை பேசிய கிருஷ்ணசாமி, இன்று அதிதீவிர வலதுசாரி அரசியலை பேசுகிறார். எனவே, கிருஷ்ணசாமிக்கு நாங்கள் அழைப்பு விடுக்கவில்லை. அப்படி ஒரு சிந்தனையும் எங்களுக்கு எழவில்லை.

**வன்கொடுமை தடுப்பு சட்டம் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றுள்ள பாமக நிறுவனர் ராமதாஸ், “இந்த தீர்ப்பால் தேசியளவில் 77 சதவீதமும் மாநில அளவில் 81 சதவீத மக்களும் நன்மை அடைவார்கள்” என்று கூறியிருக்கிறாரே?**

இந்தியாவிலேயே இதனை எதிர்த்து அறிக்கைவிட்ட ஒரே அரசியல் தலைவர் ராமதாஸ் தான். எந்த அரசியல் கட்சித் தலைவரும் மனசாட்சிக்கு விரோதமாக பேசவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வன்கொடுமைக்கு உள்ளாகும் ஒரு சமூகத்திற்கு ஒரு குறைந்தபட்ச பாதுகாப்பு கொடுக்கும் சட்டத்தையே செயல்படுத்தக்கூடாது என்ற வன்மம்தான் ராமதாஸிடம் வெளிப்படுகிறது. ராமதாஸ் மட்டுமே ராமதாஸ் போல் சிந்திக்கிறார்.

**சென்னை பேரணி போல இந்திய அளவில் தலித் கட்சிகளை ஒன்றிணைக்க முடியுமா?**

ஒன்றிணைவது சமூக ரீதியிலா அல்லது அரசியல் ரீதியிலா என்பது அடிப்படையில் முக்கியமான கேள்வி. சமூக ரீதியில் ஒன்றிணைவது சந்தோஷமானதுதான். ஆனால், அனைத்தும் அரசியல் இயக்கங்களாக இருப்பதால் அது கடினம். ஒவ்வொருவருக்கும் தனி நோக்கம், அரசியல் இருக்கிறது. எனவே, தேவை வரும்போது பார்க்கலாம்.

**நீங்கள் அரசியலுக்கு வந்து 25 வருடங்கள் ஆகிவிட்டது. ஆனால், இன்னும் விசிகவில் இரண்டாம் கட்டத் தலைவர்களை உருவாக்கவில்லையே?**

தலைவர்கள் யாரும் திட்டமிட்டு உருவாக்கப்படுவதில்லை, வளர்க்கப்படுவதில்லை. அது காலத்தின் தேவையைப் பொறுத்து தான் உருவாகும். குடும்ப வாரிசை நியமிப்பதுபோல் தலைவர்கள் கட்சிக்கு வாரிசை நியமிக்க முடியாது. இரண்டாம் நிலைத் தலைவர்கள் தேவை வரும்போது வெளிப்படுவார்கள்.

**விசிக பொதுப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மைய நீரோட்ட அரசியலிலேயே இருப்பதால் தலித் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவது குறைந்துள்ளது என்னும் விமர்சனம் சமூக வலைதளங்களில் எழுந்துள்ளதே?**

தமிழகத்தில் தலித் அரசியல் என்றாலே தனிமைப்படுத்தப்பட்ட ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. ஆனால், தலித்துகளின் அரசியலே மைய நீரோட்டத்துடன் இணைவது தான். எனவே, மைய நீரோட்ட அரசியல் தான் தலித்துகளுக்கான இன்றைய மிக முக்கியத் தேவை என்று நான் கருதுகிறேன். நானும் சாமி கும்பிடுவேன், எனக்கும் கோவிலில் நுழைய அனுமதி உண்டு, எனக்கும் கல்வி அதிகாரம் வேண்டும் என்பதும் மைய நீரோட்ட அரசியல்தான். காவிரி, தமிழர் உரிமை, முல்லைப் பெரியாறு அணையை உயர்த்துவது என அனைத்து பொதுப் பிரச்சினைக்கு போராடுவது தலித்துகளுக்கு அந்நியப்பட்ட பிரச்சினை அல்ல. ஆனால், ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களில் தலித் அல்லாதவர்கள் பங்கேற்பதில்லை. ஏனென்றால், சாதிய ஒடுக்கு முறையை நிகழ்த்துபவர்களாக அவர்களே இருப்பதால், ஒடுக்கு முறையை எதிர்ப்பதில்லை. அவர்கள்தான் அந்நியப்பட்டு நிற்கிறார்களே தவிர, தலித்துகள் ஒரு போதும் அந்நியப்பட்டு நிற்பதில்லை.

**தமிழகத்தில் காங்கிரஸ் ஆண்டபோது மிக முக்கியமான உள்துறை அமைச்சர் பதவி கக்கனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் வந்த திராவிட கட்சிகளின் ஆட்சிகளில் அதுபோல் முக்கியமான துறைகள் தலித்துகளுக்கு ஒதுக்கப்படவில்லை. இது தொடர்பாக திராவிட இயக்கங்கள் மீது தலித்துகள் விமர்சனங்களை வைக்கத் தொடங்கியுள்ளார்கள். இதற்கு உங்கள் பதில்?**

காங்கிரஸ் இந்திய அளவில் தலித்துகளை பெரும்பான்மையாக உள்வாங்கியிருக்கும் கட்சி. அதன் வாக்கு வங்கி பெரும்பான்மையாக தலித்துகளை மையப்படுத்தியே உள்ளது. அந்தக் காரணத்தால் தலித்துகளை மிகப்பெரிய பொறுப்புகளில் வைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது. காங்கிரஸ் கட்சி தலித்துகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மற்றக் கட்சிகளில் கொடுப்பதாக சொல்ல முடியாது தான். ஆனால், திமுகவில் ஆ.ராசாவுக்கு முக்கியமான துறைதான் கொடுத்திருந்தார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். தலித்துகளை முக்கியத்துவப்படுத்தும் சூழலும் காலமும் திமுகவில் தற்போது கனிந்திருக்கிறது. இன்னும்கூட அது வளர்ச்சி பெறலாம். கட்சியின் கட்டமைப்பையும் கட்சியில் இடம்பெறகூடிய முன்னணி தலைவர்களின் அரசியல் புரிதலையும் பொறுத்து தான் பதவி கொடுப்பார்கள். கல்வி, வேலைவாய்ப்பில் இத்தனை சதவீதம் இடஒதுக்கீடு வேண்டுமென்று கேட்பதுபோல் இந்த அமைச்சர் பதவிதான் வேண்டும் என்று கேட்க முடியாது.

**காங்கிரஸ் தலித்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்றால், தமிழகத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியையோ அல்லது உங்கள் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணியையோ கட்டமைக்கலாமே?**

அதற்கான தேவை இருந்தால் காங்கிரஸ் கட்சியே அப்படியொரு அணியை கட்டமைக்க முயன்றிருக்கும். அந்த தேவை இல்லாததால்தான் அமைதி காக்கிறது. தமிழக

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)


பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்திய மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: தாரணி இந்திரராஜ், பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com


விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# வாய்வுத் தொல்லை காரணமும், தீர்வும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்


ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)



C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm


அவசர, அவசர உணவை விழுங்குதல், சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே குளிர் பானங்களாலும், தண்ணீராலும் வயிற்றுக்குள் உணவைத் திணித்தல், வயிற்றுக்கு ஓய்வு கொடுக்காமல் விரும்பிய பொருட்களை மேலும், மேலும் சாப்பிடுதல்.

குளிர்பானங்களை அருந்துவதால் வாய்வுத் தொல்லை அகன்று விடும் என்பது பலருடைய எண்ணம். காரியம் (கார்பனேற்) அடங்கிய இது போன்ற பானங்களால் ஏப்பம் வரும் என்பதோடு சரி, வயிற்றினுள் காரியம் தங்கி விடுவதை வாய்வுத் தொல்லையால் அவதியுறும் அன்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாம் உட்கொள்ளும் உணவு செரியாமல் நெடுநேரம் குடலில் தங்கி விடுவதால் பாக்ரீயாக்கள் உற்பத்தியாகி புளிப்பை உண்டாக்குகிறது. சரியாக வேக வைக்கப்படாத உணவு, மாவுப் பொருட்கள் (குறிப்பாக மைதா) மிகை உணவு போன்றவை வாய்வுத் தொல்லையின் ஒரு சிலகாரணங்கள் எனலாம். சிலருக்கு கார்போஹைட்ரேற்) காரணமாக வயிறு மந்தம், ஏப்பம், வயிற்றுப் பொருமல் என ஏற்படுவதுண்டு. நமது குடல் மாவுப் பொருட்களை சகித்துக் கொள்ளாததே இதற்குக் காரணம்.

நார்கள் அடங்கிய காய்கறிகள் மற்றும் பழங்கள் மலச்சிக்கலுக்கு உகந்தவை. ஆனால் நார்கள் அடங்கிய பச்சைக் காய்கள், முட்டைக்கோஸ் போன்றவை வாய்வு உண்டாக்கக் கூடியன. கிழங்கு வகைகள், பருப்பு வகைகள் குறிப்பாக கடலைப் பருப்பினால் செய்யப்படும் தின்பண்டங்கள், புளித்த தயிர், அப்பிள், பச்சை வாழை, பட்டாணி, மசாலா பொடிகள், எண்ணெயில் பொரிதெடுத்த மீன் வறுவல், மாமிச வறுவல், ஊறுகாய், எலுமிச்சை, தக்காளி ஆகியன வாய்வுத் தொல்லையை அதிகரிக்கச் செய்யும் தன்மை கொண்டவை.

என்னிடம் யோகம் பயில வருகின்ற அனைவருக்கும் நான் இப்படிச் சொல்வதுண்டு. 'ஐந்தாறு வெள்ளைப்பூண்டுப்பற்களை தட்டி தண்ணீரில் கொதிக்க விடுங்கள். சிறிது ஆறியதும் வெந்த பூண்டினை மென்று விழுங்கி தண்ணீரைக் குடித்து விடுங்கள். எப்போதும் குளிர்ந்த நீருக்குப் பதிலாக வெதுவெதுப்பான நீர் அருந்துங்கள். வாய்வுத் தொல்லையால் துன்புறுவோர் ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். வயிறை எப்போதும் காலியாக வைத்துக் கொள்ளவே கூடாது. மேலும் உண்ணா நோன்பு இருப்பதும் இவர்களை பாதிக்கவே செய்யும். இந்நோயாளிகள் குறித்த காலத்தில் சாப்பிடும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.



பால் அல்லது பாலினால் செய்த பொருட்களை இவர்கள் தொடக்கூடாது. நெஞ்சில் எரிச்சல் உண்டாவதும் வாயுத் தொல்லையின் அறிகுறிகளில் ஒன்று. நெஞ்சு எரிச்சல் இதய நோயின் காரணமாகவும் இருக்கலாம். எனவே நெஞ்சு எரிச்சலின்போது மருத்துவரின் ஆலோசனையை நாட வேண்டியது நோயாளியின் தலையாய கடமை. எனக்கு ஒன்றுமில்லை. வெறும் இரப்பைப் பிரச்சினை (gastric problem) தான் என்று இருப்பது துன்பத்தை விலை கொடுத்து வாங்கியது போலாகும்.

சிற்றுண்டியோ, உணவோ சாப்பிட்டவுடன் அல்லது குளிர்பானங்கள் அருந்தியவுடன் அடி வயிற்றில் வலி காணும். காற்று வெளியேறியவுடன் அல்லது மலம் கழித்தவுடன் வயிறு இலேசாகியதைப் போன்ற உணர்வு உண்டாகும். சில சமயங்களில் பசியே இருக்காது. பதற்றம், வெறுப்புணர்ச்சி, வியர்வை, இலேசான தலைவலி, இதயத் துடிப்பிலும், இரத்த அழுத்தத்திலும் மாறுதல் போன்றவை நோயின் அறிகுறிகளாகக் கொள்ள வேண்டும்.

இரைப்பை, குடல் பகுதிகளில் உண்டாகும் வாயுக்களில் 99%, நைட்ரஜன், ஒட்சிசன், காபனீர்ஒட்சைற், ஹைட்ரஜன், மீத்தேன் ஆகியவற்றின் கலவையே ஆகும். நரம்புத் தளர்ச்சி, உணவுடன் காற்றை விழுங்குதல் போன்ற சந்தர்ப்பங்களில் ஏப்பம் உண்டாகிறது. குடலில் உணவு செரிக்காதபோது செல்லுலோஸ் போன்றவற்றின் மூலமாக பாக்ரீரியாக்கள் வாயுவை உண்டாக்கி ஆசனவாய் வழியாக வெளியேறுகிறது. குடலில் போதுமான அலையியக்க அசைவு இல்லாத போது வாயு குடலில் தங்கி வலியை ஏற்படுத்துவதுண்டு.

### வாயு பற்றி மேலும் சில

“சில சமயம் காஸ் மூலமாக உண்மையிலேயே சில பிரச்சினைகள் வருவதுமுண்டு” என்கிறார். அப்பலோ மருத்துவமனை இரப்பைக் குடலியல் (Gastroenterology) துறையின் தலைவராக இருக்கும் மருத்துவர் எஸ். கிருட்டிணன்.

சிறுகுடலும், பெருங்குடலும் ரயில் பெட்டிகள் மாதிரி அமைப்புக் கொண்டவை. இரைப்பையிலிருந்து சிறு குடலுக்கு வரும் உணவு ஒரு பெட்டியிலிருந்து அடுத்த பெட்டிக்கு பற்பசையின் ரியூப்மாதிரி தானாகவே சுருங்கி அழுத்தம் கொடுத்து உணவை அடுத்தடுத்த கட்டங்களுக்குத் தள்ளும். அப்போது உணவை உள்வாங்கிக் கொள்ளும் பகுதியும் தானாகவே இலேசாக விரியும். உள்வாங்க வேண்டிய பகுதியானது விரியாதபோது, இரண்டு பகுதிக்கும் இடையே ஒரு வீக்கம் உண்டாகிவிடும். வீக்கம் உண்டான பகுதியில் வாயு புகுந்து விடுவதை ஆங்கிலத்தில் 'Motility Disturbance' அசையும் தன்மையுடைய தொந்தரவு என்கிறார்கள். இந்தச் சிக்கலால் உணவுப் பாதை தடைப்பட்டு மலச்சிக்கலும் உண்டாகும்.

நமது உடலில் சர்க்கரை, யூரியா, இரத்த அழுத்தம், கொழுப்பு போன்றவை.இன்ன அளவில் இருக்க வேண்டுமென உடலியல் 'மருத்துவம்' அறுதியிட்டுள்ளது. ஆனால் உணவுப் பாதையில் இன்ன அளவுதான் 'வாயு' இருக்கலாம் என்பதை மருத்துவ நிபுணர்களால் வரையறை செய்ய முடியவில்லை.

வேறு என்னென்ன சிக்கல்களை இந்த வாயுத் தொல்லை உண்டாக்கும்? நண்பர்களோடு இருக்கும்போது மலையைப் புரட்டியது போல் கடாமுடா சத்தம் வரும். இது ஒருவகையான குற்ற உணர்வை நம்மில் உண்டாக்கி விடும் என்பதை சொல்லவும் வேண்டுமா என்ன? ஆசனவாய் வழியாக வாய்வு வெளியேறுவது தவறு இல்லை. பலவிதமான நாற்றங்களோடு வருவதுதான் தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறது.


ஜூன் 7, 2018,
தேர்தல் நாள் ஆகும்.

வாக்களிப்பு நிலையங்கள் திறந்திருக்கும் நேரங்கள்:
9:00 A.M. - 9:00 P.M. ET / 8:00 A.M. - 8:00 P.M. CT

இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு, நீங்கள் கட்டாயமாக:
- ஜூன் 7, 2018 அன்று, 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருக்கவேண்டும், அத்துடன்
- ஒரு கனேடியப் பிரஜையாக இருக்கவேண்டும், அத்துடன்
- ஒன்ராறியோவில் வசிக்கும் ஒருவராக இருக்கவேண்டும்.

உங்களுடைய வாக்களிப்பு நிலையத்தைக் கண்டறிவதற்கு, elections.on.caக்கு வருகைதாருங்கள், உங்களுடைய வாக்காளர் தகவல் அட்டையைச் சரிபாருங்கள் அல்லது 1.888.668.8683 (செவிப்புலனற்றோர்: 1.888.292.2312) என்ற இலக்கத்தில் எங்களை அழையுங்கள்.

வாக்களிப்பு நிலையங்கள் அனைத்திலும் உருப்பெருக்கும் கண்ணாடிகள், பிரெயில் வாக்கு மாதிரிகள் மற்றும் நீங்கள் வாக்களிப்பதற்கு உதவிசெய்யும் ஏனைய உபகரணங்கள் காணப்படும்.

வாக்களிப்பதற்காக நீங்கள் வரும்போது, உங்களுடைய ID மற்றும் வாக்காளர் தகவல் அட்டையைக் கொண்டுவருவதற்கு மறக்க வேண்டாம்.

Elections Ontario

மேலதிகத் தகவல்களுக்கு elections.on.caஐப் பார்வையிடுங்கள் அல்லது info@elections.on.caஇல் எங்களுக்கு மின்னஞ்சலிடுங்கள் அல்லது 1.888.668.8683 (செவிப்புலனற்றோர்: 1.888.292.2312) என்ற இலக்கத்தை அழையுங்கள்.
Available in English





TBC Toronto Business College
கணக்கியலில் கல்வியின் ஓர் முதன்மை நிறுவனம்
படிக்க கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள் கைநிறைய சம்பாதியுங்கள்



PSW
New batch
Starts June 11th

SECOND CAREER
Candidates Welcome

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Accredited by the NACC
Work as Support Worker, Care Giver, Personal Attendant, Etc.
Immediate Job Opportunities

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Accredited by the NACC
Work as Childcare Assistant, Childcare Worker Etc.
Immediate Job Opportunities

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma
Work as Account Payable, Accounts Receivable, Book Keeper Etc.
Many Jobs are available

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma
Work as Account Payable, Accounts Receivable, Book Keeper Etc.
Jobs available in plenty

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma
Work as Food Preparer, Kitchen Helper, Food Service Counter Attendant

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefit பெற்றவர்கள் அரசாங்க நன்கொடையாக $28000 or more பெறலாம் திருப்பி செலுத்தத் தேவையில்லை
● Certain conditions may apply

● 100% Instructor Led Training ● Small Class Sizes
● Student Friendly Environment ● Ample Free Parking
● Placement Assistance ● TTC Accessible

☎ 416-291-5155 / 416-500-5300 ☎
4465 Sheppard Ave. East #208
(Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# ஒன்ராரியோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மாநகரசபைத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டவர்.

**Doug தலைமையிலான ஒன்ராரியோ பழமைவாதக்கட்சியின் பிரதான கொள்கைகள்:**



• மிகக் குறைந்த அடிப்படைச் சம்பளத்தை மணித்தியாலத்திற்கு $14ஆகத் தொடர்ந்து வைத்திருந்து வருடம் தோறும் 25 சதத்தால் அதிகரித்து நான்கு வருடங்களில் மணித்தியாலத்திற்கு $15ஐ அடைதல்.

• மணித்தியாலத்துக்கு அடிப்படைச் சம்பளத்தை ஊதியமாகப் பெறுபவர்களுக்கு மாகாண வருமானவரி விலக்கு அளித்தல்.

• காபன் வெளியீடுகளை கட்டுப்படுத்துதலும் விற்பனை செய்தலுக்குமான (Cap and trade) திட்டத்தை இரத்துச் செய்தல்.

• பாலியல் கல்வித்திட்டத்தை மீள் பரிசீலனை செய்தல்.

• வருடாந்தம் $6 மில்லியன் வருமானம் பெறும் Hydro One நிறுவன அதிபர் பதவியை இல்லாமல் செய்தல்.

• வரவு செலவுத்திட்டத்தில் ஒன்ராரியோ மாகாண அரசின் செயற்திறனை மட்டும் அதிகரிப்பதன்மூலம் எந்த ஒரு அரச சேவை பணியாளர்களையும் வேலை நீக்கம் செய்யாமல் $6 பில்லியனைச் சேமிக்கலாம் எனப் பழமைவாதக்கட்சியின் திட்டம் கூறுகிறது. இதன்மூலம் மிகவிரைவில் ஒன்ராரியோ அரசின் சமநிலைப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தைப் பழமைவாதக்கட்சி சமர்ப்பிக்கும்.

• $28,000இற்குக் குறைவான வருமானம் உள்ளவர்கள் மாகாண வருமான வரி கட்டத் தேவையில்லை. ஏனையோரின் மாகாண வருமானவரி குறைக்கப்படும். அவர்களின் வருடாந்த சேமிப்பாக $786வரை இருக்கும். குழந்தைப் பராமரிப்புக்கான செலவில் $6,750 வரையில் மீளளிக்கப்படும்.

• நிறுவனங்களின் வரி 11.5%இல் இருந்து 10.5%ஆகக் குறைக்கப்படும்.

தொழிலாளர் அமைப்பாளரும் சமூகப் பணியாளருமான Andrea Horwath புதிய ஜனநாயகக் கட்சிக்குத் தலைமை தாங்கி இத்தேர்தலில் தனது பிரசாரத்தைத் தொடங்கியுள்ளார். 53 வயதான ஒற்றைத் தாயான Andreaஇற்கு ஒரு வளர்ந்த மகன் இருக்கிறார். Hamiltonஐப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் Hamilton நகரசபை உறுப்பினராக மூன்று தடவை இருந்தவர். 2004ஆம் ஆண்டில் இருந்து ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். 2009இல் இருந்து ஒன்ராரியோ புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக உள்ளார்.

**Andrea தலைமையிலான ஒன்ராரியோ புதிய ஜனநாயகக் கட்சியின் பிரதான கொள்கைகள்:**

• குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இலவசக் குழந்தைப்பராமரிப்பு வழங்குதல். மற்றவர்களுக்கு குழந்தைப் பராமரிப்பிற்கு ஒரு நாளைக்கு $12 அறவிடல்.

• மருத்துவவசதிக்கான காலதாமதத்தை இல்லாமல் செய்ய $19.0 பில்லியனை முதலிட்டு நோயாளர்களுக்கான தங்குமிட வசதிகளை அதிகரித்தல். (More nursing home beds)

• எல்லோருக்கும் இலவச பரிந்துரை மருந்துகளை (வழமையாகப் பரிந்துரைக்கப்படும் 125 வகை மருந்துகள்) வழங்குவதற்காக வருடம் தோறும் $475 மில்லியனை முதலிடுதல்.

• பல் மருத்துவச் சேவைக்கான காப்புறுதி இல்லாத பணியாளர்களுக்கு (ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்பவர்கள் அல்லது பகுதி நேரப்பணியாட்கள்) இலவச பல் மருத்துவ வசதி வழங்குதல்.

• தனியார் மயமாக்கப்பட்ட Hydro Oneஇன் பங்குகளை மீண்டும் வாங்கி Hydro Oneஐ ஒரு முழு அரசநிறுவனமாகத் திரும்பவும் மாற்றுதல்.

• அடுத்த ஐந்து வருடங்களுக்கு $18.0 பில்லியன் செலவினங்களை புதிய ஜனநாயகக் கட்சியின் திட்டங்கள் காட்டுகின்றன. சமநிலைப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் எப்போது சமர்ப்பிக்கப்படும் என அவர்களது திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

• $220,000 வருட வருமானம் உள்ளவர்களுக்கு ஒன்ராரியோ வருமானவரி 1% ஆலும், $300,000இற்கு மேல் வருட வருமானம் உள்ளவர்களுக்கு 2% ஆலும் அதிகரிக்கப்படும்.

• நிறுவனங்களின் வரி 11.5%இல் இருந்து 13.0% ஆக அதிகரிக்கப்படும்.

தொழில் முனைவரும் சிறுவணிக உரிமையாளருமான Mike Schreiner பசுமைக் கட்சிக்குத் தலைமைதாங்கி இத்தேர்தலில் தனது பிரசாரங்களைத் தொடங்கியுள்ளார். 48 வயதான Mikeஇற்கு Sandra Welsh மனைவியும் இரண்டு பதின்ம வயது பெண் பிள்ளைகளும் இருக்கிறனர். அமெரிக்காவின் Kansasஇல் WaKeeneyஐ பிறப்பிடமாகக் கொண்ட இவர் 2007ஆம் ஆண்டில் கனேடியக் குடியுரிமை பெற்றார். 2009ஆம் ஆண்டில் இருந்து ஒன்ராரியோ பசுமைக் கட்சியின் தலைவராக உள்ளார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

# காப்புறுதி கேள்வி பதில்கள்?


சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999




**'காப்புறுதியில்லாத வாகனம்' ஒன்றோடு மோதி விபத்து நடந் தால் நட்டஈடு வழங்குதல் எப்படி முன் எடுக்கப்படுகின்றது?**

**காப்புறுதியில்லாத வாகனத்துடன் விபத்தினை எதிர்கொண்ட நிலையை இருவகைக்குள் கருத்தில் கொள்ளலாம்.**

**1. காப்புறுதியில்லாத வாகனம் விபத்துக்குள்ளான நிலை!**

• இந்த நிலையினை எதிர்கொண்டவர்களு க்கு அவர்களது வாகனத்தின் பாதிப்புக்கு, தவறு என்பது எவையுமில்லாமல் இருந்தா லும் எதுவிதமான நட்டஈடும் பெறமுடியாது.

• காப்புறுதியில்லாது வாகனம் செலுத்தி யதற்குரிய சட்டரீதியான தண்டனைகளை எதிர்கொள்வதில் இருந்து தப்பவும் முடியாது.

• தவறுக்குரிய மற்ற வாகனச்சாரதி மீது பாரிய நட்டஈடு கோரி எதுவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது.

• ஆனால் விபத்தில் ஏற்பட்ட உடல் காயத்திற்கு மட்டும் மாகாண அரச நிதியம் (Motor Vehicle Accident Claim Fund) ஒன்றிலிருந்து சில நிபந்தனைகளுடன் ஒரு குறிப்பிட்ட தொகைவரை நட்டஈடு கோர- லாம். அது வட்டியில்லாது பகுதி பகுதியாக திருப்பிக் கொடுக்கும் ஒரு கடன் மாதிரியே கருதப்படும்.

**2. காப்புறுதியில்லாத ஒரு வாகனத் துடன் நடந்த விபத்தின் நிலை.**

சட்டரீதியாக வைத்திருக்க வேண்டிய அடிப் படை வாகனக் காப்புறுதி திட்டத்தில், காப்பு றுதியில்லாத வாகனத்துடன் விபத்து நடந் தால், ஒருவரின் வாகனத்திற்கு நேரடியாக அவர்களின் காப்புறுதிக் கம்பனியிலிருந்தே நட்டஈடு பெறும் பிரிவு உள்ளடக்கப்பட்டு ள்ளது. (UnInsured Coverage) அதற்கும் சேர்த்தே ஒவ்வொருவரும் மாதக்கட்டுப்பணம் செலுத்துகின்றோம். ஆனால் இங்கும் சில நிபந்தனைகள் உண்டு.

• விபத்தில் உங்கள் பக்கம் தவறு என்பது (Not at Fault) இருக்க கூடாது.

• காப்புறுதியில்லாது உங்கள் வாகனத் துடன் விபத்துக்குள்ளான மற்ற வாகனத்தின் அடையாளம், நட்டஈடு கோரலின்போது உங்கள் காப்புறுதி கம்பனிக்கு வழங்க வேண்டும். (இதன் காரணமாகவே விபத்தில் மற்றவர் தப்பி ஓட முன்பு வாகனத் தகட்டின் இலக்கத்தினை குறித்துக் கொள்ளுங்கள் என அறிவுரை வழங்குவது வழமையாகும்) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளுக்கும் உட்பட்ட நிலையாக இருந்தால், எதுவித- மான விலை உயர்வு என்ற பாதிப்புகளு மின்றி தங்கள் வாகனத்தின் பாதிப்புக்கு ஒரு குறித்த தொகை வரை நட்டஈடு கிடைக்கும். உங்களுக்கு நட்டஈடு வழங்கிய பின்பு காப்பு றுதியில்லாது, வாகனம் செலுத்தி விபத் தினை உருவாக்கிய மற்ற வாகனச்சாரதி மீது உங்கள் கம்பனி சட்டரீதியாக அறவிட முயலும்.

# கனடிய தகவல் தொடர் 290

**சட்டரீதியாக வைத்திருக்க வேண் டிய வாகனக் காப்புறுதிப் பிரிவு கள் தவிர விரும்பினால் சற்று அதிக பணம் செலுத்தி மேலதி கமாக வைத்திருக்கும் காப்புறுதி பிரிவுகள் எவை?**

அனேகமானோர் புதிய வாகனங்களுக்கு பணச்செலவினைப் பற்றிக் கருதாது மேல திக பின்வரும் காப்புறுதி பிரிவுகளை பெற்று வைத்திருப்பார்கள்.

(வாகனத்தின் பெறுமதி $1000-$3000 என் றால் சட்டரீதியாக வைத்திருக்க வேண்டிய காப்புறுதி பிரிவு மட்டுமே போதும் என்ற மனப்பான்மையே பலருக்கும் இருக்கும்)

**மேலதிக பிரிவுகள் பின்வருவன:**

• மோதல் பிரிவு (Collision & Upset) - விபத்து ஒன்றில் ஒருவரின் தவறினால் அவரின் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் அத்துடன் மரங்கள், சுவர்களில் மோதி ஏற் பட்ட பாதிப்புகள், பனிக்கட்டிகளில் சறுக்கி பள்ளங்களில் விழுந்த பாதிப்புகள் ஆகிய வற்றுக்கு நட்டஈடு வழங்குவதனை இங்கு குறிப்பிடலாம். அனேகமாக இப்பிரிவில் ஒரு வருக்கான கொடுப்பனவு என ஒரு தொகை (Deductible) இருக்கும். இப்பிரிவிலிருந்து நட்டஈடு கோரும்போது விலை உயர்வு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

விசாலமான நட்டஈட்டுப் பிரிவு (Comprehensive Coverage) - மோதல் பிரிவில் பெறமுடியாத பாதிப்புகள், இழப்புகளுக்கு இப்பிரிவிலிருந்து நட்டஈடு பெறலாம். உதார ணமாக வாகனம் திருட்டுப் போதல், தீயில் அழிதல், கண்ணாடிகளை நிறுத்திய இடத் தில் எவரோ ஒருவர் நொறுக்கிய பாதிப்புக் களை குறிப்பிடலாம். இவற்றில் சில விசேட குறிப்பிடப்பட்ட ஆபத்துக்கள் (Specified Perils), சகல ஆபத்துகள் (All Perils) என குறிப்பிடப்படும் பிரிவுகள் உண்டு.

இப்பிரிவுகளிலிருந்து நட்டஈட்டினை பெறும் போதும் தொடர்ந்து விலை உயர்வு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும். இன்னொரு முக்கியமான விடயம் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

பின்வரும் மூன்று வகையான வழிகளில் வாகனங்களுக்கு பாதிப்புகள் வரும்போது ஒருவரின் கொடுப்பனவு (Deductible) என்பது எந்த சந்தர்ப்பங்களிலும் கருத்தில் எடுப்பதில்லை.

அவையாவன:

1. தீயினால் பாதிப்பு (Fire)
2. திருட்டு போதல் (Theft)
3. மின்னல்களின் பாதிப்பு (Lightining)

**வலிமையான 'சாரதி அனுமதி**

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.


Nimal Subramaniam

Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life

•Life Insurance •Critical Illness Insurance •Disability Insurance •Mortgage Insurance •RRSP •RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# உலக சுதந்திரதினம் வெகு தொலைவில் இல்லை



சத்குரு வாசுதேவ்

சில நூற்றாண்டுகளுக்கு முன், பிரிட்டிஷார், "கிழக்கிந்திய கம்பெனி" என்ற பெயரில் வர்த்தகத்திற்காக இந்தியாவில் காலடி வைத்தபோது, நமது தேசம் செழுமையான கலாச்சார பின்னணியும், இசை, கலை, விஞ்ஞானம், கோள்களின் ஆய்வு, இலக்கியம், தியானம், ஆன்மீகம் என பலகூறுகளின் இணைப்பாக இயங்கி வந்தது.

இதையெல்லாம் பார்த்த பிரிட்டிஷார், "ஓ, இந்த பூமி வளங்கள் நிறைந்துள்ளது. இந்த நாட்டை வெல்பவர்கள் நெடுங்காலம் செல்வ செழிப்பில் திளைக்க முடியும்" என யோசிக்க ஆரம்பித்தனர்.

இந்தியா அப்போது செல்வத்தில் மட்டும் செழிப்புடன் இருக்கவில்லை. கல்வி, கலாச்சாரம் போன்ற பல வகைகளிலும் செழிப்புடன் இருந்தது. ஆனால் பிரிட்டிஷாரின் பேராசை இந்த மண்ணை நாசம் செய்தது. இந்த நாட்டில் இருந்த கல்வியின் தரம் உலகின் பல பகுதிகளில் இருந்ததை விட மிகவும் சிறந்திருந்தது. கற்றவர்களின் சதவீதமும் மற்ற நாடுகளை விட அதிகமாக இருந்தது. 200 ஆண்டுகளுக்கு முன்பு, உலகளவில், உள்நாட்டு உற்பத்தித்திறனில் இந்தியாவே முதலிடம் வகித்தது. மேலும் மக்கள் அதிக வசதிகளுடன் வாழ்ந்து வந்தனர். ஆனால் பிரிட்டிஷாரின் பேராசையால் இந்த நாடு 200 ஆண்டுகளுக்குள் மிகவும் ஏழை நாடாக மாறிவிட்டது.

நாம் சுதந்திரம் அடைந்த முறை

இத்தகைய சூழலில் 70 ஆண்டுகளுக்கு முன் நாம் சுதந்திரம் அடைந்தோம். நமது சுதந்திரப் போராட்டம் மிகவும் தனித்தன்மையானது. வேறு எந்த நாடும், அதுவும் அரக்க பலத்துடன் கூடிய எதிரியிடமிருந்து, நாம் பெற்ற முறையில் சுதந்திரம் பெற்றதாக வரலாறு இல்லை. நமது போராட்டம், தாக்குதலை தாங்கிக் கொண்டு ஆனால், திருப்பித் தாக்காமல், அவர்களுடைய கொடூரத்தையும், உங்கள் வழி சரியானதல்ல என்பதையும் அவர்களுக்கே உணர்த்துவது. இது எளிதாக நடக்கக் கூடியதல்ல. இந்த முறையில் விடுதலை பெறுவதென்பது மிகவும் கடினமான ஒன்று.



அப்போது கூட நாம் 50 லட்சம் பேர் இருந்தோம். முறையாகத் திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தியிருந்தால் அவர்களை ஒரே நாளில் விரட்டியிருக்க முடியும். ஆனால் நாம் ஒரு கடினமான மாற்று பாதையை தேர்ந்தெடுத்தோம். ஏனெனில் மனிதாபிமானமற்ற முறையில் அது எவ்வளவு பெரிய உயர்ந்த விடயமாயிருந்தாலும் நாம் அதை அடைய விரும்பவில்லை. அரக்கத்தனமாக, வன்முறை மூலம் எதையும் பெற நாம் விரும்புவதில்லை. எனவேதான் அகிம்சையைத் தேர்ந்தெடுத்தோம். நமது கலாச்சாரத்தின் சாரமே இதுதான். நாம் கடைப்பிடித்த இந்தமுறை இப்போது முழு உலகத்திற்குமே உதாரணமாக இருக்கிறது.

மனிதன் சுதந்திரம் அடையும் வேளை நெருங்கிவிட்டது.

தேசம் விடுதலை அடைந்து 70 ஆண்டுகள் ஆகிறது. இப்போது மனிதன் சுதந்திரம் அடைவதற்கான நேரம் வந்து விட்டது. நாடு விடுதலை அடைந்து விட்டாலும் மக்கள் இன்னமும் விடுதலை அடையவில்லை. இத்தகைய சுதந்திரம் வீண்.

எதை செய்ய விரும்புகிறோமோ அதை செய்துகொள்ளும் உரிமையே சுதந்திரம் என்ற எண்ணம் அனைவருக்கும் உள்ளது. நீங்கள் விரும்பியதையெல்லாம் செயல்படுத்த ஆரம்பித்தால் ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருப்பீர்கள். சுதந்திரம் என்பது சூழ்நிலைக்கு என்ன தேவையோ அதை மகிழ்வுடன் செயல்படுத்துவது. இன்றைக்கு இது தேவையா, அதை மகிழ்வுடன் செய்தல், நாளை இன்னொன்று தேவையா, அதையும் மகிழ்வுடன் செய்தல். வேறு நாளில் வேறொன்று தேவையா அதையும் மகிழ்வுடன் செய்தல். இதுதான் உண்மையான சுதந்திரம். சூழ்நிலைக்கு எது தேவையோ அதை செய்வது, எனக்கு என்ன விருப் பமோ அதை செய்வது அல்ல.

ஒவ்வொருவரும் அவரவர் விருப்பப்படி வாழ ஆரம்பித்தால், பிறகு ஏதோ ஒரு நாளில் நாம் அனைவரும் சேர்ந்து வாழ்வது என்பது கூட முடியாமல் போய் விடும்.

சுதந்திரம் என்பது பொறுப்புணர்வோடு செயல்படுவதற்காக உங்களுக்கு கொடுக்கப்படும் உரிமை. ஆனால் வெறும் சுதந்திரத்தை பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டு செயல்பட்டால் இறுதியில் பொறுப்பற்ற செயல்களையே செய்வீர்கள். ஆனால் பொறுப்புணர்வோடு செயல்படும் போது, சுதந்திரத்தின் நன்மை முழுமையாக கிடைக்கும். மனிதன் எல்லைக்கோடுகளால் ஆளப்பட வேண்டியவன் அல்ல.

உலக சுதந்திர தினம்

சிலரை உங்கள் எல்லையை விட்டு அப்புறப்படுத்துவதாலேயே உங்களுக்கு சுதந்திரம் கிடைத்துவிடாது. தனித்தனி நாடு என்ற தேவையிலிருந்தே நாம் அனைவரும் விடுபடும் போதுதான் நமக்கு உண்மையான சுதந்திரம்கிடைக்கும். ஒவ்வொருவரும் இது எனது நாடு என்று தனித்தனி அடையாளத்துடன் இருக்கும்போது, கடுமையான உணர்வுடனேயே இருப்பர். தற்போது மனிதர்கள் தொழில்நுட்பம், அதிகாரம் போன்றவைகளோடு இருக்கும் போது, இந்த அடையாளம் அழிவையே தரும். எனவே ஒவ்வொருவரும் மனிதகுலம் என்ற அடிப் படையில் மட்டுமே தங்களை அடையாளம் காண வேண்டும். இதுதான் உண்மையான சுதந்திரம்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

மனிதன் தனது எல்லைகள், கோடுகள், பிற பேதங்கள் போன்றவற்றிலிருந்து விடுதலை அடையும்போது, அவரவர் நாடு என்னும் வேறுபாட்டிலிருந்து வெளிவரும் போது, உண்மையிலேயே அது ஒரு மகத்தான விடுதலை நாளாக, உலக சுதந்திர தினமாக இருக்கும். இனி வரக் கூடிய 25 அல்லது 50 வருடங்களில் நாம் உலக சுதந்திர தினத்தை கொண்டாட வேண்டும்.


இது ஒன்றும் வெற்று கனவோ அல்லது சாத்தியப்படாத சிந்தனையோ அல்ல. இப்போது என்ன நடைமுறையோ அதை அளவுகோலாக வைத்தே எதையும் சிந்திக்கிறோம். ஒவ்வொருவரின் இதயத்திலும் துடிப்பது என்ன என்பதை மனிதர்கள் இன்னமும் புரிந்து கொள்ள வில்லை. எல்லைகளைக் கடந்துபோக வேண்டும் என்னும் மனிதனின் துடிப்பை யாரும் கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை. அனைவருக்குள்ளும் உள்ள அந்த துடிப்பை முறைப்படுத்தினால் உலக சுதந்திர தினம் கொண்டாடக் கூடிய நாள் வெகு தொலைவில் இருக்காது.





TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# உயர் குருதியமுத்தம்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

## High Blood Pressure

இன்றைய சமூக அமைப்பில் உயர் குருதியமுத்தம் சாதாரண ஓர் உடலியல் பிரச்சினையாகியுள்ளது. முன்பொரு காலத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த உலகம் இன்று வெகுவாக மாறியுள்ளது. பரபரப்பும் வேகமும் நிறைந்த இன்றைய மனித வாழ்வில் சாதாரண ஒரு சம்பவம் போல் உயர் குருதியமுத்தம் ஏற்பட்டுள்ளது. அதுவும் இரண்டுபேர் சந்தித்தால் BP எப்படி என்று கேட்கும் அளவுக்கு எல்லோருக்கும் குருதியமுத்தம் ஒரு நோயாக மாறியுள்ளது. இரத்தம் அல்லது குருதி, எமது இரத்த நாடிகளில் ஏற்படுத்தும் மிகையான அழுத்தமே குருதியமுத்தமாகும். ஆங்கிலத்தில் இதனை Hypertension (HTN ORHT) என்பர். இவ்வாறான குருதியமுத்தம் ஒருவருக்கு வந்துவிட்டதென்றால் நீண்டகாலத்தில் இரத்தநாடி நோய், பக்கவாதம், இதய செய-லிழப்பு, பார்வை இழப்பு, சிறுநீரக நோய், மூளை செயலிழப்பு, அதீத நாடித்துடிப்பு போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஒருவருடைய குருதியமுத்தத்தை அவருடைய மேற்புயத்தில் அளவிடப்படும் அழுத்தத்தை கொண்டு முடிவு செய்யப்படலாம். இதயத்திலிருந்து இரத்தத்தை எடுத்துச் செல்லும் மேற்புயத்தின் மிகப்பெரிய இரத்தக் குழலானது புயத் தமனியில் இருக்கும் இரத்த அழுத்தத்தை முழங்கைகளில் அளக்கப்படும். நாடியமுத்தமானி என்பது தமனி சார்ந்த அழுத்தத்தை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். தமனி என்பது குருதிக்குழாய் (Artery) ஆகும். நாடியமுத்தமானியை Sphygmomanometer எனலாம். சுற்றோட்ட அழுத்தத்தை கண்டறிவதற்கு நாடியமுத்தமானியில் உள்ள பாதரசம் (Mercury) செங்குத்து வரிசையின் உயரம் பயன்படுத்தப்படுகிறது.



எந்த ஒரு வைத்தியரிடம் சென்றாலும் முதலில் ஒருவரின் குருதியமுத்தமே அளவிடப்படும். அதன்போது அங்குள்ள கருவியில் இரண்டு அளவீடுகள் காணப்படும். ஒவ்வொரு இதயத்துடிப்பிற்கும் இதய சுருக்கியக்கம் (Systolk), இதய விரிவியக்கம் (diastolic) என்பன அளக்கப்படலாம். இதய சுருக்கியக்கம் என்பது தமனிகளின் அதிகமான அழுத்தமாகும். இதயக் கீழறைகள் சுருங்கும்போது இதய சுற்று முடிவடைவதற்குள் ஏற்படுவதே இதய சுருக்கியக்கமாகும். ஆனால் இதய விரிவியக்க அழுத்தம் என்பது தமனிகளின் மிகக் குறைவான அழுத்தமாகும். இது இதயக் கீழறைகள் (ventricles) இரத்தத்தினால் நிரப்பப்பட்டிருக்கும்போது இதய இயக்கச் சுற்று ஆரம்பிப்பதற்கு அருகில் ஏற்படும். மேற்குறிப்பிட்ட இரண்டு வகையான அளவுகளும் நிலையாக இருப்பதில்லை. அடிக்கடி மாறுபடும். இதனால் சில தடவை இந்த அளவுகளை எடுக்க நேரிடும். நாள்முழுவதும் மாறிக்கொண்டேயிருக்கும். உடற்கடிகாரம் (Circadian Clock) மன உளைச்சல், ஊட்டக்காரணிகள், மருந்துகள், நோய்கள், உடற்பயிற்சிகள் என்பனவற்றை பொறுத்து மாறுபடலாம். இப்படியான அளவீடுகளில் ஏற்படும் கடுமையான விளைவுகளே உயர் குருதியமுத்தமாகும்.

ஒருவருடைய குருதியமுத்த அளவினை mmhg என்ற குறியீடு மூலமே அறிய முடியும். இதய சுருக்கியக்கம் >90 என காணப்படின் அது தாழமுத்தம் (Low Pressure) ஆகும். 90-119 இருப்பின் சாதாரண நிலையாகும். 120-139 காணப்படின் குருதியமுத்த ஆரம்பநிலையாகும். 140-159 காணப்படின் நிலை 1 உயர் குருதியமுத்தம் ஆகும். 160க்கு மேற்படின் நிலை 2 உயர் இரத்த அழுத்தமாகும். இதற்கு துணையாக இதய விரிவியக்கமும் கணிக்கப்படும். - 60 எனில் தாழமுத்தமாகும். 60-79 இயல்பான நிலையாகும். 80-89 குருதியமுத்த ஆரம்ப நிலையாகும். 90-99 நிலை 1 குருதியமுத்தமாகும். 100க்கு மேல் எனின் உயர் குருதியமுத்தமாகும். பொதுவாக இரண்டையும் கணக்கிட்டு முடிவு செய்யப்படலாம். குருதியமுத்தத்தினை அளவீடு செய்யப் பல கருவிகள் உதவுகின்றன. எனினும் பாதரச மூலமான mercury manometer மூலம் 30 வினாடிகளில் இதனை அளவிடலாம். இதில் சில குறைபாடுகள் உள்ளதால் தொடர்ச்சியான அளவை கணிக்க CNAP என்னும் கருவி உடலுடன் கட்டப்பட்டு சோதனையிடப்படுகிறது. இதனை விட PWV மூலம் நாடித்துடிப்பு அளவிடப்படுகிறது. குருதியமுத்தம் வீடுகளில் சில கருவிகள் மூலம் அளவிடப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் இதய மூலமான நோய்களே அதிகமான மரணங்களுக்குக் காரணிகளாகும். அசாதாரண குருதியமுத்தம் ஏற்பட்டு இதயத்தையும், நாடிகளையும் துன்புறுத்துவதாலேயே அதிக மரணங்கள் நிகழ்கின்றன. இதயம் சுருக்கியக்கம் ஏற்படுவதால் ஏற்படும் அளவானது 140mmhg தாண்டிவிட்டால் அவர்களுக்கு உயர்குருதியமுத்தம் வந்துள்ளது என்பதே அர்த்தமாகும். பொதுவான காரணிகளை அமெரிக்க இதய நிறுவனம் (American Heart Association) குறிப்பிட்டுள்ளது.

1. சோடியம் (Sodium) அளவு கூடுதலாக இரத்தத்தில் காணப்படல். அதாவது உப்பின் அளவு கூடுவதால் உயர் குருதியமுத்தம், நீரிழிவு, இதயநாடி நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. சாதாரணமாக 1500 மில்லி கிராம் அளவுக்கு மேலாக உப்பின் அளவு தவிர்க்கப்பட வேண்டும்.
2. வயது காரணமாக குருதியமுத்தம் ஏற்படலாம். ஒருவரின் வயது கூடக் கூட இரத்த அழுத்தம் கூடுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.
3. நித்திரைக் குறைவு என்பதும் குருதி அழுத்தத்திற்குரிய முக்கிய காரணியாகும். பிராணவாயு அளவு குறைவதால் மட்டுமன்றி மூச்சு குந்தகமும் ஏற்பட வாய்ப்புண்டு.
4. கொழுப்புமிகை (obesity ) என்பதும் குருதியமுத்தத்திற்கு காரணியாகும். அதிகூடிய எடை காரணமாக சோடிய அளவு கூடுகிறது. இதனால் தமனிகள் தடித்துப் போய்விடுகின்றது. மாரடைப்பு, பக்கவாதம் கூடவே வருகிறது.
5. வாழ்வியல்முறை என்பதும் குருதியமுத்தத்திற்கு காரணியாகும். உடற்பயிற்சியற்ற வாழ்க்கை முறை இதில் அடங்கும்.
6. மதுவும் போதைவஸ்தும் குருதியமுத்தத்திற்கு காரணிகளாகும். மதுசாரம், கொக்கெயின் போன்ற போதைப் பொருட்கள் தமனிகளை சேதமடையச் செய்கின்றன.
7. போசாக்கற்ற உணவும் குருதியமுத்தத்திற்கு காரணியாகும். சீனி, உப்பு, கொழுப்புச்சத்து அதீதமாக உண்பது ஆபத்தானது.
8. புகைத்தல் என்பதும் குருதியமுத்தத்திற்கு காரணியாகும். முக்கிய தமனி சுருக்கமடைந்து விடுகிறது. நிக்கொட்டின் கூடுதலாக ஏற்பட்டு இதயநோய் ஏற்படுகிறது.
9. ஹோர்மோன் நிலைமைகள் (hormone conditions) இவ்வாறான குருதியமுத்தத்திற்குக் காரணமாகும். சிலருக்கு உட்சுரப்பு நீர் தன்மை மாறுபடலாம். இதனால் ஊக்க விசை ஏற்படுகிறது.
10. சிறுநீரக நோய்களும் உயர் குருதியமுத்தத்திற்குக் காரணியாகலாம். சிறுநீரகத்திற்கு

(தொடர்ச்சி 27ஆம் பக்கம்...)

ALEXANDER IMMIGRATION SERVICES
CANADIAN IMMIGRATION & CITIZENSHIP CONSULTING FIRM
கனடா குடிவரவு குடியுரிமை ஆலோசனை நிறுவனம்

- Study Permit
- Spousal Sponsorship
- Express Entry
- Visitor Visa
- Citizenship Applications
- LMIA based Work Permits
- Visa Extension
- Super Visa - Parents
- Parents Sponsorship
- Business Immigration
- Provincial Nominees
- PR Card Renewals
- Post Graduate Work Permits
- Humanitarian Applications

தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் சேவை.
உன்னதமான தொழில்முறை சேவைக்கு அழையுங்கள்.

Canadian Government Regulatory Body Licensed Immigration Consultant

Hemalatha K Alexander, B.Sc, MBA, RCIC, Commissioner of Oaths
by Tel : +1 647 773 3673 or email : info@alexanderimmigration.ca

10 Milner Business Court Suite 354 Toronto M1B 3C6 ON Canada

# கண்ணீரில்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

யல்வாதிகள் நடந்து கொண்டனர். இன்று யார் இந்த நாளைப் பொறுப்பேற்று நடத்துவது என்பது குறித்து போட்டிகள் நிலவுகின்றன. இது சுயநல அரசியலைத் தவிர வேறெதுவுமில்லை.

கடந்த வருடம் முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளை சில கட்சிகள் தனித்தனியாக மேற்கொண்டன. நினைவேந்தல் நிகழ்வுகளின்போது வாத விவாதங்கள் ஏற்பட்டு சண்டையிட்டுக் கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றன. இனியும் இவ்வாறான கேவலமான விடயங்கள் நிகழாமல் தமிழ் அரசியல் வாதிகள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் என்றவுடன் நினைவிற்கு வருவது இறுதிப் போரில் படுகொலை செய்யப்பட்ட மக்களும், பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கி படுகொலை செய்யப் பட்ட பெண் போராளிகளும், உயிருடன் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களும் தான்.

இதற்கு இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும். இதற்காக தொடர்ச்சியாக பல போராட்டங்கள் தாயக மண்ணில் மட்டுமல்லாது புலம்பெயர் நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சர்வதேசம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங் களைக் கொடுத்து வருகின்றது. தமிழ் அரசியல்வாதிகளின் பிரதான கடமையும் இதனை நோக்கியதாகவே இருக்க வேண்டும்.




தமிழ் மக்களின் கண்ணீரை சுயநல அரசி யலுக்கு பயன்படுத்தும் அநாகரிகம் இனியும் தொடரக் கூடாது.

# ஒன்ராரியோ...

10ஆம் பக்கத்தொடர்ச்சி



**Mike தலைமையிலான ஒன்ரா ரியோ பசுமைக்கட்சியின் பிரதான கொள்கைகள்:**

- வீட்டு உரிமையாளர்களுக்கு எரிபொருள் சக்தியைச் சேமிக்க உதவும் பல புதிய திட்டங்களை உருவாக்குதல்.
- எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய (Universal) பரிந்துரை மருந்துகள் மற்றும் பல் மருத்துவ சேவைகளை உருவாக்குதல்.
- காபன் எரிபொருளில் பாவிக்கப்படும் இயந் திரங்களின் பாவனையை ஒழிப்பதற்கான ஒரு தகுதியான திகதியை நிர்ணயித்தல்.
- காபன் வெளியீடுகளைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை அமலாக்கி அதன் வருமானத்தை ஒன்ராரியோ மக்களுக்கு அளித்தல்.
- நோயுற்றவர்களைப் பராமரிக்கும் மருத்து வத்திட்டங்களை விட அதிகமாக நோய்த்தடு ப்பு மருத்துவத் திட்டங்களை உருவாக்குதல்.

2018 மே 10ஆம் திகதி கருத்துக்கணிப்பு நிலவரங்கள் (CBC ஊடகம்)
பெரும்பான்மை அரசை அமைக்க ஒன்ராரி யோவில் உள்ள 124 தொகுதிகளில் ஒரு கட்சி 63 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும்.

| | | |
|---|---|---|
| பழைமைவாதக்கட்சி | 41.5% | 90 ஆசனங்கள்) |
| புதிய ஜனநாயகக்கட்சி | 27.1% | 27 ஆசனங்கள் |
| லிபரல்கட்சி | 24.9% | 07 ஆசனங்கள் |
| பசுமைக் கட்சி | 5.1% | 0 ஆசனங்கள் |

# திமுகவும்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசியல் சூழல் என்பது இப்போதும் திமுக, அதிமுக என இரண்டு பெரிய அரசி யல் கட்சிகளை மையப்படுத்தியே இருக் கிறது. அதற்கு, மக்கள் நலக்கூட்டணி அனுபவமே உதாரணம். திமுகவையும் அதிமுகவையும் புறந்தள்ளிவிட்டு ஓர் அணி இங்கு வெற்றிபெறுவதற்கு சூழல் இருக் கிறதா என்றால் இல்லை என்பதுதான் எதார்த்தம்.

தமிழகத்தில் தலித் ஒருவர் முதல்வராக முடியவில்லை என்பது மட்டுமல்ல அதற் கான கோஷங்கள்கூட எழ வில்லையே? ஒரு தலித் கட்சித் தலைவராக இது உங்கள் தோல்வி இல்லையா?

தமிழகத்தில் தலித் அமைப்புகள் மிகவும் காலங்கடந்துதான் எழுச்சிப் பெற்றிருக்கிறத் வலுப்பெற்றிருக்கிறது. எந்த சமூகம் தனக் கான தேவையை கோரிக்கையாக எழுப்பு கிறதோ அந்த சமூகம் எழுச்சி பெறும். திமுகவில் தலித்துகள் அரசியல் சக்தியாக எழுச்சிப் பெற்றிருந்தால் தலித் ஒருவர் முதல்வராகி இருக்கமுடியும். அந்த கோஷ மும் உருவாகியிருக்கும். 1990களில் தான் தலித் எழுச்சி என்பது இங்கே நடந்தது. இதுவரை தலித் மக்களிடையே தலித் முதல்வர் கோரிக்கை எழவில்லை. தலித் மக்களிடமிருந்தே அந்தக் கோரிக்கை எழா தபோது தலித் முதல்வர் என்பது எப்படி நிறைவேறும்?

ஆனால், நீதிக்கட்சி தொடங்கும் முன்பே அயோத்திதாச பண்டிதர் 1890களிலேயே தலித் இயக்கங்களை ஏற்படுத்தினாரே?

உண்மைதான். ஆனால், அவை சமூக இயக்கங்களாகவும் பண்பாட்டு இயக்கங் களாகவும் மட்டுமே இருந்து பெரிய தாக்க த்தை ஏற்படுத்தியது. அரசியல் இயக்கங் களாக வலுப்பெறவில்லையே? அதேபோல, இந்திய குடியரசுக் கட்சியும் உருவானது. ஆனால், சக்தியாக வலுப்பெறாமல் போய் விட்டது. அதற்குக் காரணம் திமுகவும் அதிமுகவும் தலித் மக்களிடம் வலுவாக நின்றதுதான். அந்த வெற்றிடம் தான் இந்தக் குறைபாட்டுக்கு காரணம்.

மக்கள் நலக் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் திமுகவில் இணைந்து விட்டீர்களே?

கடந்த சட்டமன்றத் தேர்தலின் சூழலைப் பொறுத்து கூட்டணி வைத்தோம். தற்போது 2019 நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். இந்தத் தேர்தலில் தேசிய ளவிலான அரசியல்தான் முன்னிறுத்தப்படும். மறுபடியும் பாஜக ஆட்சிக்கு வந்தால் நாட்டிற்கு பேராபத்து. மதவாத சக்திகளிடம் இன்னும் ஐந்தாண்டு களை கொடுத்தால் இந்தியாவுக்கே பாது காப்பில்லை என்றாகி விடும். எனவே, மத சார்பற்ற கட்சிகள் தமிழகம் மட்டுமல்லாது அகில இந்திய அளவிலும் ஒருங்கிணைய வேண்டும் என்னும் கோரிக்கை எழுந்துள் ளது. அந்த அடிப்படையில் மக்கள் நலக் கூட்டியக்க கட்சிகள் திமுகவோடு இணைந்து செயல்படுகிறோம்.




ஆனால், மு.க. ஸ்டாலின் மூன்றாவது அணிக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறாரே? இது பாஜகவுக்கு ஆதரவாக போய் விடாதா?

மூன்றாவது அணி வெற்றிகரமாக அமைய வாய்ப்பில்லை. அதனால், திமுக உள்ளிட்ட மாநிலக் கட்சிகளும் மதசார்பற்ற சக்தி களும் எந்த காரணத்தை முன்னிட்டும் சிதறி விடக் கூடாது. இது ஒரு இறுதிப் போர் என்று நினைத்தே அனைவரும் ஒருங் கிணைந்து உறுதியோடு களத்தில் நிற்கவேண்டும்.

TUTORING
Math / Science / English
Over 8 years of Experience (M.Sc., Mathematics)
Param Jyothi Academy is a Tutoring Centre located in Markham. We are very passionate about ensuring that our students understand their Math problems by breaking them down into simple problems. The secret to success for achieving high scores in Math is by practice. That is why we ensure that our students do several problems. We also work with IEP students, ADHD Students and low mark students by catering our skills, experience and knowledge to meet their needs.
FREE
ONE HOUR MATH CLASS
Call today to find out more!
- Grade 1-8: Math/Science/English
- Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
- Principles of Mathematics.
- Calculus.
- Vectors.
- Functions.
- Advanced Functions.
- University: Calculus-1, Calculus-2, Calculus -3

PARAM JYOTHI ACADEMY
Param Jyothi Academy
7393 Markham Road . Door #90
647.426.6329
Param Jyothi Academy





# விலங்குகளோடு கலந்து வாழும் அன்னை ஜேன் குடால்



சுந்தரம் இந்திரராஜா

மனிதன் குரங்கிலிருந்து வந்தவனா? என்ற கேள்விக்கு விடை காண, மனித இனத்தின் ஆதிமூலம் குறித்த ஆராய்ச்சியைப் பல்வேறு விஞ்ஞானிகள் கடந்த சில நூற்றாண்டுகளாக மேற்கொண்டு வருகின்றனர். சிம்பன்சிகளின் சமூக வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, அறிவு, உணர்ச்சி ஆகியவற்றைப்பற்றி தொடர்ந்து, 55 ஆண்டுகள் ஆய்வு செய்த ஜேன் குடால் (Jane Goodall) என்ற பெண்மணி சிம்பன்சிகளின் மரபணுக்கள் 98 சதவீதம், மனித நடத்தையை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்ற முடிவினை வெளியிட்ட காரணத்தால் குரங்குகள் என்ற பட்டியலில் மட்டுமே நீண்ட காலமாக இருந்துவந்த சிம்பன்சிகள் தற்போது மனிதக் குரங்குகள் பட்டியலில் இடம்பெற்று விட்டன.

மானுடவியலாளரும் தொல் உயிரியியல் ஆராய்ச்சியாளருமான ஜேன் குடால் (Jane Goodall) இன் இளமைக்காலம் தொட்டு இன்று வரையிலான அவரின் வாழ்க்கைக் கதை சுவாரசியமானது. சுருக்கமாக தந்துள்ளேன். படித்து சுவையுங்கள்.

1934 ஏப்ரல் 03 அன்று லண்டன் இங்கிலாந்தில் பிறந்தவர் வலேரி ஜேன் மோரிஸ்-குடால் (Valerie Jane Morris-Goodall). தகப்பன்-மோட்டிமர் ஒரு பொறியியலாளர், தாய்-வனி ஓர் எழுத்தாளர். ஜேன் குழந்தை பருவத்திலேயே வீட்டு பிராணிகளை நேசிக்க ஆரம்பித்து விட்டார். அவர் ஒரு



வயதாக இருக்கும்போது, அவரது தந்தை லண்டன் மிருகக்காட்சிசாலையில் பிறந்த ஒரு குழந்தை சிம்பன்சி நினைவாக ஒரு சிம்பன்சி பொம்மை ஒன்றை வாங்கி தங்களது குழந்தை ஜேன் இடம் கொடுத்துள்ளார். சிம்பன்சி பொம்மைக்கு ஜுபிலி (Jubilee) என்று பெயரிட்டு கற்பனை தோழமையாக்கிக் கொண்டார் குழந்தை ஜேன். அந்தப் பொம்மை உண்மையான சிம்பன்சியின் அளவினதாக இருந்தது. அவரது தாயின் தோழியர்களில் சிலர் அதைக் கண்டு பயந்தனர். விலங்குகள் குறித்த அவரது ஈர்ப்பு ஜுபிலியை அணைத்தபடி படுத்துறங்கிய அந்த மழலைப் பருவத்திலிருந்து தொடங்கிவிட்டது.

ஒருமுறை, கோழி முட்டை இடுவதைக் காண சிறுமி ஜேன் தங்களது குடும்பத்தின் கோழிக் கூட்டுனுள் ஐந்து மணி நேரம் தொடர்ந்து உட்கார்ந்து கொண்டாள். அவளைக் தேடிக் காணாது பொலிசில் முறைப்பாடு செய்யும் அளவுக்கு போய் விட்டனர் அவளது பெற்றோர். இறுதியாக ஜேன் கோழிக் கூட்டுனுளிருந்து வெளியே வந்தபோது, அவளது குடும்பத்தினர் அவள் மீது அதீத கோபத்தில் இருந்தனர். பிராணிகளின் மீது அவள் வைத்திருந்த அக்கறையால் குடும்பத்தினரது கோபம் அவளை ஒன்றும் செய்யவில்லை. சிறுமியாக இருந்த போது, ஜேன் விலங்குகள் பற்றியும் மற்றும் ஆபிரிக்கா பற்றியும் அறிய ஆவல் கொண்டிருந்தாள். டாக்டர் டூலிற்றில் (The Story of Dr. Dolittle) என்பவரது கதை மற்றும் டார்சன் சாகச தொடர் (24) நாவல்கள் (Tarzan series) பதினைந்து வயதான ஜேனுக்கு விலங்கியல் மீது பிரியத்தைக் கூட்டி ஆபிரிக்காவை நோக்கி ஈர்த்தது.

1952இல் ஜேன் உயர்நிலைப் பள்ளியில் (High School) பட்டம் பெற்ற போதிலும், அவர் கல்லூரியில் (College) படிக்க முடியவில்லை. மாறாக, அவர் ஒரு செயலாளராக, பணியாளராக, மற்றும் ஒரு திரைப் படத் தயாரிப்பாளருக்கு உதவியாளராக சில தொழில்கள் செய்து சில வருடகாலம் ஓடியது.

23 வயதான ஜேனுக்கு 1957இல் கென்யாவில் மனிதத் தோற்ற இயல் வல்லுநர் லூயிஸ் லீக்கி (famous anthropologist Dr. Louis S. B. Leakey) அவர்களை சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. விலங்குகளுடனான அவரது முனைப்புகள் பற்றி ஜேன் தனது கென்ய நண்பர் வழியாக அவரது பண்ணையில் சுற்றித் திரிந்த நாட்களில் அறிந்து கொண்டார். லூயிஸ்சும் அவரது துணைவியார் மேரியும், உருவில் பெரிய வகை

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# உங்களோடு நான் கனி

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



அனைவருக்கும், கடந்த மே 1ஆம் திகதிக்கான மேநாள் வாழ்த்து!
மேநாள் - தொழிலாளர் நாள்!

உலகமெங்குமுள்ள தொழிலாளர்கள் தங்களுக்காக ஏற்படுத்திக் கொண்ட நாள். தங்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதற்கான நாள். உண்மையில் இதனைக் கூடத் தொழிலாளர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட நாள் எனத்தான் கூற வேண்டும். முதலாளி, தொழிலாளி பாகுபாட்டை இந்நாள் எடுத்துக் காட்டினும், தொழில்களை நடத்தும் சில முதலாளிகள் கூடத் தங்களையும் தொழிலாளர்கள் எனக் காட்டிக்கொண்டு தேவையில்லாத உரிமைகளுக்காகத் தெருக்களில் நின்று கூக்குரலிடும் நாள்.

இந்நாள் தமிழர்களாகிய எங்களுக்கு மிகவும் பொருத்தமான நாள். எப்படி என்கிறீர்களா? பொதுப்படையாகப் பார்த்தால், ஒருசிலர் ஒத்துக்கொள்ள மறுத்தாலும், தமிழர்களாகிய நாங்கள் எல்லோருமே தொழிலாளர்கள்தான் என்பது எனது பார்வையாக இருக்கிறது. வரலாற்று வழியிற் பார்க்கையில், களப்பிலர் காலமாகிய சங்கம் மருவிய காலத்தில் இருந்து, கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரையில் தொழிலாளர்களாகவே இருந்திருக்கிறோம். அதன்பின்னர் வந்த சோழர் காலத்தில் 3 நூற்றாண்டுக்கு எங்களுக்கு அந்நிலை மாறியிருந்தாலும் மீண்டும் மெதுமெதுவாக மொத்தமாகவே தொழிலாளர்களாக மாற்றப்பட்டோம். விஜயநகர சாம்ராச்சியத்தின் இடையூறுகளும் ஆக்கிரமிப்பும் தென்னாட்டிற்கு வந்ததில் இருந்து இன்று வரையிலும், பாளம் பாளையமாகப் பிரிக்கப்பட்டு, சாதி சாதியாக வகுக்கப்பட்டு, அடிமைத் தொழிலாளர்களாகவே தமிழர்கள் மாற்றப்பட்டார்கள். ஒருசிலர் நிபந்தனைக்குட்பட்ட முதலாளிகளாக இருந்ததும், இருப்பதும் கூடக் கண்கூடாகத் தெரிகின்ற ஒன்றுதான்.



தொழிலாளர் அடக்கு முறையின் உச்சக் கட்டம்தான் கூலிகளாக முன்பின் தெரியாத நாடுகளுக்கு தமிழர்கள் இழுத்துச் செல்லப்பட்டது. தம்மரபு மறந்து, இனம் தெரியாத மக்களாக, தொழிலாளர்களாக எங்கெங்கேயோ எல்லாம் எமது அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, சித்தப்பா, பெரியப்பா, பாட்டன், பாட்டி, அத்தை, மாமா, மச்சான் மச்சாள் எல்லாம் தொலைந்து போனதும் இந்தப் பொருந்தாத் தொழிலாளர் நிலை எமக்கு வந்ததாலேயே.

இவையெல்லாம் தமிழகத்தில் தானே என்று பெரும்பிராக்காய் இருந்திட முடியாது. தென்னிந்தியத் தெறிப்புகள் எங்களின் மேலும் ஒட்டிக் கொண்டன, வலுவாக. இலங்கையில் இது சிறிது மாறுபட்டாலும், ஐரோப்பியர் காலத்தின் பின்னராக நாங்களெல்லாம் பிரித்தானியரின் கிழக்கிந் தியக் கொம்பனியருக்கு தொழிலாளர்கள் தான்.

இப்படி எத்தனையோக்களை நினைவுக்குக் கொண்டு வரலாம், இந்தத் தெழிலாளர் நாளிலே. இப்படியாக எங்களை நினைவுபடுத்தக் கூடியதான இந்நாளிலே விளம்பரம் பத்திரிகையின் ஊடாக, எனக்கும் உங்களுக்குமான அடுத்து தொடர்பு. இதுவும் பலவகையான அறிவியல் விடயங்களை கொண்ட பகுதிதான்.

1999ஆம் ஆண்டிலிருந்து விளம்பரம் இதழ்களில் எனது கட்டுரைகள் வருவதை அறிவீர்கள். பேருலகின் அதிசயங்கள் பற்றியும், நுண்ணுலகத் துகள்களின் நூதன நடத்தைகள் பற்றியும் ஏராளமான விடயங்களைப் பார்த்தோம். உலகின் புகழ்பூத்த எத்தனையோ விஞ்ஞானிகளின் தடங்களின் வழியில் பயணப்பட்டு அறிவியற் பயன்களையும் அடைந்தோம். இனி, "விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என் கண்கள், அனைத்துமளந்த எம் முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றது."

இதுகூட எனக்கு பழையதுதான். 1990களில் 'சிந்துவெளி நாகரிகம்' என்ற தொடர் ஒன்றை வானொலிகளில் நானும், எனது மனைவி மீராவும், கனடிய மண்ணில் அறிவிப்பாளராக இருந்த, மறைந்த எனது மச்சான் எஸ். பாலச்சந்திரனும் சேர்ந்து நடத்திய நிகழ்ச்சி உங்களிற் சிலரின் நினைவுகளில் வரலாம். காலத்தின் கட்டாயமோ என்னவோ, மீண்டும் என் பார்வையின் ஒரு கோணம் அறிவிற் சிறந்த என் முன்னவர்கள் பக்கமாய்த் திரும்புகிறது. இதற்குக் காரணங்கள் பலவிருப்பினும், இன்றிருக்கும் எங்களின் நிலை என்னை வருத்தியதும் முக்கியமெனலாம்.

'தங்களது கடந்தகால வரலாறு, தோற்றம், கலாச்சாரம் ஆகியவற்றை அறியாத மக்கள் வேரற்ற மரம் போன்றவர்கள்' என்கிறார் அறிஞர் மார்க்ஸ் கார்வே. ஒட்டுமொத்தத் தமிழர்களுமே இன்று எங்களின் வரலாற்றை அறியாமல் இருக்கிறோம். எங்கள் மொழியின் சிறப்பு, பழமை, ஆழ்ந்த அறிவியற் கூறுகள் என்பனவற்றைப் பரம்பரை பரம்பரையாகக் கடத்தாததால் இன்றவற்றைத்தெரியாது நிற்கிறோம்.



'கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே முன் வாளொடு தோன்றியவர்கள் தமிழர்' என எங்கள் பழமையையும் வீரத்தையும் குறிக்கும் சொற்தொடர் உண்டு. இதனைக் கூடக் கொச்சைப்படுத்தும் நம்மவர்களே உள்ளனர். பொதுமேடைகளில் இதனை வாய்கிழியக் கூறிவிட்டு, சிறுசிறு சந்திப்புக்களில், ஏன் வகுப்புப் பாடங்களிலும், "இப்படிக் கூறி எங்களை நாங்களே கொச்சைப்படுத்தலாமா?" எனக் கேட்கும் சில புத்திசீவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். 'அடுத்துக் கெடுக்கும் சாணக்கிய தர்மம்' கொண்ட, எம்மை அண்டிய அயலவர்களின் அலங்காரப் பேச்சுகளால், எங்கள் பெருமைகளை, அறிவியற் கருவூலங்களை எல்லாம் அவர்களுக்கே தாரை வார்த்துக் கொடுத்து விட்டு, எங்களிடம் ஒன்றுமில்லை என மயங்கியதால்தான் இன்று எங்களுக்கு இந்த நிலை.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இதனையுணர்ந்து கொதித்து "உதவாதினியொரு தாமதம்! உடனே விழி தமிழா!" எனப் புரட்சிப் பாவலர் பாரதிதாசன் கூறி ஐம்பது வருடங்கள் ஆகிவிட்டது. இனியும் தாமதம், வேண்டாம். எங்கள் பெருமைகளை, எங்களை அறிந்திட எத்தனையோ தருணங்கள் வந்திருந்த போதும், அவற்றினை அறிந்திடாத மடமை இருந்திருந்தாலும், காலம் என்றும் அப்படியே இருந்து விடுவதில்லை. அது மீண்டு வருகிறது மெதுமெதுவாக, உண்மைகளைக் கிளறிக் கொண்டு. அதில் ஒன்றுதான்,

கீழடி அகழ்வாய்வுகள்.
அடுத்த தடவையில் இருந்து விளம்பரம் ஊடாகப் பார்க்கப் போகிறோம் உண்மைகளை. 'தமிழரின் பரிமாணங்களை பல் கோணங்களிலும் அலசப் போகும் இப்பகுதியைத் தவற விட்டு விடாதீர்கள்!'

2018 நகராட்சி தேர்தல்

## தேர்தலில் போட்டியிட எண்ணம் இருக்கிறதா?

2018 நகராட்சி மற்றும் பள்ளி வாரியங்களுக்கான தேர்தல்கள் தொடர்பான மனுதாக்கல்களை 2018 மே மாதம் 1 ஆம் தேதி முதல் 2018 ஜூலை 27 மாலை 2 மணி வரை செய்துகொள்ளலாம்.

**தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் பதவிகள்:**
மாநகரத் தந்தை, Peel பதவிக்கான பிராந்தியம், வார்டு கவுன்சிலர்கள் மற்றும் பள்ளி வாரிய அறங்காவலர்கள்

**மனுதாக்கலுக்கான படிவங்கள் மற்றும் வேட்பாளர்களுக்கான தகவல்கள் ஆகியவை சிவிக் மையத்தில் கிடைக்கும்:**
Office of the City Clerk (மாநகர எழுத்தர் அலுவலகம்) இல் 2nd Floor, 300 City Center Drive, Mississauga அல்லது Mississaugavotes.ca வலைத்தளத்தில்

தேர்தலில் ஒரு வேட்பாளராக இருக்கும் தங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின் அழைக்கவும் 905-615-VOTE (8683).

வாக்களிக்கவும் mississaugavotes.ca

MISSISSAUGA

## மாணவர்களுக்கான போட்டி - 2018

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா தரம் 2 இலிருந்து 12 வரையான மாணவர்களுக்கு மே மாதம் 26ம் திகதி சனிக்கிழமை (Saturday, May 26th, 2018) இரு இடங்களில் கணிதம், பொது அறிவு, தமிழ் ஆகிய பாடங்களுக்கு முற்பகல் 9:30 இலிருந்து பிற்பகல் 1:30வரை பரீட்சை நடத்தவுள்ளது.

**பரீட்சை நடைபெறும் இடங்கள்**

(1) Sri Sathya Sai Baba Centre of Scarborough 5321 Finch Ave E, Toronto, ON M1S 5W2
(2) Terry Miller Recreation centre 1100 Central Park drive, Brampton ON, L6S 3J8

மாணவர்கள் ஒன்றோ அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கோ பங்குபற்ற முடியும். மாதிரி வினாக்களையும் விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களுடன் யாழ். இந்து கனடா இணையத்தளத்தில் ( http://www.jaffnahinducanada.com ) பெற்றுக்கொள்ளலாம். உங்கள் விண்ணப்பங்களை மே மாதம் 23ம் திகதி (Wednesday, May 23rd, 2018) புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பவும்.

தொடர்பு: சுதாகரன் (416-230-7376) ரவீந்திரா (416-230-0360) சிவகுமார் (416-859-4977) சண் ஆசிரியர் (647-988-9367) கிருஷ் (416-930-9119)

# விலங்குகளோடு...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

குரங்குகள் குறித்த சமூகவியல் நேரடிக் கள ஆய்வில் தீவிரமாகப் புள்ளி விபரங் களை சேகரித்துக் கொண்டிருந்தார்கள். ஜேனையும் ஓர் ஆய்வாளராக ஏற்று பயிற்சி அளித்தார்கள். 1959இல் லூயிஸ் ஜேனை தான்சானியா சென்று சிம்பன்சி ஆய்வு களில் ஈடுபடும்படி கேட்டு இளம் பெண் தனியாகச் செல்லமுடியாது போகவே ஜேன் தனது தாயை துணைக்கு அழைத் துக் கொண்டு 1960இல் தான்சானியா சென்றார்.

முன்னர் பிறர் அறிந்திராத இரண்டு கண்டு பிடிப்புகளை ஜேன் மிகக் குறுகிய காலத்தி னுள் கண்டுபிடித்தார். சிம்பன்சிகள் மனிதர் கள் போல தேவைக்கேற்ப கருவிகளைப் பயன்படுத்தும் என்கின்ற நடத்தையும் சிம்பன்சிகள் இறைச்சிக்கு வேட்டையாடும், மாமிசம் சாப்பிடும் என்கின்ற நடத்தையும் இவரது கண்டுபிடிப்புகள் ஆகும்.

முதல் பத்தாண்டுகளுக்குள் சிம்பன்சிகள் மிகவும் சாதுவான நட்பு மிக்க சமூக நடத்தை கொண்டவை என்று கணித்தார். அவர்களுக்குள் கூட்டமாகத் திட்டமிட்டு ஒரு சிம்பன்சியைத் தீர்த்துக் கட்டுவதை, சிம்பன்சிகள் கூட்டமாக வேட்டையாடுவதை, மறைந்து காத்திருந்து தனது எதிரிகளை நோக்கி தாக்குவதை, வேட்டைக்கு கருவி யாக மூங்கில் தடிகள், கற்கள் பயன்படுத்து வதை அவதானித்து மனிதர்களுக்கும் இதே போன்ற சமூக நடத்தை இருப்பதை ஒப்பீடு செய்து வெற்றி கண்டார்.

பெண் சிம்பன்சிக் குழுவில் தன் கை உயர்ந்திருக்க வேண்டும் என்பதற்காக ஒரு பெண் சிம்பன்சி மற்றப் பெண் சிம்பன்சி களுக்குப் பிறந்த குழந்தைகள் பலவற்றை திட்டமிட்டுக் கொல்வதை பார்த்திருக்கிறார். சமிக்ஞைகள் மூலம் அவற்றினது மொழி கலாச்சாரம் அறிந்து அவர்களது தொடர்ச்சி யான பரிணாம வளர்ச்சிபற்றி ஆராய்ந்தார்.



பிற்கால மனித ஆக்கிரமிப்பால் அழிந்த அடுத்த படிநிலையான ஹோமினிட்ஸ் (Hominids) வகை மனித உயிரிகள் எப்படி வாழ்ந்திருப்பார்கள், எப்படி அழிந்திருப்பார் கள் என்பதற்கான ஆதாரங்கள் பலவற்றை வரிசைப்படுத்தி உணர முடிந்திருக்கிறது என்றார். மனிதக் குரங்கு, மனிதனாய் உரு வெடுத்த இடைநிலைப் படியில் (primates) இருப்பவை சிம்பன்சிகள் என்றார்.

சிம்பன்சி குட்டி மனித குழந்தையைவிட புத்திசாலியாக இருக்கிறது. சிம்பன்சி, மனி தரைப் போன்ற நடத்தைகளைக் கொண் டவை. சிரிக்கவும், அழவும் செய்கின்றன. புற்றுகளில் உள்ள கறையான்களை, சிறு குச்சிகளைப் பயன்படுத்தி பிடித்து உண் கின்றன, மரக்குச்சியை உடைத்து, அதன் இலைகளை அகற்றிவிட்டு குச்சியைப் பயன்படுத்துகின்றன. மரபணுக்கள் 98 சதவீதம் மனித நடத்தையை அடிப்படையா கக் கொண்டுள்ளன. இறந்த தன் உறவு- களைப் பார்த்து நெஞ்சில் அடித்து அழு கின்றன. கடுமையான மழையின் போதும், காற்றின் போதும் மகிழ்ச்சி பொங்கி ஆடு கின்றன. இயற்கை சீற்றங்களை முன் கூட்டியே அறிந்து கொள்கின்றன. அவை குழு மனப்பான்மை கொண்டவை. சிம்பன்சி மனிதக்குரங்குகளின் சமூக வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, அறிவு, உணர்ச்சி ஆகியவற்றை பற்றி ஜேன் ஆராய்ந்து முடிவுகளை வெளியிட்டு உள்ளார்.

1960இல் கோம்பே தேசியப் பூங்கா என இன்று தான்சானியாவில் அழைக்கப்படும் கானகத்தில் கசகெலா சிம்பன்சி குழுமத்தை ஆய்வு செய்ய அவர் ஆரம்பித்த அந்த நாட்களில் தனக்கு கல்லூரிக்கல்வி அறிவு கூடக்கிடையாது, அறிவியலாளர்கள் போல தான் ஆராய்ச்சி செய்யவில்லை. நான் அவர்களோடு வாழ்வதென்று முடிவு செய்தேன். எனது ஆய்வு வேறுபட்டதற்கு அதுவே பிரதான காரணமாகிப் போனது என்றார். ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக செய்த ஆய்வுமுறையே சரி என நிரூபண மாகி உள்ளது என்றார்.

1962இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஒரு Ph.D. ஆய்வாளராக ஏற்றுக்கொள்ளப் பட்டார். கல்லூரி பட்டம் பெறாமலேயே Ph.D. பல்கலைக் கழகத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட முதல் மாணவர் இவராய் தான் இருக்கும். அவரது ஆய்வானது "சுயமாக திரியும் சிம்பான்சியின் நடத்தை" (Behaviour of the Free-Ranging Chimpanzee) என்ற தலைப்பில் இருந்தது. அவர் 1966இல் டாக்டர் பட்டம் பெற்றார்.

1963இல் ஜேன் குடால் அவர்களது கண்டு பிடிப்புக்களை கேள்வியுற்ற தி நேஷனல் ஜியோகிராபிக் குழு (The National Geographic Society) ஜேன் குடாலும் சிம்பன்சி களும் என்ற தலைப்பில் ஆவணப்படுத்த புகைப்படக் கலைஞர் மற்றும் திரைப்பட தயாரிப்பாளரான கியூகோ வேன் லவிக் (Hugo van Lawick) என்ற கலைஞரை அனுப்பிவைத்து ஜேன் குடாலது வேலை க்கு நிதியுதவியும் அளித்து வந்தது. 'காட்டு சிம்பன்சிகளுடன் எனது வாழ்க்கை' என்ற கட்டுரையை எழுதினார். தி நேஷனல் ஜியோகிராபிக்காக படப்பிடிப்பு கள் நடந்த காலப்பகுதியில் இருவருக் கிடையில் காதல் ஏற்பட்டு கியூகோ வான் லாவிக் மற்றும் ஜேன் குடால் இருவரும் 1964இல் திருமணம் செய்து கொண்டார்கள்.

1965இல் சிம்பன்சிகளினால் கருவிகள் தயாரித்தல் மற்றும் பிற நடத்தைகள் பற்றி மேலும் ஆராய்ச்சிகள் முன்னெடுக்க கோம்பே (Gombe) என்ற இடத்தில் தேசிய ஆராய்ச்சி மையம் ஒன்றை ஜேன் குடாலால் நிறுவப்பட்டது.

சுமார் ஒரு தசாப்த காலம் ஜேன் மற்றும் கியூகோ திருமண வாழ்க்கையில் இருந் தார்கள். இந்த திருமண வாழ்க்கையின் போது, அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந் தது. இருப்பினும், 1974இல் முதலில் பிரிந்து இறுதியில் அதே ஆண்டில் விவாக ரத்து செய்தனர். ஒரு வருடம் கழித்து ஜேன், டெரெக் விரசெசனை (Derek Bryceson) திருமணம் செய்து கொண்டார். டெரெக் விரசெசன் தான்சானியா நாடாளு மன்றத்தில் முக்கிய நபர்களில் ஒருவராக இருந்தார். அவர் தான்சானியாவில் உள்ள தேசிய பூங்காவுக்கு இயக்குநராகவும் இருந்தார். 1980ஆம் ஆண்டுவரை ஒரு மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையில் இருந்து வந்தனர். டெரெக் புற்றுநோய்க்கு ஆளாகி ஒக்ரோபர் 1980இல் காலமானார். பின்னர் ஜேன் தேசிய பூங்காவுக்கு இயக்குனராக தனது நிலையை மாற்றம் செய்து காட்டு விலங்குகளை பாதுகாப்பதற் காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். ஜேன் மதிப்புமிக்க விருதுகள் பலவற்றிக்கு பரிந்துரைக்கப்பட்டார். சில விருதுகளை வென்றுள்ளார். 1980ஆம் ஆண்டில் கோல் டன் ஆர்க் ஆணையகத்திலிருந்து உலக வனவிலங்கு பாதுகாப்பு விருது (World Wildlife Award for Conservation) வழங்கப் பட்டது. காட்டு விலங்குகளின் பாதுகாப்பிற் கான அவரது பங்களிப்பு மரியாதைக்குரிய- தாகும். காட்டு மிருகங்களைப் பாதுகாப் பதற்காக அவர் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். இதற்காக, 1984இல் ஜே. போல் கெட்டி வனவிலங்கு பாதுகாப்பு விருது பெற்றார். 1985இல் அவர் சர்வதேச மகளிர் லீக்கின் வாழ்வாதார மரபுரிமை விருது பெற்றார். 2002இல் ஐக்கிய நாடு களின் செயலாளர் கோஃபி அன்னான் அவர்களால் ஐக்கிய நாடுகளின் அமைதி தூதராக நியமித்து கௌரவிக்கப்பட்டார்.

கொரில்லாக்களின், சிம்பன்சிகளின் பாது காப்பு மறுவாழ்வு மையம் ஒன்றை ஏற்படு த்தி நடத்தி வருகிறார். காடுகள் அழிக்கப் பட்டு, அதனால் பரிதவிப்புக்குள்ளாகும் கொரில்லாக்களையும், சிம்பன்சிகளையும் மீட்டு சிகிச்சை அளித்து அவற்றை மீண்டும் காட்டுக்குள் விடுவதுதான் ஜோன் குடால் நடத்தும் பாதுகாப்பு மறுவாழ்வு மையத்தின் முக்கிய பணி. கடந்த 2013ஆம் ஆண்டு காட்டில் மெலிந்த நிலையில் கிடந்த, சிம் பென்சியை மீட்டு, அதனை ஜேன் குட் ஆல் குழுவினர் சிகிச்சையளித்து காப்பாற் றினர். அதற்கு வூண்டா (Wounda) என்றும் பெயரிட்டனர்.

பின்னர் அதனை சின்டாசோலு வனப்பகுதி

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)



## வீழ்ச்சிப்பாதையாலும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால், மைத்திரியும், ரணிலும் தங்கள் தங்கள் கட்சிக்குள்ளிருக்கும் பிளவு-களையும் முரண்பாடுகளையும் சீரமைக்கும் முயற்சிகளையே தற்போது முன்னெடுத்து வருகின்றனர். கட்சிகளுக்குள் உள்ள உள்முரண்பாடுகளை களைந்து பின்னர் இரு பிரதான கட்சிகளுக்குமிடையில் புரிந்துணர்வுகளை மீள ஏற்படுத்தி, சுமுக மானதொரு சூழல் ஏற்பட்டால் மட்டுமே புதிய அரசமைப்பு குறித்த நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்க முடியும். தற்போதைய கூட்டரசாங்கம் பலமானதாக இருந்தால்தான் எதிரணியை சமாளித்து நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். அதுவரை எதனையும் காத்திரமாக மேற்கொள்ள முடியாது.

ஓர் அரசாங்கத்திடமிருந்து பொதுமக்கள் முதலில் எதிர்பார்ப்பது தங்கள் வாழ்வாதாரத்தை சிக்கலின்றி நடத்திச் செல்வதற்கான நடவடிக்கைகளையே. இன்று அதுவே சிக்கலாகிப் போயுள்ளது. இன்று அத்தியாவசியப் பொருட்கள் விலை-யேற்றப்பட்டு வருகின்ற நிலையில் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பாதிப்படைந்து வருகின்றனர்.

பொதுமக்களின் வாழ்வாதாரத்தை சீர் படுத்துவதற்குப் பதிலாக வாழ்க்கைச் சுமை மேலும் அதிகரிக்கப்படுகின்ற நடவடிக்கை களையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. பொதுமக்களின் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள எரி-பொருள்களின் விலைகள் மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளன. ஒரு லீற்றர் 47 ரூபாவாக விற்பனை செய்யப் பட்ட மண்ணெண்ணெய் 101 ரூபாவாக உயர்ந்துள்ளமையானது சாதாரண மக்களுக்கே பாதிப்பாக அமைந்துள்ளது. உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலை உயர்வடைந்தாலும் இவ்வாறு விலையேற்றம் அமைவது பொருத்தமற்றது. அரசாங்கம் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்திருப்பதால் சகலவற்றிற்குமான விலைகள் அதிகரிக்கவுள்ளன. மக்களின் போக்குவரத்துக் கட்டணம் அதிகரிக்கப்பட வுள்ளது. உணவுப்பொருள்களின் விலை களும் அதிகரிக்கப்படவுள்ளன. இவை சாதாரண பொதுமக்களின் வாழ்வாதாரத்தில் விழுந்த பாரிய இடியாகவே அமைந்துள்ளது.

எரிபொருள்களுக்கு விதிக்கும் வரியைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கு வதை விடுத்து, அரசாங்கம் எரிபொருள் களின் விலைகளை அதிகரித்தமை அநீதி யானது என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க நாடாளு மன்றத்தில் உரையாற்றுகையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கம் அரசியலமைப்பையும் மீறி கூடுதலான அமைச்சர்களைக் கொண்டுள் ளது. இதற்கான செலவுகளைக் குறைக்கா மல் மக்கள் மீது வரிகளைச் சுமத்தி வரு கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதற்கு அரசாங்கம் என்ன




காரணங்களை விளக்கிக் கூறினாலும் அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைக்கவியலாத - அதேவேளை யில் சுமைகளைக் கூட்டும் ஓர் அரசாங்கம் சீரான நிர்வாகத் திறனைக் கொண்டிருப்ப தாகக் கருத முடியாது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் முக்கியமானவை மஹிந்த அரசாங்கத்தில் கடுமையான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பது. நாட்டின் பிரதான அரசியல் பிரச்சினைக்கு தீர்வினை ஏற்படுத்துவது. மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது என்பனவாகும். ஆனால் எதுவும் நடைபெறவில்லை.

எனவே, இவற்றையெல்லாம் மீதமுள்ள ஒன்றரை வருட காலத்தில் சீர்செய்ய முடியும் என்று அரசாங்கம் கூறுவது நம்பகமான வாக்குறுதி அல்ல. அரச இயந்திரம் சீராக இல்லாவிடில் அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியாது.

இந்த நிலைமைகள் எல்லாம் சேர்ந்து, அடுத்த தேர்தல் வரும்போது இந்த அரசாங்கத்திற்கு பாரிய வீழ்ச்சியினையே ஏற்படுத்தப் போகின்றது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்


வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough







வல்மொரின் சுப்பிரமணிய ஐயப்பன் ஆலய
அறிவித்தல்

முத்துமாரியம்மன் பொங்கல் திருவிழா

கொடியேற்றம்: ஜுன் 15 - வெள்ளிக்கிழமை பொங்கல் ஜுன் 24 - ஞாயிற்றுக்கிழமை

ஜுன்15 ஆம் திகதி முதல் ஜுன் 24 திகதி வரை முத்துமாரியம்மன் திருவிழா பூசை வார தினங்களில் பிற்பகல் 5-9 மணி வரையும், வார இறுதி நாட்களில் காலை 10-12 மணி வரையும் மாலை 5-9 மணி வரையும் நடைபெறும்

வல்மொறின் சுப்பிரமணிய ஐயப்பன் ஆலய காவடி தேர்த் திருவிழா

கொடியேற்றம்: ஜுலை 7 - சனிக்கிழமை பொங்கல் ஜுலை 22 - ஞாயிற்றுக்கிழமை

முருகப் பெருமானின் திருவிழா பூசை வார தினங்களில் பிற்பகல் 5-9 மணி வரையும், வார இறுதி நாட்களில் காலை 10-12 மணி வரையும் மாலை 5-9 மணி வரையும் நடைபெறும்

மொன்றியலிலிருந்தும் ரொறொன்ரோவிலிருந்தும் பல குடும்பத்தினர் ஒவ்வொரு திருவிழாக்களையும் பொறுப்பேற்றிருக்கின்றனர்
ஏதாவது ஒரு திருவிழாவை நீங்களும் பொறுப்பேற்க விரும்பினால் 819-322-1379 என்ற இலக்கத்தை அழையுங்கள்

காவடிக்கு தனியார் மூலம் பதிவு செய்திருந்தால் கோவிலிலும் பதிவு செய்யவேண்டும்.
சாதாரண காவடி, சிறுகாவடி, முள்ளுக்காவடி போன்ற பலவகை உண்டு.
தண்ணீர்ப் பந்தல் அமைப்பதானால் கூடிய சீக்கிரம் கோவிலை அழைத்து பதிவு செய்தல் வேண்டும்.
இதற்கான அனுமதியை ஆச்சிரமம் நகர் காவலரிடமும் நகர சபையிடமிருந்தும் முன்னதாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

Driving Direction From Toronto:
Take 401 East to 40 East to 13 North to 640 East to15 North, Take exit 76, turn right on to Val Morin,
Take first right Bel Autumne, continue driving until you see the temple

மேற்படி பூஜை நிகழ்வுகளில் பங்கு கொண்டு இஷ்ட சித்திகளை பெற்று ஏகுமாறு அடியார்கள் அனைவரும் அன்புடன் வேண்டப்படுகிறார்கள்.

நன்றி
மேலதிக விபரங்களுக்கு: 819-322-1379
பிரகலதா
கோவில் நிர்வாக முகாமையாளர்

# இன்னல் நீக்கும் இயற்கை - 25



- அகணி -
authorakani@gmail.com

“இலவண மொன்றுமே யிளவெநீ ரிற்றின
மலவலி வலியெலா மாண்டு நீறாகும்
மதுப்பூசிப் புகளிலே யதிகமாய்க் கொண்டே” என்ற தேரையர் காப்பியப் பாடலைக் கவனிப்போம். உப்பை இளநீரில் கலந்து பருகினால் மலச்சிக்கலைப் போக்குவதுடன் உடலும் வலிமையுறும் என்று இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

“மாதுளைக் கனியுண மதனகா மேசுரச்
சூதென வாயுளர் சொல்லுவர் மிகவே” என்ற தேரையர் காப்பியப் பாடலைக் கவனிப்போம். மாதுளம்பூ, கனி, வித்து முதலியவற்றை உண்டு வந்தால் பல்லு வலுப்பெறும் என்று இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

“முருங்கைக் காய்கறி முகிழிலை வேர்கொள வொருங்கொள நோயெலா மோடவுந் துரத்துமே” என்ற தேரையர் காப்பியப் பாடலைக் கவனிப்போம். முருங்கைக்காய், முருங்கை இலை, முருங்கைப் பூ, முருங்கை வேர் இவற்றை உணவுமுறையாகப் பக்குவப்படுத்தி உண்டு வந்தால் உடலுறுதியாகும். நோய்கள் வராமல் தடுக்கும்.

இவ்வாறாக பல பழைய சித்த மருத்துவ நூல்களிலும் பெறுமதியான இயற்கை மருத்துவக் கருத்துக்கள் உள்ளன.

சித்தமருத்துவர் டாக்டர் அருண் சின்னையா அவர்கள் எழுதிய “ஆரோக்கியம் அருளும் சித்தமருத்துவக் குறிப்புக்கள்” என்ற நூலில் இருந்து பயனுள்ள விடயங்களை இந்த இதழில் உரையாடலாம் என்று நினைக்கின்றேன். டாக்டர் அருண் சின்னையா அவர்கள் ஐம்பதிற்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை எழுதியவர் என்பது குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான விடயம். எனவே நான் இங்கு குறிப்பிடும் மருத்துவக் குறிப்புக்கள் எவ்வளவு நம்பகரமான-தென்பதை நீங்களே ஊகித் தறிந்து கொள்ளலாம்.

தலைவலி ஏற்படும் பொழுது மஞ்சள் துண்டொன்றினை வேப்பெண்ணையில் தோய்த்தெடுத்து நெருப்பில் எரியச்செய்யும் பொழுது எழுகின்ற புகையை சுவாசித்தால் தலைவலி நீங்கும் என்று டாக்டர் அருண் சின்னையா குறிப்பிட்டுள்ளார். அவர் இந்த நூலில் குறிப்பிட்டுள்ள சில இயற்கை மருத்துவக் குறிப்புக்களை கவனிப்போம்.

உடல் எடை குறைவதற்கு நாளாந்தம் காலையில் வெந்நீரில் இரண்டு கரண்டி தேன் கலந்து குடித்து வரவேண்டும். திப்பிலி, மிளகு இரண்டினையும் சமமான அளவில் எடுத்து இடித்துத் தூளாக்கி விளாம்பழத்தின் சதைப்பகுதியுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் தலைச்சுற்று நீங்கும். நாள்தோறும் சந்தனம் கரைத்த நீருடன் அரைத்த பாசிப்பயற்றை முகத்தில் பூசி ஒரு மணித்தியாலம் கழித்த பின்பு குளித்து வந்தால் கரும்புள்ளிகள் விரைவில் மறைந்து விடும். நகத்தில் ஏற்படும் காயங்களுக்கு மஞ்சள் தூளை கற்பூரத்துடன் கலந்து கொதித்த நல்லெண்ணையில் கலந்து ஆற விட்டு மெல்லிய சூட்டுடன் தடவிவரலாம்.



10 சீரகத்தையும் 8 திப்பிலியையும் நன்றாக அரைத்து தேனில் கலந்து சாப்பிட்டால் உடனே விக்கல் நிற்கும். உடம்பில் வாயுத் தொல்லை உள்ளவர்கள் சுக்குத் தூளை வாயில் போட்டுத் தண்ணீர் குடித்து வந்தால் குணமாகும். மூன்று சிறுவெங்காயத்தை சிறிதாக வெட்டி ஒரு கப் தயிரில் கலந்து சாப்பிட்டு வந்தால் இரவில் நல்ல தூக்கம் வரும். இரண்டு இஞ்சித் துண்டுகளை எடுத்து இடித்துச் சாறு பிழிந்து ஒரு பாத்திரத்தில் தெளிய வைத்து அடியில் சேரும் மண்டியைத் தேனுடன் கலந்து பருக்கள் மீது மூன்று நாட்கள் தடவி வந்தால் குணமாகும். சாதிக்காயை அரைத்து சந்தனத்துடன் கலந்து இரவில் முகத்தில் தடவி மறுநாள் முகத்தை கழுவி வந்தால் முகப் பருக்களும் நீங்குவதோடு முகமும் பளபளப்பாக இருக்கும்.

தேவை இல்லாத மருந்தை தவறாகச் சாப்பிட்டு விட்டால் உடனே வாழைப்பழம் சாப்பிட்டால் மருந்தை முறித்து விடும். இரண்டு வெங்காயத்தை தோல் நீக்கி அதனுடன் ஆறு மிளகு சேர்த்து அரைத்துச் சாப்பிட்டு வந்தால் நீராக வடியும் சளித்தொல்லை நீங்கும். உடலில் ஏற்படும் வேர்க்குரு நீங்குவதற்கு வெங்காயச்சாற்றை பூசிக் கொள்ளலாம். இதனால் உடம்பும் குளிர்ச்சி பெறும். உடலில் அதிக பித்தத் தன்மை உள்ளவர்கள் நாள்தோறும் வாழைப்பழம் சாப்பிடுவது நல்லது.

நாள்தோறும் கொய்யாப்பழம் சாப்பிட்டு வந்தால் இரத்த சோகையிலிருந்து குணமடையலாம். நாள்தோறும் காலையில் அல்லது இரவில் இட்லியை உணவாக உட்கொண்டு வந்தால் இட்லியில் உள்ள உளுந்து நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும். கோதுமையைப் பொன்னிறமாக வறுத்து எடுத்து இடித்து சலித்து போத்தலில் வைத்து நாளாந்தம் சிறிது எடுத்து தேனுடன் கலந்து மாவைப் பிசைந்து சாப்பிட்டு வந்தால் இடுப்பு வலி, மூட்டு வலி ஆகிய நோய்களிலிருந்து விடுபடலாம். ஒரு மாதுளம் பழத்தை இரவு படுக்கைக் குப் போக 3 மணி நேரம் முன்பு சாப்பிட்டு வந்தால் ஆண்மைத்தன்மைக் குறைபாடு நீங்கும். கருவுற்றிருக்கும் தாய்மார்கள் மாம் பழம் சாப்பிட்டு வந்தால் பிறக்கும் குழந்தை ஊட்டமுடன் இருக்கும்.


நாள்தோறும் எலுமிச்சம் பழம் சாப்பிட்டு வர உடலின் தோல் பொலிவுடன் தோற்றமளிக்கும். பப்பாளிப் பழத்தை சிறிதளவு சாப்பிட்டு வந்தால் நினைவாற்றல் சீராக இருக்கும். மஞ்சள் தூளுடன் சிறிது மிளகையும் தூளாக்கிச் சேர்த்து காச்சிய பசும் பாலுடன் கலந்து பனங்கற்கண்டுடன் சாப்பிட்டால் இருமல் குறையும். கொத்த மல்லி இலைகளைப் பறித்து அரைத்து இரவில் உதட்டில் பூசி வந்தால் உதடு சிவப்பாக மாறும். துளசி இலையைக் கசக்கி முகத்தில் பூசி இரவில் படுத்து காலையில் கழுவி வந்தால் முகம் அழகு பெறும். வாழைக்காய் பிஞ்சை சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் குடற்புண் சுகமாகும். இளம் வெற்றிலையின் நுனிப்பகுதியை எடுத்து நெற்றியில் நெற்றிப் பொட்டின் இரு புறத்தில் போட்டுக் கொள்ளும் போது தலைவலி குறையும். பீட்ரூட், கரட், அன்னாசி, திராட்சை, தக்காளி இவற்றை இடித்துச் சாறாக்கி எலுமிச்சம்பழச்சாறு கலந்து யூஸ் ஆக்கி சாப்பிட்டு வர உடலுக்குத் தேவையான விட்டமின்கள் அனைத்தும் கிடைக்கும். அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**
இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

யோகா சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல்
சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# காப்புறுதி...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

**பத்திரம்' வைத்திருக்கும் வருடங்கள், அதன் தரம், வீதி ஒழுங்கு விதிகளை மீறிய குற்றச்சாட்டுகள் என்பவை வாகன காப்புறுதியின் விலையினை நிர்ணயிப்பதில் எந்தளவுக்கு தாக்கத்தினை உருவாக்குகின்றது?**

G(2), மற்றும் G அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் இருவரின் நிலைப்பாடுகளிலும் சுமார் 10% வீதம் வரை விலை வித்தியாசம் உருவாகும். இதன் காரணமாகவே நிரந்தரமான G அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை உடனடியாக எழுத்து மூலம் காப்புறுதிக் கம்பனிக்கு அறிவித்து விலையினை குறைத்து கொள்ளுங்கள் என அறிவுரை வழங்குவது வழமையாகும்.

வாகனக் காப்புறுதிக்கு மனு செய்யும்போதே எந்த வருடம் முதல் அனுமதிப்பத்திரம் பெற்றது? அடுத்த கட்டமாக உள்ள அனுமதிப்பத்திரம் எப்போது பெறப்பட்டது போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

3900 SF RESTAURENT READY START (KEY DEPOSIT-NON REFUNDALE REQUIRED)

**BIG BUSINESS POTENTIAL**

(WITH IN VERY SHORT PERIOD MAJESTIC CITY -180 RETAIL STORES ARE COMING)

**CONTACT : KRISH SIVAKOLUNDU: 647-218.3698**

## மணமகன் & மணமகள் தேவை

யாழ். சைவ சமயத்தைச் சேர்ந்த (32 வயது) B.A முடித்து இலங்கையில் அரசாங்க வேலை புரியும் மணமகளுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

யாழ். சைவ சமயத்தைச் சேர்ந்த (39 வயது) M.Sc. முடித்து தேசிய பாடசாலையில் ஆசிரியராகத் தொழில் புரியும் மணமகனுக்கு படித்த மணமகளை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு: ***416.289.2160***

## ARE YOU LOOKING FOR WORK ?




Please Call: **416.514.0733** or

email your resume to: infoandemployment@gmail.com

- Call Center
- Electrical Apprentice
- Fire Alarm Technician
- Lab Technician
- Office Clerk/ Accountant
- Electrician/Journeyman
- AZ driver
- Machine Operator
- Forklift Operator
- Window Assembler
- Window Glazer
- General Labours
- Dispatcher
- Maintenance Mechanic.

## BUS SERVICE

***RAINBOW CHARTER SERVICE INC.(SCARBOROUGH)***

உங்கள் பயண தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

***info@rainbowcharterservice.ca***

## சிறுநீரகம் தேவை

***38*** வயதுடைய 2 வயதுப் பெண் குழந்தையின் தந்தைக்கு A+ மற்றும் O வகை இரத்த மாதிரி உடையவர்களின் சிறுநீரகம் (kidney) உடனடியாகத் தேவைப்படுகிறது. தானம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**647.975.3962**

## JOB JOB JOB

**AZ DRIVERS WANTED**

Need immediately experience drivers (At least one year) for long & short run within Canada & USA. Benefit available. தொடர்புகளுக்கு: ***416.835.6701***

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 32, 33, 34, 35

## NEW LOOK BLINDS & SHUTTERS

***FREE ESTIMATE & INSTALLATION*** (25 years experience)

உங்கள் வீட்டு யன்னல்களை குறைந்த விலையில் அழகு படுத்த அழையுங்கள்

| | |
|---|---|
| Shutters (California) | Bedroom Blinds From $75.00 |
| Vertical Blinds | kitchen patio door blinds From $120.00 |
| Faux Wood Blinds | Basement Blinds From $ 50.00 |
| Venetian Blinds | Door Blinds From $ 50.00 |

***JAYA (pathma) : 416.858.6342 / 647.501.8729***

## வேலைக்கு ஆள் தேவை

***BRIMLEY & EGLINTON***

உடனடியாக வேலைக்கு ஆள் தேவை. **Furniture shop** ஒன்றிற்கு **Sale ladies only wanted. Saturday & Sunday only 11:00 am to 8:00 pm** நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **416.669.1214**

## HELP WANTED

YONGE & ST CLAIR இல் உள்ள உணவகத்திற்கு கனடிய அல்லது தாய்லாந்து உணவு தயாரிக்க கூடிய COOK தேவை.

WEEK DAY FULL TIME AND WEEDKEND PART TIME

Call : **416.999.7015**

## KITCHEN STAFF/DRIVER WANTED

***BATHURST & STEELES*** இல் இயங்கிவரும் **Restaurant** ஒன்றிற்கு KITCHEN STAFF / DRIVER வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை. FULL TIME/PART TIME FOR RESTAURANT – TO START IMMEDIATELY -

தொடர்புகளுக்கு: ***416-985-8341***

## JOB OPPORTUNITY

**PLUS YOU DRIVING SCHOOL**

CAR DRIVING INSTRUCTOR ஆக வர விரும்புவோருக்கு IN-CAR Training வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு

BALAN : **416-999-7727**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Full time worker needed for gas station. We provide living accommodation too youngsters, seniors preferable.

தொடர்புகளுக்கு: **416.520.2144**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

***Scarborough* – McCowan / 401 – Condo Apt**
(1+1Brm+1Bath) Spacious layout, Close To 401, Shopping (Scarb Town Centre), Restaurants, Supermarkets, Centennial College. Bedroom Size Den. **[Asking$2100/m]**

***Scarborough* Brimley / Ellesmere – Condo Apt**
(1+1 Brm,1Bath) Bright and spacious. Walk to Scarborough Town Centre, Shopping Mall, Rt Station, Go Transit, Movie Theatre, And Ymca. 1 Parking,1 Locker. **[Asking $1780/m]**

***Scarborough* – Mccowan / Lawrence– Full house**
(3Brm, 2Bath) Well kept. Close To Scarborough General Hospital, Ttc, Scarborough Town Center, Parks, Schools, Library, Shopping, Banks. **[Asking $2150/m]**

***Scarborough* - Birchmount / McNicoll – Full House**
(4+1Br + 4Bath). Close To: Pacific Mall, Ttc, High Ranked Schools (Kennedy P.S & Dr. Norman Bethune Ci), Restaurants, Parks, Community Centre, Plazas, Library, Church, Hwy, Go Station. **[Asking $2600/m]**

*** *Scarborough* – Pharmacy / Ellesmere – Full House**
(3+1Brm, 2 Bath) Sep entry to bmnt. Ttc Access Right in front Of House. Close to Parkway Mall For All Your Shopping Needs, Great Schools & Parks In The Area & Minutes To Dvp, 404, 401 For Convenient Access To Downtown Toronto **[Asking $2400/m]**

***Scarborough* – Victoria Park / Danforth – Main floor**
(2Brm, 2Bath) fully Renovated Bungalow, Hardwood Floors, well maintained, Minutes to Ttc Access & Victoria Park Subway, Dvp. 401. Close to Shopping and all other amenities **[Asking $2100/m]**

***Markham* – Markham / Denison st– Cono Apt.**
(2Brm, 2Bath) Brand new. Near All necessary amenities (Walmart, Grocery Store, Banks, Shopping Centre, Costco, Home Depot, Canadian Tire, Restaurants) Steps To Ttc And Close To Schools. Energy Efficient Design/ Solar Panels To Keep Utilities Low. **[Asking $1800/m]**

*** *Markham* – 9th Line / 16th – Town house**
(4 Brm, 4Bath) Close To Markham Stouffville Hospital, Hwy 407, Great School, Shopping, Parks, Bank & Transportation. Available immediately. **[ Asking $1800/m]**

***Ajax* – Salem / Rossland – Basement**
(2Brm, 1Bath) Brand new, walk out basement. Close to all amenities, Steps to Restaurants, shopping & Minutes to Schools, Parks, **[Asking $1100/m]**

***Brampton* – Wankirk/ Wanless – Main & 2nd Floor**
(4 Brm, 3Bath) Hardwood Floors, Open Concept. Newly Painted. Easy Access To 410, 407 & 401. Close to School, Park, Bus, Major Shopping Mall Nearby. **[ Asking $2100/m]**

***Mississauga* – Hurontario / Hillcrest – Condo Apt**
(2+1Brm + 2Bath) Very spacious, Upgraded Kitchen. Ensuite Laundry with Storage. 24 Hr Concierge, Convenient Location With Steps To Go Station. Close To Square One & Hwy 403. **[Asking $2500/m]**

***Oshawa*– Olive /Albert – Upper**
(3Brm, 1Bath) Renovated Kitchen, Hardwood In Master Bedroom And Laminate In Living Area. Freshly Painted Conveniently Located Near 401 Highway, minutes' walk to Public transport. **[Asking $1300/m]**

watsonpm1989@gmail.com **MANAGING RESIDENTIAL PROPERTIES**

Karu: 416-616-7278 Vithy: 416-509-9557 Watson: 416-417-8432

# We make it easy for you to be a Landlord!

**OUR SERVICES INCLUDE:**
- Marketing, listing and showing properties
- Answering lease enquiries
- Tenant screening, pre-qualifying, negotiating lease and finding the right tenant
- Property inspections before and after renting
- Handle tenant enquiries
- rent collection and deposit to Landlord
- Eviction of bad tenants
- Scheduling Maintenance and repairs of property
- Year end accounting
- Renewal of lease
- Market value update

**You can relax while we take care of your investment property!**

WATSON PROPERTY MANAGEMENT LTD

Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
111 Grangeway Ave. Suit #301
(RBC Building) Toronto, ON M1H 3E9

## பரத நாட்டிய வகுப்புக்கள்

*Ajax, Kennedy & Eglinton,* ஐய்யப்பன் கோவில், *Kennedy & Ellesmere* ஆகிய இடங்களில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கௌரி பாபு. *gowri-babu@hotmail.com*

தொடர்புகளுக்கு: ***905.943.9655 / 416.434.9655***

## பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்

### 24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை



பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும் ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும் கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்

**416.613.1840 / 647.272.6993**

birdsilvergardens@gmail.com

16 Birdsilvergardens, Scarborough ( Port Union & Island Road)

## COMPUTER REPAIR

Laptop,Computer Repair, Virus Removal, Data Recovery, Upgrading, Networking, Printer Problems & Any Other Troubleshooting அனைத்து விதமான Computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

Please Call Varun: **416.894.6244**

## HOUSE FOR SALE

3 அறைகள், 2 Attach Bathroom கொண்ட வீட்டுடன் கூடிய ஏழு perch அறுக்கையான காணி முருகாபுரி, உப்புவெளி, திருகோணமலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **647.545.2632**

## CARS, VANS & TRUCKS WANTED

Any make, Any condition.

Pay top dollars.

Contact: **416.835.3475**

## RESTAURANT FOR SALE / RENT

***NEWLY RENOVATED RESTAURANT IN BANCROFT*** with all equipments & appliances. Two housrs drive from toronto. Very low rent / 33 seats dine in / LLB license.

CONTACT: ***416.230.0848***


மேலும் பக்கங்கள் 28, 29, 30, 31, 32, 34, 35


வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## COMPANION WANTED

hardworking healthy educated senior looking for healthy lonely kind senior lady under 72to offer help in running a small business and to live together as a companion should have good general knowledge and be able to talk and discuss current world news if you think that you are the friend i am looking for please contact:-

**416.624.4197** or email:- **siva1045@hotmail.com**

## வேலைக்கு ஆட்கள் தேவை

### MARKHAM & STEELES

LINGAM CREAM HOUSE

- ✓ Full time / Part time Cook
- ✓ Srilankan / South Indian Cook
- ✓ Dish Washer
- ✓ அப்பம் செய்யத் தெரிந்தவர்கள்

முழு நேர/ பகுதி நேர வேலைக்கு ஆட்கள் தேவை

தொடர்புகளுக்கு:

**416.879.4190**

LINGAM CREAM HOUSE

6055 Steeles Ave. E., Scarborough ON M1X 0A7

## JOB JOB JOB

***PHARMACY & FINCH /MIDDLEFIELD & FINCH*** பகுதியில் உணவகம் ஒன்றிற்கு Cashier, Srilankan style cook & Helper வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

நேரில் வந்து Apply செய்யவும். தொடர்புகளுக்கு: ***416.318.9866***


# நாமும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

உருவாகியுள்ளது. ஏறக்குறைய 125,000 புதிய குடும்பங்கள் வருடாவருடம் உருவாகிய தாகக் கொள்ளலாம். இவற்றில் 30% ரொறன்ரோ பெரும்பாகத்தில் ஏற்பட்டுள்ளது. அதாவது 35,000ஆகக் கொள்ளலாம். கடந்த வருடத்தில் 15,000 குறைவான புதி தாக நிர்மாணித்த ஆதனங்களே மக்களுக் குக் கையளிக்கப்பட்டது. இதுவும் வாடகை அதிகரிப்பிற்கு காரணமாகலாம். இதனைவிட மாணவர்களின் இருப்பிடம் வேறு. புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு, கொள்வனவு செய்யப்பட்ட பல மனைகள் வாடகைக்கு கொடுக்கப்படாமலே (Vacant) இருக்கின்றது.

1971ஆம் ஆண்டிலிருந்து வீட்டு உரிமையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வந்தது. கடந்த வருடம் (2017) முதல் தடவையாக சொந்தமாக வீடு, மனை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 68.9% இலிருந்து 67.8% ஆகக் குறைந்துள்ளது. அதாவது சொந்தமாக வாங்குவதை விட, வாடகைக்கு இருப்பது வசதியாகப் பலருக்குக் காணப்படுகின்றது. அத்துடன் வாங்குவது இலகுவாக இல்லை. விலை அதிகரிப்பு, அடமானக் கடன் பெறுவதில் ஏற்பட்ட நெருக்கடி,



ஆதன விலை அதிகரிப்பு, வாடகை அதிகரிப்பு போன்றன எதிர்காலத்தில் ஆதனத்தை சொந்த மாக்குவதில் நெருக்கடியை மேலும் ஏற்படுத்தலாம். பெற்றோரின் உதவிக்கரம் வீடு கொள்வனவுக்கு பாலமாக அமையலாம். புதியவரவாளர்களின் நிலைமை...கேள்விக்குறி?

# குழந்தைகள் பராமரிப்பாளர் தேவை

# SCARBOROUGH

4 & 3 வயதுக் குழந்தைகளை பராமரிக்க, சமையல் செய்ய தெரிந்த பெண் பராமரிப்பாளர் **Full Time** ஆகத் தேவை.

தொடர்புகளுக்கு : **905.449.5859**



# JOB JOB JOB

## PRK DOORS & WINDOWS

***(MARKHAM & PROGRESS AVE)***

தொழிற்சாலைக்கு மரவேலை செய்வதற்கும் மற்றும் Saturday & Sunday Outside General Helper

Design glass Making and sealing

அனுபவமுள்ள நிரந்தர வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

**(416)875.4119**



# அனைத்து விதமான MOVING & DUMP TRUCK சேவைகளை

தமிழில் உரையாடி பெற்றுக்கொள்ள



**DUMP TRUCK Servise**

- Demolition and removal
- Construction Cleanout
- Appliance & Electronic Removal
- Estate Cleanout
- Dumpster Bins
- Garbage Removal
- Junk Removal



**KNF**

DUMP TRUCK & MOVING

**MOVING Servise**

- Residential & Commercial
- Short & Long Distance
- Loading & Unloading
- Packing & Arrangement
- Equipment Moving

SUTHAN : 647.680.4290 KANNAN : 416.274.8890

KNFontario@gmail.com 11 Barr Rd, Ajax ON L1S 3X9



RAJEE
BEAUTY SALON & SPA
8th Year Anniversary Special
LADIES, GENTS & KIDS
HAIR CUT
ANY STYLE
$8.00
Bring this coupon
346 Main Street North, Markham L3P 1Z1
( Markham & 16th Ave., South of 16th )
647.867.5696 905. 554.2425

Office administrator wanted

We are currently looking for a full-time Office Administrator to manage our day to day Mortgage/Real Estate files. Our office is looking to grow and we are looking for a motivated and enthusiastic new addition to our team!

- Strong communication skills, verbal and written
- Familiar with Google Applications and Microsoft Office
- Very strong attention to detail with the ability to multitask
- Ability to work in a challenging and dynamic environment


Please Contact:
416-997-3862

# EDUCATION

## Review Questions18- 10

➢ (1) PHYSICS 12

A plane flying horizontally at 800 km/h banks to make a turn as shown below.
Determine the radius of the turn?




➢ (2) ADVANCED FUNCTIONS 12

(i) Find the solution,

(a) $|x^2 - x - 3| = -x + 3$

(b) $|3x + 8| = |2x - 3|$

➢ (3) FUNCTION -11

For what value (s) of K , the following function has no real roots. $f_{(x)} = k x^2 - 6x + k$

➢ (4) CHEMISTRY 12

(i) Balance the following incomplete red-ox reactions,

Balance the equation in acidic solution

$FeS + NO_3^- + H^+ \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$


$Cr_2O_7^{2-}(aq) + HCl(g) \rightarrow Cr^{3+}(aq) + Cl_2(g)$

(ii) A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

| (3)CHEMISTRY 12<br>Ans. In next issue 15-11 | KEEN TUTORING CENTRE |
|---|---|

## Answer Key : 18-10

➢ (1) PHYSICS 12




$F_w \sin\theta = \frac{mv^2}{r}$ ; $F_w \cos\theta = mg$

$$\frac{F_w \sin\theta}{F_g \cos\theta} = \frac{\frac{mv^2}{r}}{mg}$$

$$\tan\theta = \frac{v^2}{rg}$$

$$r = \frac{v^2}{g\tan\theta}$$

If V = 800km/h and θ = 30°

Radius = 8728m

Radius of the turn 9km

➢ (2) ADVANCED FUNCTIONS 12

a) $|x^2 - x - 3| > 0$ or $|x^2 - x - 3| < 0$

if $x^2 - x - 3 = -x + 5$ ; $x^2 = 8$

$x = \pm 2\sqrt{2}$

if $-(x^2 - x - 3) = -x + 5$

$-x^2 + x + 3) = -x + 5$

$-x^2 + 2x - 2 = 0$ ; no solution

(b) $|3x + 8| = |2x - 3|$

Both become equal when ,

3x +8 = 2 x- 3 or 3x +8 = - (2x -3)

x = 11 or x = - 1

➢ (3) FUNCTION (Gr 11)

$f_{(x)} = k x^2 - 6x + k$

Ans :K < 3

# உலகின்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

நெருக்கடிகள் ஆசிய நெருக்கடியின் தொடர் வினைகளாகவே அமைந்தா. ஐரோப்பாவில் உள்ள பழைய முன்னேறிய கைத்தொழில் நாடுகள் மீதும் இப்பாதிப்பு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஐக்கிய அமெரிக்காவிலிருந்த ஆசிய நிதி நெருக்கடி பற்றி புகழ்பெற்ற பல பொருளாதார நிபுணர்கள் ஐக்கிய அமெரிக்க நலன்களின் அடிப்படையில் விளக்கமளித்து வந்ததாக ஜேம்ஸ் (Harold James 2017) தெரிவித்துள்ளார்.

**9. ஆசிய நிதி நெருக்கடிக்கு பின் வரும் காரணிகள் பொறுப்பாயிருந்ததாக கருதப்பட்டது.**

- மூலதன சந்தை பாய்ச்சல்கள் சடுதியாக நிறுத்தப்பட்டமை.
- பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டம் நாடுகள் மீது வலியுறுத்தப்பட்டமை.
- பேரம்பேசும் விலையில் பலமான பிராந்தியங்களை மேற்கு நிறுவனங்கள் பெற்றுக்கொண்டமை.

இந்த நெருக்கடி உலக வங்கிமீது அவநம்பிக்கை கொள்ளச் செய்யும் பல நிலைமைகளை உருவாக்கிவிட்டது. அவை நெருக்கடியின் தொடக்ககாலத்தில் ஆசிய பிரதேச அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு ஆசிய நாணயநிதியம் (Asian Monetary Fund (AMF) ஒன்றை தொடக்க முனைப்பைக் காட்டியது. ஆனால் ஐக்கிய அமெரிக்காவின் எதிர்ப்பினால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

1990இல் பெரிய ஆசிய நாடுகள் தொடர்ந்தும் சர்வதேச நாணயநிதியத்தில் தங்கியிருக்க விரும்பவில்லை. அதிகளவு அந்நியச் செலவாணி மிகைகளால் உருவாக்கப்படும் அந்நியச் செலவாணி ஒதுக்குகளை உருவாக்கி தங்களில் தாங்கள் தங்கியிருக்கும் நிலைமையை உருவாக்க முனைந்தன.



நாணய பெறுமதியை குறைவாகக் கொண்ட நாடுகள் தமது வர்த்தக ஏற்றுமதியை முன்னேற்றுவதற்குரிய நிலை உருவானது. இதனால் சீனா, மற்றும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் சென்மதி நிலுவையில் மிகைகள் உருவாகின. அதேசமயம் அமெரிக்கா மற்றும் கைத்தொழில் நாடுகள் சிலவற்றிலும் அந்நிய செலவாணி நடைமுறைக்கணக்கில் பற்றாக்குறைகள் உருவாகின.

பிராந்திய வசதிகளை உருவாக்கும் முயற்சியை சீனா முன்தள்ளியது. இது ஆசிய நாணய நிதியம் தொடர்பான 1990களின் முயற்சியின் மற்றொரு வடிவமாக காணப்பட்டது. சீனா, ஜப்பான், தென்கொரியா என்பவற்றுடன் தென்கிழக்காசியாவின் பத்து நாடுகளும் இருப்பக்க உடன்பாடுகளின்படி அந்நியச் செலவாணியை கடனாகப் பெறுகின்ற ஏற்பாடுகள் 2000இல் தொடங்கின. 2008இல் உலகநிதி நெருக்கடிகள் உருவாகின. குழு 20ஐச் சேர்ந்த நாடுகள் ஒன்றுகூடின. இதில் முன்னேறிய நாடுகளும் மேற்கிளம்பி வரும் சந்தைப் பொருளாதார நாடுகளும் காணப்பட்டன. அமெரிக்காவில, வோஷிங்டனில் முதலாவது கூட்டம் கூட்டப்பட்டது. இந்த நிதி நெருக்கடிகளினால் பிராந்திய முனைப்புக்கள் மேற்கிளம்பின. 'பிரிக்ஸ் வங்கி' (Brics Bank) என்றழைக்கப்பட்ட புதிய அபிவிருத்தி வங்கி 2013இல் தொடங்கியது. ஆசிய உட்கட்டமைப்பு வங்கி 2016இல் உருவானது.

பல்பக்க ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு முறைகள் பலவீனமடைந்தன. இதற்கு மாறாக சர்வதேச ஒழுங்கமைப்பை பன்முகப்படுத்தும் போக்கு அதிகரிக்கலாயிற்று.

ஐரோப்பிய நாணய முறைமை (European Monetary Stystem) உருவாக்கும் முயற்சிகள் பற்றிய எத்தனங்கள் அதிகரித்தன. இவை பிறெற்றன்வூட்ஸ் முறைமை ஐரோப்பிய மயப்படுத்தும் ஒரு முனைப்பாகவும் நோக்கப்பட்டது.

2012இல் ஐரோப்பிய உறுதிப்பாட்டுக்கான பொறிமுறை (European Stability Mechanism) உருவாக்கப்பட்டது. ஐரோப்பிய யூனியனது அங்கத்துவ நாடுகளுக்கு நிதி நெருக்கடி ஏற்படும் நேரங்களில் நிதி உதவி வழங்கும் நோக்கத்துடன் இது உருவாக்கப்பட்டது. இதுகூட ஐரோப்பிய நாணயநிதியம் (Europeau Monetary Fund) ஒன்றை ஏற்படுத்தும் முயற்சி போலவே நோக்கப்பட்டது.

11. - பல்வேறு புவியியல் பிரதேசங்களில் இவ்வாறு உருவாகுமாயின் இவை எவ்வாறு உலக நிறுவனங்கள் (Global Institution) ளுடன் இணைந்து இயங்க முடியும் என்பது கேள்வியாகும். ஆசிய நிதி நெருக்கடி ரஷ்யா, பிறேசில் போன்ற நாடுகளுக்கும் பரவிச் செல்லும் நிலையில் பிராந்திய ஏற்பாடுகள் திறமையாக செயல்படுவதிலான நெருக்கடிகள் பற்றிய கேள்விகளும் மேலெழுந்தன.

இத்தகைய பல்வேறு பிரச்சினைகளும் கோளமயமாதலுக்கு எதிரான தாக்கல்களையும் வலுப்பெறச் செய்யலாயின.

(தொடரும்)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc

- கழுத்து,
- முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

*WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:*

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

***HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING***

| | | | |
|---|---|---|---|
| *Cough* | *Gout* | *Diabetes* | *Stumatitis* |
| *Flu* | *Arthritis* | *Cystitis* | *Colitis* |
| *Depression* | *P.M.S* | *Cancer* | |
| *Anxiety* | *Leucorrhea* | *Prostatitis* | |
| *Asthma* | *Migraines* | *Obesity* | |
| *Tonsillitis* | *Hair Loss* | *Hemorrhoids* | |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*

## வைகாசி மாதம் பதினெட்டை மறப்போமா?




கொதணிக் குண்டுகள் கொடும் போர் ஆயுதங்கள்
கொட்டிக் கொட்டி மக்களைக் கொன்றொழித்த
கொடிய மாதம் அந்த வைகாசியை மறப்போமா?

முன்னணி நாடுகளின் முப்படைகளும் சேர்ந்து நின்று
முள்ளி வாய்க்கால் முனையில் முப்பதினாயிரம் உயிர்களை
கொன்றொழித்த அந்தக் கொடியமாதம் வைகாசியை
மறப்போமா?

குற்றுயிரோடும் குட்டைக்கால் கைகளோடும் இருந்தவர்களை
குழறக் குழறக் குழிகளுக்குள் தள்ளி மூடிய அந்த
கொடியமாதம் வைகாசியை மறந்து வாழ்வோமா?

பால்குடி மறவாத பாலர்களையும் பச்சிளம் குழந்தைகளையும்
பட்டினி போட்டும், பச்சடி ஆக்கியும் பாதகமாக
படுகொலை செய்த கொடியமாதம் கைகாசியை மறப்போமா

பாதுகாப்பு வலயம் என்று பலரையும் உள்வரவணைத்து
பட்டினியில் வாட்டியும் பாலியல் துன்புறுத்தல் செய்தும்
படுகொலை செய்த அந்த வைகாசியை மறப்போமா

அபயம் கேட்டு ஓடிச் சென்று சரண் அடைந்த அந்த அங்கவீன
அபலைகளை கம்பிக் கூட்டில் அடைத்து அல்லல் படுத்திய
அந்தமாதம் வைகாசி மறப்போமா!



கவிநாதம் பரந்தாமன்

# யாழ்ப்பாணத்தில் சின்னமேள ஆடற்கலை 'தொன்மம்'

- ரதன் -

ஆய்வறிஞர் விபரம் -

திருமதி. வலன்ரீனா இளங்கோவன்
B.A (Hons), PGD. Edu, M.A(Dist)
முதுதத்துவமாணி பட்ட ஆய்வாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
பேராசிரியர்.மா. வேதநாதன்,
இந்துநாகரிகத்துறை, கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம், இலங்கை.

**தாக்கு திறன் மிக்க கலையாகச் சின்னமேளம்** - திருவிழாக்களில் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களை அழைக்கும் நிலை ஏற்பட்டது. ஒரே நேரத்தில் பல மேடைகளில் சின்னமேள நிகழ்வுகள் இடம்பெறலாயின. மேலும் சின்னமேள ஆடல் மகளிரை கண்டி, கொழும்பு, மட்டக்களப்பு, நாவலப்பிட்டி, புத்தளம், ஹற்றன், மாத்தளை, அம்பாறை என இலங்கையின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று நிகழ்ச்சிகள் நடத்துவது வழக்கமாக இருந்தது.

சின்னமேள ஆடற்கலை கோயில் திருவிழாக்களில் முக்கிய இடம்பெற்ற வேளையில், கோயில்களில் ஆடுவதற்கு குழுக்களின் தொகை போதாத போதும், ஓர் இரவில் பல கோவில்களுக்கு சென்று ஆடவேண்டிய நிலை ஏற்பட்ட போதும், இந்நிகழ்வுகளை இரவில் ஆற்றுகை செய்வதற்கு நேரம் போதாது இருந்தமையாலும் பகலிலே இந்நிகழ்வுகளை நடத்தும் நிலையும் ஏற்பட்டது. நிகழ்வுகள் இரவில் நடைபெறும்போது மக்கள் இரவிரவாக கண்விழித்திருந்து உற்சாகமாக இந்நிகழ்வுகளை பார்த்தார்கள் என்று கூறப்படுகின்றது. அத்தோடு இந்நடனத்தை ஆடும் பெண்களுக்கு பரிசுப் பொருட்களை உபயகாரரும் பொதுமக்களும் அள்ளி வழங்கியதாகக் குறிப்பிட்டார்கள். அக்கால இளைஞர்கள் இந்நிகழ்வுகளைப் பார்ப்பதற்கு பெற்றோருக்குத் தெரியாமல் சென்று பார்ப்பதாகவும் பல முதியவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவங்களை ஆறுமுககநாவலரும் "பற்பல மாணவர்கள் இராத்திரியிலே திருவிழா என்றோடிச் சனக்கூட்டத்திலே நெருங்குண்டு தள்ளுண்டு அடியுண்டு நுழைந்து தாசிகளுடைய நாட்டிய கீதங்களை பார்த்துங் கேட்டுங் கெட்ட வார்த்தைகளுங் கெட்ட செய்கைகளும் பழகிக் கொண்டதும் அவர்கள் இராப்பாடமும் இழந்து இருபது இருபத்தைந்து நாளிகை வரையும் நித்திரை இழந்து;.." எனக் கண்டித்துக் கூறியிருக்கின்றார். இவ்வாறே சின்னமேள ஆடல் நிகழ்வுகள் இளைஞர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தமை புலனாகின்றது.

**சின்னமேளத்தின் உச்சக்காலம்** - யாழ்ப்பாணத்தில் 1930 முதல் 1960 வரை சின்னமேளத்தின் உச்சக்காலம் எனக் குறிப்பிடலாம். கோயில்களில் இவ் ஆடலை ஆடுவதற்கு தமிழக ஆடல் மகளிரின் தொகை போதாது இருந்தமையும், 1960 களில் இந்தியாவில் இருந்து இங்குவந்து போவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாகவும் புதிய நிலை ஒன்று தோன்றியது. இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் இந்துக்கோயில்களில் ஆடல் நிகழ்வுகளை நடத்துவதற்கு இன, மத, பேதமின்றி பெண்களை அழைத்து ஆடல்களை ஆடப்பழக்கி கோவில்களில் ஆடுவதற்குரிய ஒழுங்குகளை சின்னமேள செற் உரிமையாளர்கள் மேற்கொண்டனர்.

இவ்வாறு புத்தளத்தில் இருந்து கிறிஸ்தவரான றீற்றா, கொழும்பைச் சேர்ந்த சிங்களப் பெண் "நோனா", பறங்கி இனத்தைச் சேர்ந்த "அன்ரா" போன்றோரும், புத்தளத்தைச் சேர்ந்த றலி, நல்லி, மாத்தளை சறோசா, சிலாபம் கனகா, முல்லைச் சகோதரிகள், கிளிநொச்சி சரசுவதி, மட்டக்களப்பு சறோசா, கொழும்பைச் சேர்ந்த சறோ, கனகா, சசிகலா, சந்தானலக்சுமி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.



சின்னமேளத்துறை வறுமையில் வாடிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு பணம் சேர்ப்பதற்கு சுலபமான ஒரு வழியாக விளங்கியமையால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள சிலரும் சின்னமேளம் ஆட ஆரம்பித்தனர். இவ்வாறானவர்களில் நாகேஸ்வரி, நாகபூசணி, சறோசா, அம்பிகா, ராணி, மல்லிகா, அன்னம்மா, சிவகாமி, கன்னிகா பரமேஸ்வரி, நீலாம்பிகை, புஸ்பாம்பிகை, நகுலாம்பிகை, லக்சுமி, விஜயா, சுப்புலக்சுமி, விசாலினி, கானசரஸ்வதி, சீதாலக்சுமி, மகாலக்சுமி, ஜனா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இக்காலப்பகுதியில் சாஸ்திரியமாக ஆடப்பட்டு வந்த சின்னமேள ஆடற்கலையானது திசைமாறி திரைப்படங்களின் செல்வாக்கால் திரைப்படப்பாணியில் உச்சக்கட்டத்தை அடைந்தமையை நோக்க முடிந்தது. அத்தோடு சின்னமேள ஆடற்கலையானது வேறொரு பாணியில் திசை திரும்ப வழி வகுத்தது. திரைப்படப் பாடல்களுக்கு ஆடுவது அக்கால மக்களுக்கு இரசனையைக் கொடுத்ததால் இப்பாடல்களுக்கு ஆடல்களை ஆடுவதையே மக்கள் பெரிதும் விரும்பினர். இரசிகர்கள் "இன்னுமொரு முறை, இன்னுமொருமுறை" என்றும் "மேலும் ஒன்று மேலும் ஒன்று" என்று கோரிக்கை விடுப்பதும் அவர்களது கோரிக்கையை நடனமகளிர் நிறைவேற்றுவதும் அக்காலத்தில் சர்வசாதாரணமாக இருந்தது. சின்னமேளம் "நேயர் விருப்ப நிகழ்ச்சியாக" மாறியிருந்தது. இவ்வாறான நிகழ்ச்சிகள் இல்லாவிடில் திருவிழா உயிர்ப்பற்றதாகக் காணப்பட்டது.

சின்னமேள ஆடல்களில் சாஸ்திரிய நடனங்களுடன் சாகசச் செயல்கள் செய்து ஆடுவது, மேலைத்தேச பொப்பிசைப் பாடல்களுக்கு ஆடுவது போன்ற நடனங்களும் ஆடப்பட்டதுடன் லைற் நடனங்கள், ஆடைகளைக் கழற்றி ஆடும் துகிலுரி நடனமான "காபறே" நடனங்கள் என்பவற்றையும் ஆடி ஆடல்மகளிர் பணம் சம்பாதிக்கும் நிலை ஏற்பட்டது. இதனை மக்கள் விரும்பியமையாலும், ஆண்கள் இந்நடனமாடும் பெண்களுக்கு பரிசுகளை வாரி வழங்கியமையாலும் ஆடல்மகளிரும் அவர்களது வறுமையின் காரணமாக தமது மனம்போன போக்கில் மாற்றங்களைப் புகுத்தி நெறி தவறி ஆடினனர் என்று அறியப்படுகின்றது.

**சின்னமேள ஆடற்கலையின் வீழ்ச்சியும் பின்புலமும்** - 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து சின்னமேள ஆடற்கலை வளர்ச்சியடைந்தது. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் புதிய மாற்றங்களைப் பெற்று ஒப்பற்ற மக்கள் கலையாக உயர்ச்சி பெற்ற காலப்பகுதியிலேயே அக்கலையின் வீழ்ச்சிக்கான காரணிகளும் எதிர் நிலையாக வளர்ந்து வந்தன. இருபதாம் நூற்றாண்டின் முன் ஆலயக் கிரியைகளில் இணைந்திருந்த இவ் ஆடற்கலையினால் ஏற்பட்ட தீமைகள் எண்ணில் அடங்காதவை. இத்தீமைகளை கண்ணுற்ற பல பெரியார்கள் இக்கலையை தீவிரமாகக் கண்டித்து ஒதுக்க முயன்றார்கள். இவ்வாறு கண்டனங்களை மேற்கொண்டோரில் ஆறுமுகநாவலர் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது யாழ்ப்பாணச் சமயநிலை என்னும் நூலிலே,

"சைவசமயிகளே! உங்கள் கோயில்களில் பொதுமகளிருடைய நடன, சங்கீத, வாண விளையாட்டு முதலியவற்றை ஒழித்து விடுங்கள். நிர்வாணமாயும் காமத்தை வளர்ப்பதற்கு ஏதுவாயும் உள்ள பிரதிமைகளையும், படங்களையும் அமைப்பியாது ஒழியுங்கள். சைவப்பிரசங்கங்கள், வேதபாராயணம், தேவார திருவாசக பாராயணம் முதலியவற்றை செய்யுங்கள்;" என்று கண்டித்தார். (ஆறுமுகநாவலர் 2017:29)

1930ஆம் ஆண்டின் பின்னர் இக்கலையானது பணம் சம்பாதிப்பதற்குரிய ஒரு துறையாக மாறியமை, சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களினால், மக்களுடைய வாழ்க்கை நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள், சனத்தொகை அதிகரித்தமை, திரைப்படங்கள் தோன்றிச் செல்வாக்குச் செலுத்தியமை, மேலைத்தேச கலைகளின் செல்வாக்கு போன்றவை இப்பாரம்பரியக் கலையின் அழிவிற்கு வழிவகுத்த காரணிகள் ஆயின. மேலும் இலவசக்கல்வியின் தோற்றத்தினால் குறிப்பாக பெண்கள் கல்விஅறிவு பெற்று வந்தமையால் இக்கலையை வெறுத்து ஒதுக்குகின்ற ஒரு நிலை பெண்கள் மத்தியில் தீவிரமாக ஏற்பட்டதாகத் தெரிகின்றது. தேவதாசிகள் தடைச்சட்டம், சிங்களத் தடைச்சட்டம், செந்நெறிநாட்டியக் கலையின் பரம்பலும், வளர்ச்சியும், இன உணர்வு வளர்ச்சி, தமிழின உரிமைப் போராட்டம் போன்ற காரணிகளும் இக்கலைவடிவத்தின் வீழ்ச்சிக்கு காரணங்களாக அமைந்தன.

**ஆணாதிக்கமும் ஆடல்மகளிரின் அவலநிலையும்** - ஆரம்பத்தில் தெய்வீகக் கலையாக ஆலயங்களில் ஆடப்பட்டு வந்த இவ்ஆடற்கலையானது ஆண்களின் தவறான பார்வையாலும் அணுகுமுறைகளாலும் வீழ்ச்சி கண்டது. ஆடல் மகளிரின் வறுமையினையும், சமூக ஆதரவற்ற நிலையையும் சாதகமாகப் பயன்படுத்தி பாலியல் இச்சைக்கு பலிக்கடாவாக்கியதன் விளைவாக இக்கலை நலிவடையத் தொடங்கியது.

சாஸ்திரிய நிலைப்பட்ட கலைகளின் எழுச்சி அவை உயர்நிலைப்பட்ட மக்களின் குறிப்பாக யாழ்ப்பாண உயர் வேளாளரின் ஆதரவைப் பெற்றதால் பெரும்பாலும் அடிநிலை சமூகப் பெண்களால் ஆடப்பட்ட சின்னமேள நாட்டியக்கலை ஒடுக்கப்பட்ட கலையாக கணிக்கும் மரபு உண்டானது.

ஆறுமுகநாவலர் போன்ற சமூக சமயப் பெரியார்கள், சைவசமயிகளின் சமூக அந்தஸ்தும் சமயப் புனிதமும் இழக்கப்படுவதற்கு இத்தகைய சின்னமேள ஆடலும், அதனை ஆடும் பெண்களும் காரணம் எனவும் கூறப்படுகின்றது. இதனால் சின்னமேளக்கலை அதன் ஆடுகளமான கோயில்களை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சின்னமேளக்கலையின் முதற்களமாக இருந்த வண்ணார்பண்ணை சிவன்கோவிலில் நாவலரின் எதிர்ப்பும் ஆரம்பமானது. காலகதியில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நல்லூர் கந்தசுவாமி கோவில், சுட்டிபுரம் அம்மன் கோவில் உள்ளிட்ட எழுபதுக்கு மேற்பட்ட ஆலயங்களிலும் சின்னமேளக்கலை தடைசெய்யப்பட்டது. இதனால் ஏதிலிகள் ஆக்கப்பட்ட சின்னமேள ஆடல்மகளிர் தமது வாழ்வுக்கான புதிய சூழலை தேடவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் ஆடல்மகளிரிற் சிலர் ஆவிக்குரிய கிறிஸ்தவ சபைகளுக்கு மதம்மாறி புதிய வாழ்க்கையை ஆரம்பித்தனர். யாழ்ப்பாணத்து முதலாளிமார்களில் சிலர் அவர்களை தங்கள் காதற்பரத்தையராக ஆக்கிக் கொண்டனர். பாலியல் அடிமைகளாக நடத்தினனர். அதனாலும் சின்னமேளக் கலைஞர்கள் மீதான சமூகத்தின்பார்வை மாறாத தடையாகக் காணப்பட்டது. இம்மகளிர் இன்று முதியவர்கள் ஆகிவிட்ட சூழலிலும் கூட அவர்களின் மீதும் அவர்களின் தலைமுறையினர் மீதும் இப்பழி நீங்கவில்லை. ஒருகாலத்தில் உன்னத கலைஞராக விளங்கிய இவர்கள் இன்று தாம் சின்னமேளக் கலைஞர் என்று கூறமுடியாத அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சமகாலத்தில் சின்னமேளம் குறித்து எழுந்த இலக்கியப்

(தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)

# யாழ்ப்பாணத்தில்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

பதிவுகள் கூட இக்கலையை இழிவுபடுத்துவனவாகவே எழுந்துள்ளன. இதற்குக் காரணம் இவற்றை எழுதியவர்களும் ஆண்களே. எடுத்துக்காட்டாக நட்டுவச் சுப்பையனார் எழுதிய "கனகிபுராணம்" கனகி என்னும் ஆடல் மகளின் ஆடற்கலை நுட்பங்களைக் கூறாமல் அவளிடம் வந்து சென்ற உயர்வர்க்கத்தினரைப் பட்டியலிடுவதாக அமைந்துள்ளது.

"நட்டுவ னொருவனாலே நாடகசாலை வந்தாள்
செட்டியில் ஒருவன் பட்டான் சேணியர் இருவர் பட்டார்
மட்டுவில் குருக்கள் பட்டார் கொக்குவிற் சுப்பன் பட்டார்
மட்டிகள் இவரைப் போலப் பட்டவர் பலபேர் அம்மா"

என்று கூறப்படுகின்றது. (சிவலிங்கராஜா 2003:118).

இப்புராணத்தைக் கூட ஆண்கள் விட்டு வைக்கவில்லை. இப்புராணத்தின் சில பாடல்களே இன்று எமக்குக் கிடைக்கின்றன. ஏனையவை இருட்டடிப்புச் செய்யப்பட்டதாக கலாநிதி.எஸ். சிவலிங்கராஜா குறிப்பிடுவது இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது. சமயப் பெரியார்களின் தூரநோக்கற்ற கண்டனங்களும் புனிதமான இக்கலைமரபு அழிந்து போவதற்கு காரணமாக அமைகின்றது. இக் காரணங்களால் தாங்கள் ஒரு சின்னமேளக் கலைஞர் என்று தம்மை வெளிப்படுத்த தயக்கம் காட்டும் நிலையையும் சின்னமேள ஆடல் மகளிரிடம் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

முடிவுரை - யாழ்ப்பாணத்தில் பெண்கள் மீதான ஆணாதிக்க சமூகத்தின் செயல்களும், ஒடுக்கு முறைகளும், பாலியல் வன்மங்களும் புனிதமான ஒரு கோயிற்கலை



மரபு அழிந்துபோவதற்கு காரணமாக அமைந்திருந்தது என்பதனை அறிய முடிகின்றது. இறைவனுக்கு வழிபாடாற்றும் வழிபாட்டு முறையில் இருந்த ஓர் ஆடல்மரபு பல்வேறுபட்ட காரணங்களினால் கைவிடப்பட்டமை உணரப்பட்டுள்ள இவ்வேளையில் இறைவனுக்கு வழிபாட்டின்போது மீண்டும் இவ் ஆடற்கிரியை நடைபெறவும், மறுமலர்ச்சி அடையவும் வழிசமைக்கப்பட வேண்டும் என்ற தேவை உணரப்படுவது காலத்தின் தேவை என்பதுடன் அது யாழ்ப்பாணத்தின் தனித்துவ மரபு என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

தேமொழி அவர்களால் மின்தமிழ் கூகுள் குழுமத்தில் மீள்பகிர்வு செய்யப்பட்டதை நன்றியோடு நினைவுபடுத்தி இங்கு தருகிறேன்

துணை நூல்கள்:

1) நட்டுவச் சுப்பையனார் (பதிப்பாசிரியர் வட்டுக்கோட்டை இராமலிங்கம்)., 1961, கனகி புராணம், சுதந்திரன் அச்சகம், கொழும்பு.
2) சிவத்தம்பி, கா., 2000, யாழ்ப்பாணம் சமூகபண்பாடு கருதுநிலை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3) மகேஸ்வரன், வ., 2011, உருத்திர கணிகையர் கதாசாரத் திரட்டு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
4) பவித்திரா, ஏ., 2006, நடனச் சுவடுகள், உப்புக்குளம், மன்னார்.
5) Raghavan, M.D., Tamil culture in Ceylon, Kalai Nilavan Limited, Shantham, Colombo.co.(N.D)
6) ஸ்ரீராமதேசிகன், எஸ்.என்., 2001இ பரதக்கலைக்களஞ்சியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை.
7) 28.06.1936, தேவாலயங்களும் தேவதாசிகளும், ஈழகேசரி, பரதன்., 07.04.1946, ஆலய நடனம், ஈழகேசரி, ஞாயிறு வார இதழ்.
9) வலன்ரீனா இளங்கோவன்., 2008, யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள், வெற்றிமணி வெளியீடு. ஜேர்மனி.
10) ஆறுமுகநாவலர், 2017, யாழ்ப்பாணத்துச் சமயநிலை, நாவலர் நற்பணி மன்றம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
11) கணேசலிங்கன், செ., 2009, நீண்டபயணம், குமரன் புத்தக இல்லம்.
12) ஸூந்தரம். பி.எம்., 2003, மரபுதந்த மாணிக்கங்கள் டாக்டர்.வே.ராகவன், நிகழ் கலை மையம், சென்னை.
13) சுந்தரம்பிள்ளை காரை., 1990, ஈழத்து இசைநாடக வரலாறு, கழக வெளியீடு.
14) சிவசாமி, வி., 2005, பரதக்கலை, யாழ்ப்பாணம், இலங்கை.
15) சிவலிங்கராஜா, எஸ்., 2003, ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை.

புகைப்படம் : Palinda Stephen de Silva Collection-A.W.A. Plate: Sinhalese.



# ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமணமாலை
# ஸ்ரீ அபிராமி திருமணமாலை

## கனடாவில் திருமணம் ஆகாத ஆண்கள்

01. 15.08.1987 - பரணி - Software Engineer
02. 10.02.1975 - ரோகினி - Bank Loan எடுத்துக் கொடுப்பவர்
03. 15.11.1986 - அச்சுவினி - Bank
04. 27.06.1983 - உத்தராடம் - College, C. Manager
05. 14.03.1990 - சித்திரை 4ஆம் பாதம் - Auto Engineer
06. 29.11.1988 - ஆயிலியம் - Electrical Engineer
07. 23.08.1984 - திருவாதிரை - ST. College - Manager
08. 06.12.1986 - திருவோணம் - UK - College
09. 05.08.1987 - கேட்டை - No PR
10. 04.08.1990 - உத்தராடம் - வன்கூவர் - அரசாங்க வேலை
11. 14.03.1981 - திருவாதிரை - College - TD Bank
12. 19.07.1991 - சுவாதி - பூ வேலை
13. 28.06.1987 - பூசம் - College - Canada Post
14. 07.06.1983 - அச்சுவினி - Computer Science
15. 15.07.1982 - பரணி - College Sysco Work
16. 18.09.1979 - மகம் - Global bank
17. 27.07.1982 - சித்திரை - மொன்றியல் - Elite parts company
18. 14.10.1982 - பூரம் - B.Com. - CGA, CPA - ATC
19. 07.06.1983 - அச்சுவினி - Computer Science

## கனடாவில் திருமணம் ஆகாத பெண்கள்

01. 28.08.1983 - அச்சுவினி - University - Store Manager
02. 23.09.1989 - புனர்பூசம் - TD Bank - A-c
03. 12.07.1990 - பூரட்டாதி - 1ஆம் பாதம் - York University
04. 13.09.1990 - University - B.Sc. - Nursing
05. 05.05.1984 - ஆயிலியம் - Government Job
06. 09.04.1968 - ரேவதி - Daycare Teacher
07. 01.04.1987 - பரணி - Seneca College Job -TD Bank
08. 30.01.1991 - திருவாதிரை York University- Job Education Dept.
09. 26.11.1986 - உத்தரம் 1ஆம் பாதம் - Accountant
10. 13.01.1988 - சுவாதி - Health Office
11. 03.06.1985 - கேட்டை - Nurse
12. 12.07.1990 - பூரட்டாதி
13. 23.09.1989 - புனர்பூசம் - TD Accountant
14. 11.09.1993 - திருவாதிரை - Oshawa University - 5 years Nursing
15. 18.03.1984 - அத்தம் - University - Softer Company

## கனடாவில் விவாகரத்துப்பெற்ற ஆண்கள்

01. 01.08.1976 - அனுசம் - Toronto - Diploma IT working now
02. 05.06.1968 - உத்தரம் - பிள்ளைகள் இல்லை
03. 24.12.1960 - பூரட்டாதி
04. 15.09.1968 - பிள்ளைகள் இல்லை - Government Job
05. 31.01.1984 - உத்தராடம் 2ஆம் பாதம் -High School
06. 01.06.1979 - ஆயிலியம் -பிரான்ஸ் - PR - பிள்ளைகள் இல்லை விரும்பும் நாடு பிரான்ஸ், லண்டன், சுவிஸ், டென்மார்க்
07. 18.10.1986 - Montreal - இரண்டு பிள்ளைகள். 1 ஆண், 1 பெண்

## கனடாவில் விவாகரத்துப்பெற்ற பெண்கள்

01. 12.02.1978 - University - Working
02. 27.10.1987 - பூராடம் - Toronto University - Law Firm
03. 25.08.1975 - உத்தரட்டாதி 4ஆம் பாதம் - Diploma Accountant
04. 29.09.1975 - B.Com. - H.N
05. 15.07.1977 - Christian R.C.

06. 27.10.1981 - University
07. 26.10.1967 - Montreal

**முற்கட்டணம் $25**

## இலங்கையில் திருமணம் ஆகாத ஆண்கள்

01. 21.10.1981 - திருவாதிரை - Civil Engineer- 5 Years Experience
02. 02.01.1993 - அச்சுவினி - O/L Computer Work
03. 26.12.1989 - கேட்டை - B.A அரசு வேலை
04. 09.07.1985 - உத்திரட்டாதி M.A
05. 27.03.1993 - பரணி M.B.A
06. 1987 - Civil Engineer கனடாவிலும், ஊரிலும் பெண் தேடுகிறார்
07. 1989 - Eectrical /Electronic Engineer கனடாவிலும், ஊரிலும் பெண் தேடுகிறார்

## இலங்கையில் திருமணம் ஆகாத பெண்கள்

01. 19.09.1991 - ரேவதி A/L - அப்பா கனடாவில் இருக்கிரார்
02. 18.08.1991 - பூசம் - Commerce - புத்தளம்
03. 03.01.1993 - அச்சுவினி -4 - H.R. Manager Leardership

## விவாகரத்துப்பெற்ற பெண்கள்

01. 1983 - இலங்கை - கனடாவில் வரன் தேடுகிறனர்
02. 05.09.1979 - UK - London
03. 19.11.1978 - UK - London
04. 27.11.1976 - UK - London

## வெளி நாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்

01. 02.11.1991 - பூரம் ஆண் - Dentist -India
02. 10.05.1982 - கேட்டை -ஆண் Ireland - Accountant, கனடா வர விருப்பம், உயரம் 5'6 பிறந்த நேரம் 11:34 PM
03. 23.11.1990 - திருவோணம் ஆண் - கனடாவில் பெண் பார்க்கிறார்கள்.

எங்களிடம் இராகு, கேது, காலசர்ப்ப தோசம், செவ்வாய் குற்றமுள்ள, எந்தக் குற்றமும் இல்லாத ஜாதகங்கள், University, College, Engineers ஆண் பெண் ஜாதகங்கள் படத்துடன் எல்லா வகுப்பினருடைய சில நூறு ஜாதகங்கள் என்வசம் உள்ளன. நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு: **ராம் அலைக்ஸ்சாண்டர்**

***647.389.413 /647.638.5304***

## பிறந்த சிசுக்கள் பராமரிப்பு!

பிறந்த சிசுக்களை தமிழ் மருத்துவ முறையோடு பராமரிக்கத் தெரிந்தவர் 20 வருட அனுபவம் பெற்ற இலங்கைப்பெண்மணி. குழந்தைகள் ஒரு வருடமாகியும் உடல் தேறாமல் இருந்தால் சாப்பாட்டு முறையால் குழந்தைகளை உடல் தேற்றிப் பெறவைக்கக்கூடியவர். குழந்தைகளின் இடுப்புக்குக் கீழ்பகுதிகள் சரியான சக்தி இல்லாத தன்மையால் வரும் சில குறைபாடுகளையும் தீர்த்து வைக்கக்கூடியவர்.

தொடர்புகளுக்கு: ***437.779.4373***

374

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்



நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே....
நீங்கிடாத துன்பம் பெருகுதே.. என்ற பாடல்
முருகேசர் உலகருடன் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது
பின்னணியில் கேட்டுக்கொண்டிருந்தது.



உலகரால் நம்பமுடியவில்லை! சிலவேளைகளில் சில சம்பவங்களை
ஞாபகப்படுத்திக் கேட்கும்பொழுது...
உலகருக்கே ஆச்சரியமாக இருக்கும்.

ஒருசில சந்தர்ப்பங்களில் தான் எங்கே இருப்பதென்பதே தெரியாமல்
உலகு, “நான் இப்ப எங்கையிருக்கின்” எனக் கேட்பார்....
முருகேசரைப்போல பலர் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.



உலகு, தாமோதரத்தின் ஒன்றுவிட்ட சகோதரனையும் விசாரித்தவனாம். நல்ல மறுமொழியில்லை. உயிரோடையிருக்கி-றானோ...இல்லாட்டி...என தழ தழத்த குரலில் கதைக்கமுடியாமல் தடங்க...உலகர் இடைமறித்து முருகேசு நான் நாளைக்கு வர-தனோடை வாறன் என்றபடி ரெலிபோனை வைத்துவிட்டு தனக்குள் சிந்தித்தார். ஐ.நா. விசாரணையில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்? எத்தனை பேர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர்? பதிலில்லை...



நினைவு தினமும் துக்கதினமும் வருடா வருடம் வருகிறது.
பதில் மட்டும் கிடைக்கவில்லை.

நீ...மரம்... நான்... காற்று...
எங்கு விழுந்தாலும் ஏற்றுக்கொள்வேன்.

தென்னை இளம் கீற்றினிலே தாலாட்டும் தென்றலது
தென்னைதனை சாய்த்துவிடும் புயலாக வரும்பொழுது



மலை சாய்ந்து போனால்...சிலையாகலாம்.
மரம் சாய்ந்து போனால்.... விலையாகலாம்.
போன்ற பாடல்களை கேட்கவும் சந்தோசமாகத்தான் இருக்கிறது.

ஆனால் அண்மையில் ரொரன்ரோவில் வீசிய காற்றால் காற்றா? மழையா? புயலா? விழுந்த மரங்கள் நகரசபைக்கு சொந்தமானவை. எனவே அதனால் சேதப்படுத்தப்பட்ட (இறந்த) மக்கள் வீடு வாசல் கடைகள் வாகனங்கள் அது இது என சொல்லிக்கொண்டே போகலாம். வீசிய காற்றைவிட ஐபொட் அகிலா வேகமாக வந்ததை உலகர் கவனித்துவிட்டார்... உலகர் என்ன உற்று நோக்குகிறார் என அவரின் பார்வை சென்ற திசையில் கண்ணோட்டம் விட்டனர் செக்கண்ட புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும்...



கள்வனா என் கணவன்.......!..? என கையில் சிலம்புடன் கண்ணகி பாண்டிய மன்னனிடம் சென்ற காட்சிபோல (படிக்கும் காலத்தில் வீடியோ, யு ரியூப் இல்லாவிட்டாலும் தமிழாசிரியர்கள் அந்தக் காட்சிகளை எங்கள் மனக்கண்முன் கொண்டு...வந்துவிடுவார்கள்)



முகத்தில் போட்ட மேக்கப் எல்லாம் கலைந்து...உள்ளே வந்த ஐபொட் அகிலாண்டேஸ்வரியைப் பார்த்து செக்கண்ட் புளோர் செல்லம்மா என்ன அகிலா உடுப்பெல்லாம்..ஈரம்? எனக்கேட்டு முடிப்பதற்குள் அகிலா! உதென்ன வெறும் குடைப்பிடியோடை வாறாய் என ராசம்மா கேட்க, அகிலா அழுதுகொண்டு “ஐ நெவர் சீ ஏ பாட் வெதர் லைக் ருடே” என்ன காத்து...என்ன மழை... என்ரை குடை...என்ரை குடை.... என்று சொன்னபடி பெலத்து அழ...அகிலா! பிடி கிடக்குத் தானே, டொலர் சொப்பிலை 2 குடை 1 டொலர். சில கடையள்ளை சீனியேர்ஸ் டிஸ்கவுன்ற் குடுக்கினம் என செக்கண்ட் புளோர் செல்லம்மா சொன்னதும்..குடைப்பிடியுடன் சில கம்பிகளையும் எறிந்து விட்டு இது டொலர் சொப் குடையில்லை. என்ரை மாமா கப்பல்லை வேலை செய்யேக்குள்ளை ஜேர்மனியிலை கனோவர் காபரிலை வாங்கி எனக்கு அனுப்பின குடை என்று... சொல்லிக்கொண்டு அகிலா மீண்டும் அழ...

காத்தடிச்சா...கனடாக்குடை கந்தர்மடத்துக்குடை கனோவர் குடையெண்டு பாத்தே அடிக்குது...என முணுமுணுத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.



காத்து அடிச்சு விழுத்திய மரங்களையும் வீட்டுக்கூரைகளையும் இத்தனை அமளி துமளிக்குள்ளும் வட்ஸ்அப் வரதன் வீட்டுக்கூரை போனாலென்ன.....முன்னால் மரம்முறிந்து விழுந்தாலென்ன என பொருட்படுத்தாது.....



போலந்து நாட்டு பெரு வீதியில் 12 தொன் சொக்கிளேற் சோஸ் ஏற்றிச்சென்ற (அதிபார) ட்றக் தடம் புரண்டு வீதி முழுவதும் வழிந்தோடும் செய்தியை செக்கண்ட்புளோர் செல்லம்மாவுக்கு காட்டிக்கொண்டிருந்தார்.




பஞ்சபூதங்கள் உலகை சிதைத்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் உத்திரப்பிரதேசத்தில் தூசிப்புயல். கவாயில் வீதியெல்லாம் தீப்பிளம்புகள். பல இடங்களில் மழை வெள்ளம். பயிர்கள் அறுவடை நேரத்தில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கனடாவில் பிறிட்டிஷ் கொலம்பியாவில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் உற்பத்திப்பொருட்களைப் பாவிக்கவேண்டாம் என அரசு அறிவித்துள்ளது. விளைந்தும் வேளாண்மை வீடு வந்து சேர்வதில்லை.



பல நாடுகளில் வரட்சியால் பயிர்கள் நாசமாகின்றன....
நியூசிலாந்தில் நிலம் பிளந்துள்ளது.

எல்லா செய்திகளையும் வட்ஸ்அப் வரதன்..கிண்டிக்கிளறி எல்லோருக்கும் காட்டிக் கொண்டிருந்தார்.

அத்தனை அமளிக்குள்ளும் செக்கண்ட்புளோர் செல்லம்மா ..ஐ பொட் அகிலாண்டேஸ்வரியின் குடைப் பிரச்சினையை குடைந்து கொண்டிருந்தா... அது சரி அகிலா உன்ரை குடைக்கு வொறன்ரி இருக்கோ? என்று கேட்டுக்கொண்டு திரும்பிப் பார்க்கும் பொழுது அகிலா அங்கு...இல்லை.....
அகிலாண்டேஸ்வரி எங்கே...?
முருகேசரை உலகர் எந்தக்கோணத்தில் பார்க்கிறார்? தன்னுடைய வயதாகினும் நண்பனாக சகோதரனாக தன்னைவிட உயர்ந்தவராக ஓர் ஆலோசகனாக அதற்கும் மேலாக.



உலகு, இயற்கையில்லாமல் உலகமில்லை. மழை வெய்யில் இல்லாமல் விவசாயமில்லை, காய் பிஞ்சு பால் பழமில்லை.

மே..15..31



16. இஸ்லாமியர்களின் புனித றம்ழான் பெருநாள் ஆரம்பம்.



18 போர்க் குற்றநாள் (2009)

20. டைரக்ரர் பாலு மகேந்திரா பிறந்தநாள் (1934 - 2014)



21. விக்ரோறியா டே..விடுமுறை நாள்.

22. 1958 இலங்கையில் இனக்கலவரம். சிங்களக் காடையர்களால் (அரச உதவியுடன்) பல தமிழர்கள் கொல்லப்பட்டு சொத்துக்கள் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டன.





22. 1972-சிலோன் ஸ்ரீ லங்கா எனப்பெயர் மாற்றப்பட்டு குடியரசென.. பிரகடனப்படுத்தியது.



25. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்தநாள் 1878 -1953.
(ஆடிப்பிறப்புக்கு.. நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே)

25. ஆத்மஜோதி நா.முத்தையா நினைவுதினம். 1918 - 1995.



25. சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினம்.

26. 1958 கொழும்பில் இனக்கலவரம் வீடுகள் தீக்கிரை சொத்து சூறையாடப்பட்டதுடன், பலர் கொல்லப்பட்டனர்



31. 1981 மே யாழ்ப்பாணம் பொது நூலகம் பொலீசாரால் அரச உதவியுடன் எரியூட்டப்பட்ட நாள்.



31. புகையிலை எதிர்ப்பு நாள்.

## தமிழ்ப் பூங்காவிற்

## ‘பாடுங்குயில்’ சிறுவர் பாடலரங்கம் - 2018

2014, 2013, 2012, 2011, 2010இல் பிறந்தவர்கள் பங்குபற்றலாம்.
விண்ணப்பங்களைத் தமிழ்ப்பூங்காவிலும், www.thamilpoonka.org
இணையத்திலும் பெற்றுக்கொள்ளலாம். பாடல்கள் விண்ணப்பங்களோடு தரப்படும்.
விண்ணப்ப இறுதி நாள்: மே 31, 2018 பாடல் ஒப்புவிக்கும் நாள்: யூன் 30, 2018

விபரங்களுக்கு: 647.378.3006 / 647.706.6123 / 905.479.5375
3001 Markham Road, # 21, Scarborough, ON (Markham & McNicoll)

# மூலிகை பேசுகிறது

## நெல்லிக்கனி



கடையெழு வள்ளல்களில் கருணைமிகு தொண்டைமான்
கனிவோடு அவ்வைக்குத் தந்தது நெல்லிக்கனி!
மடையிலா வெள்ளமென மானிடரின் நலமதை
மாறாமல் மலர்த்திடும் மருத்துவ தேன்கனி
தடையிலா உயிர்ச்சத்து தந்திடும் தினந்தோறும்
தாயினும் மேலாகத் தன்னிகர் கொண்டிடும்!
விடையிலா மூப்பினை விரட்டியே அடித்திட
வைரமாய் ஒளிர்ந்திட வைட்டமின் தந்திடும்!

ஊணோடு சேர்த்திட உயரிய அறுசுவை
உள்ளங்கை நெல்லியென உடலுக்கு நலமூட்டும்!
தேனோடு ஊறிய தித்திக்கும் நெல்லியால்
தேகத்தை சீராக்கி தீர்க்கமாய் வளமூட்டும்!
வானோரின் அமுதென வைத்தியம் போற்றிட
வளமான ஆரோக்கியம் வழங்கியே பலமூட்டும்!
வீணென நினைத்தே வீசிடும் கொட்டையால்
வைத்திடும் தேனீர் வைத்திய சுகமூட்டும்!



தினமொரு நெல்லியை தொடர்ந்துநீ உண்டிட
தீர்ந்திடும் மலச்சிக்கல் தெரிந்திடு பலனாகும்!
பணமேதும் இல்லாது பறந்திடும் புற்றுநோய்
பயன்படுத்து நெல்லியை பக்குவமாய் குணமாகும்!
உணவோடு நாள்தோறும் ஊறுகாய் சேர்த்திட
உடலுக்குள் கல்லீரல் ஒழுங்கெனப் பணியாற்றும்!
மனதினில் உறுதியாய் மனைக்கொரு நெல்லிமரம்
மண்மீது வைத்திட மாறாது வளம்சேர்க்கும்!

ப. கண்ணன்







Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
நீங்கள்
IPTV BOX
பாவனையாளரா ?
ஒருவருட
இணைப்புச் சந்தா
$144
மட்டுமே
உங்களிடமுள்ள பழைய IPTV BOX களை எங்களிடம்
கையளித்து விசேட விலைச் சலுகையில்
LYCATV ஐ பெற்றுக் கொள்ளுங்கள்
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
TENT KOTTA
1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்
+
SUN NXT
4000 +
திரைப்படங்கள்
35+ HD
தொலைக்காட்சிகள்
புத்தம்புதிய
திரைப்பாடல்கள்
நகைச்சுவை
காட்சிகள்
+
hotstar
தமிழ் | ஹிந்தி | மலையாளம் | தெலுங்கு
கன்னடம் | மராத்தி | பெங்காலி | ஆங்கிலம்
திரைப்படங்கள்
நிகழ்ச்சிகள்
CRICKET
BADMINTON
KABADDI
நாடகங்கள்
விளையாட்டு
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
Your Lyca package now includes Hotstar subscription worth $12.99/ month.
T&C's apply.
SUBSCRIBE NOW
SALES
647 968 1087
CUSTOMER SERVICE
6479311745
www.lycatv.tv

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** | **Purchase** | **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*








**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
**416.997.3862**
np_57@hotmail.com

*Some conditions apply

MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca

